
# அறிஞர் அண்ணா

## அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்

Golden Jubilee Year 1968-2018

பொன்விழா
ஆண்டு
மலர்
1968 2018



# VISION

*To Provide Value based Quality Education of Global Standard and to Enable Wholesome Development of the Students.*

# MISSION

*Our College provides knowledge to a large number of first Generation learners from diverse backgrounds. It strives to make the students Responsible citizens by acquiring the best knowledge through higher education and practical based learning skills. In order to partake with the ever evolving world of science and technology and aesthetics, we impart dialogic and participatory education to the students with the help of class room lectures and modern curriculum. Our College enables the students to secure the position of unprejudiced competitive individuals and evolve them to serve the society diligently.*

# பொருளடக்கம்





- வாழ்த்து மடல்கள் ............ 7
- மேனாள் முதல்வர்கள் பட்டியல் ............ 19
- ஆண்டறிக்கை 2017-2018 ............ 20
- கல்லூரியின் வரலாறு ............ 31
- கல்லூரியின் சிறப்பம்சம் ............ 35
- துறை வாரியாக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ............ 36
- பொன்விழா ஆண்டு (2017-18) நிகழ்வுகள் ............ 52
- இன்றியமையாத சேவைகள் மற்றும் துறைவாரியான சங்கங்கள் 144
- பொன்விழாப் படைப்புகள் ............ 202
- பூமிபூசை (மாணவியர் ஓய்வு அறை)............ 221
- முத்தமிழ் விழா ............ 222
- பொன்விழாத் தருணங்கள் ............ 225
- பொன்விழா ஆண்டில் ஓய்வு பெறுபவர்கள் ............ 231
- பொன்விழாவிற்காக நன்கொடை நல்கிய நல் உள்ளங்கள் ......... 232
- விளம்பரங்கள் ............ 233

# பதிப்புரை

1968-69 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி 2017-2018 ஆம் ஆண்டில் தனது 50 ஆண்டு காலக் கல்விப்பணியை, முடிக்கவிருக்கிறது.

கல்லூரியின் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் விருப்பத்தின் அடிப்படையில், கல்லூரி ஆட்சிக் குழுவின் ஆலோசனையின்படி கல்லூரி முதல்வரால் பொன்விழாக் குழுக்கள் அமைக்கப்பட்டன. வழிகாட்டும் குழுவும் நியமிக்கப்பட்டது.

கருத்தரங்கம், பயிற்சிப்பட்டறை, பொன்விழா மினி மராத்தான் ஓட்டம், ஊர்வலம், விளையாட்டுவிழா, கலைவிழாக் கண்காட்சிகள், துறைவாரியான முன்னாள் மாணவர்களின் கூட்டங்கள் மற்றும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு எனப் பல்வேறு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு மிகச்சிறப்பாக நடந்தேறின. அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல பொன்விழா மலர் வெளியிடுவது என முடிவெடுக்கப்பட்டது. கல்லூரி முதல்வரின் தலைமையில் பதிப்புக்குழு அமைக்கப்பட்டு பொன்விழா மலர் தயாரிப்புப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட்டன.

கல்லூரியின் 50 ஆண்டுகால வரலாறு, கல்லூரியின் முன்னாள் முதல்வர்களின் விவரங்கள், துறைவாரியான விவரங்கள், நிகழ்வுகள் மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அத்துணை நல் உள்ளங்களையும் பதிவு செய்து பாராட்ட வேண்டும் என்ற தாளாத வேட்கையின் அடிப்படையில் பதிப்புக்குழு தனது பணியைத் தொடங்கியது. ஆனால், ஆவணங்களைத் திரட்டுவதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு பதிப்புக் குழுவின் கனவுகள் சுருக்கப்பட்டன.

இருந்தபோதிலும்கூட தமிழக அரசு, முன்னாள் இந்நாள் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் உதவியினால்தான் இந்த மாபெரும் விழாவினைச் சிறப்பாக நடத்தி முடித்து, மலரையும் வெளியிட முடிந்துள்ளது.

இந்தப் பொன்விழா மலருக்காக வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் படைப்புகளை அளித்தவர்களுக்கும் விளம்பரம் வாயிலாக நன்கொடை அளித்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

இம்மலரினை உருவாக்கப் பாடுபட்ட அத்துணை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். கையில் கிடைத்த ஆவணங்களையும், நேர்காணல்களையும் அடிப்படையாகக் கொண்டு கல்லூரியின் வரலாற்றைத் தயாரித்த குழுவினருக்கும், எங்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய வழிகாட்டும் குழுவினருக்கும் எங்களது உளம் கனிந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

நாங்கள் தயாரித்து அளித்த விவரங்கள் மற்றும் படைப்புகளுக்குத் தகுந்தாற்போல் படங்களைத் தேர்ந்தெடுத்தும் அச்சிட்டும் வழங்கிய ஆல்பா அச்சகம், திருச்செங்கோடு நிறுவனத்தாருக்கும், அவர்களது ஊழியர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

எங்களோடு கொண்ட கருத்தியல் உறவுகள் உங்களோடு எப்போதும் தொடரும் என்று எதிர்பார்ப்புகளுடன் தற்காலிகமாக விடைபெறுகிறோம் நன்றி! வணக்கம்!

பதிப்புக்குழு



சிந்தையில் தூய்மை

சொல்லில் இனிமை

செயலில் நேர்மை

கொண்ட

எம் கல்லூரி முதல்வர்

**முனைவர் அ. லீலா குளோரி பாய்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.



# பதிப்புக்குழு...

## தலைவர்

- முனைவர் **அ. லீலா குளோரி பாய்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.
  முதல்வர்

## பதிப்புக்குழு உறுப்பினர்கள்

- முனைவர் **ம. மாதவன்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
  உதவிப் பேராசிரியர், பொருளியல் துறை

- முனைவர் **மு. நடராசன்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
  உதவிப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்

- முனைவர் **கு. இராமச்சந்திரன்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
  உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

- முனைவர் **ம. சந்திரசேகரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.
  உதவிப் பேராசிரியர், தாவரவியல் துறை

- முனைவர் **கு. ருத்ரவேல் மூர்த்தி**, எம்.எஸ்சி., எம்.டெக்., பிஎச்.டி.
  கௌரவ விரிவுரையாளர், புவியியல் துறை

- முனைவர் **சு. செந்தில்குமார்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.
  கௌரவ விரிவுரையாளர், புவியியல் துறை

- முனைவர் **சா. செந்தில்நாதன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.
  கௌரவ விரிவுரையாளர், விலங்கியல் துறை



# திரு. பி. தங்கமணி

மின்சாரத்துறை அமைச்சர்

வாழ்த்துரை

திரு. **பி. தங்கமணி,**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

நாள் : 09.03.2018

நாமக்கல் மாவட்டத்தில், அறிஞர் அண்ணா பெயர் தாங்கிய அரசு கலைக்கல்லூரியானது, 1968–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவு பெற்று, பொன்விழா ஆண்டு கொண்டாடப்படுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியின் 50 ஆண்டு கால வரலாற்றில், இப்பகுதியில் உள்ள ஏழை, எளிய மாணவர்களுக்கு ஒரு கல்விக் கோவிலாகத் திகழ்ந்து வருகிறது என்றால் அது மிகையாகாது. இக்கல்லூரியில் பயின்றவர்களில் பலர் பல்வேறு துறைகளில் உன்னத நிலைக்குச் சென்றுள்ளதே இதற்குச் சான்றாக விளங்குகிறது.

**ஓராண்டை நீங்கள் சிந்தித்தால் நெல் நடுங்கள்**
**பத்தாண்டை நீங்கள் சிந்தித்தால் மரங்களை நடுங்கள்**
**நூறாண்டுகளை நீங்கள் சிந்திப்பீர்களானால்**
**மக்களுக்குக் கல்வி கற்பியுங்கள்**

என்ற சீனப் பழமொழிக்கு ஏற்றார்போல்,

இக்கல்லூரியானது, மாணவர்களின் கல்வியில் முக்கியப் பங்காற்றி, பொன்விழாக் காணும் இவ்வாண்டில் கல்லூரியின் முதல்வர் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர் பெருமக்களையும், ஊழியர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியான, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களின் தலைமையிலான அரசின் நல்லாசிகளோடு, எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

11/3/18

(பி. தங்கமணி)



# திரு. கே.பி. அன்பழகன்

உயர்கல்வித்துறை அமைச்சர்

## வாழ்த்துச் செய்தி


திரு. **கே.பி. அன்பழகன்,**
உயர்கல்வித்துறை அமைச்சர்,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.


நாள் : 17.03.2018

அன்புடையீர் வணக்கம்,

அகில இந்திய அளவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்குவதையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அரிய பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வமாகிய கல்விச்செல்வத்தைப் பெருமையோடு வழங்குவதிலும், ஏழை எளிய கிராமப்புற மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்குவதிலும் தங்களை முழுமனதுடன் ஈடுபடுத்திக் கல்வி வழங்குவதில் அமுதசுரபியாக விளங்கும் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி பொன்விழாக் காணுவதில் அகம் மகிழ்கிறேன்.

இப்பொன்விழா நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெறவும், விழாவின் நோக்கம் வெற்றி பெறவும், விழாமலர் சிறக்கவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

K.P. Anbalagan 17/3/18

(கே.பி. அன்பழகன்)



# டாக்டர். வி. சரோஜா

சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத்துறை
அமைச்சர்

வாழ்த்துச் செய்தி


டாக்டர். **வி. சரோஜா,**
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர்,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.


நாள் : 11.03.2018

அன்புடையீர்,

தமிழ்நாட்டின் கல்வி நகரமாகத் திகழும் நாமக்கல்லில் இயங்கிவரும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, 50–வது ஆண்டு பொன்விழாவைக் கொண்டாட உள்ளதை அறிந்து அகமகிழ்கிறேன். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. அவரது கனவை நிறைவேற்றி, ஏழை எளிய மாணவர்களின் கல்விக் கண் திறக்கும் கோயிலாக விளங்கும் இக்கல்லூரியைப் போற்றுகிறேன். இக்கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் நல்ல நிலைக்கு உயர்ந்திருப்பதே இதற்குச் சான்றாகும்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணிய ராகப் பெறின்.**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இக்கல்லூரி செயல்பட்டு வருகின்றது. வகுப்பறைப் பாடத்தோடு வாழ்வியல் பாடங்களையும் கற்றுத் தருவது இக்கல்லூரியின் சிறப்பாகும்.

கல்வியிலும், அறிவு சார்ந்த மற்றும் திறன் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளிலும் இக்கல்லூரி மாணவர்கள் வெற்றிகள் பல குவித்து, தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காக இக்கல்லூரியின் முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானதாகும்.

அரை நூற்றாண்டைக் கடந்து, நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைக்கும் பெருமைமிகு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, வரும் சமுதாயத்திற்கு ஒரு வானமாகத் திகழ்கிறது. அவ்வானில் மிளிரும் விண்மீன்களாகிய மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்துகிறேன்.

இக்கல்லூரி, எதிர்வரும் காலங்களில், மிகச் சிறந்த மாணவச் செல்வங்களை உருவாக்கிடவும், சிகரத்தைத் தொடும் வகையில் பல விழாக்களைக் காணவும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியுடன், நல்லாட்சி புரியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழி நின்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அன்புடன்,

(வி. சரோஜா)



# திரு. பி.ஆர். சுந்தரம்

நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர்

## வாழ்த்துச் செய்தி


திரு. **பி.ஆர். சுந்தரம்,**
பாராளுமன்ற உறுப்பினர் (மக்களவை)
நாமக்கல் பாராளுமன்ற தொகுதி, தமிழ்நாடு.


நாள் : 11.03.2018

ஆயிரம் அன்னச் சத்திரங்கள் அமைத்து உணவு இடுவதைவிட ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவன் எனப் போற்றப்படுவான் என்னும் தொடருக்கு ஏற்ப வானம் பார்த்த பூமியான நாமக்கல்லில் 1968–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியை வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கிறேன். இல்லாதோரை இருப்போராக்கி இல்லாமை என்பதே இல்லை என்னும் நிலையை உருவாக்குவது கல்வியாகும்.

கொடுக்கக் கொடுக்கக் குறையாததும், உண்ண உண்ணத் திகட்டாததும் அறிவுச் செல்வமாகும். தேடிவரும் தேனீக் கூட்டங்களுக்கு மகரந்தங்களை அள்ளித்தரும் மலர்க்கூட்டங்களைப்போல கல்வித்தேன் பருக வரும் மாணவர் கூட்டங்களுக்கு மலர்க் கூட்டங்களாய் இருந்து அழிவிலாச் செல்வம் கல்வியை அள்ளி அள்ளிக் கொடுக்கும் ஆசிரியப் பெருமக்களை என் மனதார வாழ்த்துகிறேன்.

கருவறையில் தொடங்குவது வாழ்க்கை எனில் வகுப்பறையில் தொடங்குவது நாட்டின் எதிர்காலம். இன்றைய மாணவர்களை நாளைய இந்தியா அறிவிலும், ஆற்றலிலும் உயர்ந்து நல் தலைவர்களாய், நல் அதிகாரிகளாய், பண்பட்ட மனிதர்களாய் அவர்களை வலம் வரச் செய்யும் இக்கல்லூரி மென்மேலும் வளர வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்,

(பி.ஆர். சுந்தரம்)



# திரு. கே.பி.பி. பாஸ்கர்

நாமக்கல்
சட்டமன்ற உறுப்பினர்

வாழ்த்துரை

திரு. **கே.பி.பி. பாஸ்கர்,**
நாமக்கல் சட்டமன்றத் தொகுதி,
நாமக்கல் மாவட்டம்.

நாள் : 11.03.2018

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல் பகுதியில் பழமையான கல்லூரி. 1968-இல் இருந்து இப்பகுதி மாணவர்களின் உயர் கல்வியை உயர்த்திய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இந்தக் கல்லூரி இல்லை என்றால் பலருக்கு உயர்கல்வி இல்லாமல் போயிருக்கும். ஐம்பது ஆண்டுகளாகப் பலருக்கு உயர்கல்வி கொடுத்த கல்லூரி இப்போது பொன்விழாக் கொண்டாடுகிறது. இதை நினைக்கும்போது பெருமையாக உள்ளது.

இக்கல்லூரி இப்பகுதி மாணவர்கள் மட்டுமல்லாமல் தருமபுரி, கிருஷ்ணகிரி முதலான மாவட்ட ஏழை, எளிய மாணவர்களும் இங்கு அதிகம் படித்தவர்கள் உயர்ந்துள்ளனர். இப்போதும் இக்கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அனைவருக்கும் பொதுவான பழமைமிக்க இந்த உயர்கல்விச் சாலைக்கு பொன்விழா ஏற்பாட்டைச் செய்து சிறப்பாக நடத்தும் இக்கல்லூரியின் முதல்வர் அவர்களையும், பேராசிரியப் பெருமக்களையும் மற்றும் ஊழியர்களையும் நன்றி பாராட்டி வாழ்த்துகிறேன்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப இக்கல்லூரி பலநூறு ஆண்டுகள் இருந்து இப்பகுதி மாணவர்களின் உயர்கல்வி தாகத்தைப் போக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

கே.பி.பி. பாஸ்கர், MLA.,
உறுப்பினர், நாமக்கல் சட்டமன்ற தொகுதி,
உறுப்பினர், சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு
நாமக்கல் மாவட்டம்.

வாழ்த்துச் செய்தி



# திருமதி மு. ஆசியா மரியம்

நாமக்கல்
மாவட்ட ஆட்சித் தலைவர்

**திருமதி மு. ஆசியா மரியம், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாமக்கல்.

நாள் : 19.03.2018

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் பொன்விழா ஆண்டு நிறைவு விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். பாரம்பரியமான இந்த அரசு கலைக்கல்லூரி நாமக்கல் மாவட்டம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களைச் சார்ந்த ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில ஆற்றி வரும் கல்விப் பணி போற்றுதலுக்கு உரியதாகும். பொன்விழாக் காணும் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் கல்விச் சேவை மென்மேலும் தொடரவும், சிறந்த மாணவர்களை உருவாக்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

19/3/18

மாவட்ட ஆட்சித்தலைவர்
நாமக்கல்.



# திருமதி ஜெ. மஞ்சுளா

கல்லூரி கல்வி இயக்குநர்

வாழ்த்துச் செய்தி

முனைவர் திருமதி **ஜெ. மஞ்சுளா,**
எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பிஎச்.டி., பி.எட்.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை.

நாள் : 16.03.2018

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி 50–ஆம் ஆண்டு பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் மன மகிழ்ச்சியும், பேருவகையும் கொள்கிறேன்.

**கல்வி கரையில கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல**

என்ற நாலடியார் கூற்றிற்கேற்ப கற்ற கல்வியால் அன்னப்பறவை போல நல்லதெது, தீயதெது என ஆராய்ந்தறிந்தும் ஐம்பதாண்டுக் காலமாக மாணவர்களுக்குச் சிறப்பான கல்வியினை வழங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரியை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

ஐம்பதாண்டு நிறைவு செய்து பொன்விழாக் கொண்டாடும் இக்கல்லூரி, மூன்று இளநிலை பட்டப்படிப்புகளுடன் தொடங்கப்பட்டது. இன்று பதின்மூன்று இளநிலை பட்டப்படிப்புகளும், ஒன்பது முதுநிலை பட்டமேற்படிப்புகளும், ஏழு துறைகளில் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகளும், ஆறு துறைகளில் முனைவர் பட்டப்படிப்புகளுமாகப் பரந்து விரிந்து ஆலமரமாக நிலைத்து நிற்பதை எண்ணி இப்பொன்விழா ஆண்டில் மனதார வாழ்த்துகின்றேன்.

இக்கல்லூரியில் பயின்ற பல மாணவர்கள், கல்வியாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், ஆட்சியர்கள், அலுவலர்கள், தலைவர்கள், தொழிலதிபர்கள் எனப் பலதரப்பட்டவரை உருவாக்கிய இக்கல்லூரி, அதன் சேவையை மேன்மேலும் தொடர என் சார்பாகவும், என் துறை சார்பாகவும் வாழ்த்துக்கள் கூற விழைகின்றேன்.

கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணாக்கர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்து இப்பொன்விழா ஆண்டினைக் கொண்டாடுவதில் உங்களோடு சேர்ந்து நானும் மகிழ்கின்றேன். வாழ்த்துக்கள்.

அன்புடன்,

ஜெ.மஞ்சுளா 16/3/18

கல்லூரிக் கல்வி இயக்குநர்



# முனைவர் கு. நடராசன்

தருமபுரி
மண்டல கல்லூரிக் கல்வி
இணை இயக்குநர்

## வாழ்த்துரை

முனைவர் **கு. நடராசன்,** எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம்,
தருமபுரி - 636 705.

நாள் : 19.03.2018

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி கடந்த ஐம்பது ஆண்டுகளாக வறுமைக்கோட்டின் விளிம்பில் நின்று விடியலை நோக்கி விழிப்போடு காத்திருக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு வாழ்வாதாரத்தினைப் பெறுவதற்கு வாழ்க்கைக் கல்வியைக் கற்றுத் தரும் அரும்பணியை ஆற்றி வருவது கண்டு மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

இக்கல்லூரியில் 2009 முதல் ஐந்தாண்டு காலம் வேதியியல் இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராகப் பணியாற்றிய காலத்தினை நினைவு கூர்ந்து மகிழ்ச்சியினைப் பகிர்ந்துகொள்கிறேன்.

பொன்விழாக் காணும் இக்கல்லூரியின் பணி மேலும் சிறப்படையவும், இக்கல்லூரி வெளியிடும் பொன்விழா மலர் மாண்புடன் வெளிவரவும் எனது இதயமார்ந்த நல்வாழ்த்துக்களை இவ்வாழ்த்துச் செய்தி மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்நிலைக் கல்லூரியாய்த் தரம் உயர்ந்து நூற்றாண்டு காணும் வரை செயல்பாட்டால் உயர்ந்துகொண்டே போகவேண்டும் என்று இத்தருணத்தில் நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

(கு. நடராசன்)



# முனைவர் பொ. குழந்தைவேல்

துணைவேந்தர்
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

## வாழ்த்துரை

பேராசிரியர். முனைவர் **பொ. குழந்தைவேல்,**
துணைவேந்தர்,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம்.

நாள் : 19.03.2018

மாணாக்கர்களைக் கல்வியில் மேம்படச் செய்ய ஏதுவாக நாமக்கல் மோகனூர் சாலையில் லத்துவாடியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியானது 1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவதுடன் அக்கல்லூரியின் பொன்விழா ஆண்டு நிறைவு விழாவானது எதிர்வரும் 24.03.2018 அன்று நடைபெறுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், பொன்விழா ஆண்டு மலரை வெளியிடும் அக்கல்லூரியின் முயற்சி பாராட்டுக்குரியதாகும். தங்கள் படைப்புகளைப் பொன்விழா ஆண்டு மலரில் வெளியிடும் மாணவர்களுக்கும் அதனைப் பதிப்பிக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,

பொ. குழந்தைவேல்.

(பொ. குழந்தைவேல்)



# திரு. அர. அருளரசு

நாமக்கல்
காவல் கண்காணிப்பாளர்

மண்மணக்கும் கவின் கல்லூரிக்குப்
பொன்விழா வாழ்த்து

திரு. **அர. அருளரசு,** பி.இ., எம்.பி.ஏ.,
காவல் கண்காணிப்பாளர்,
நாமக்கல் மாவட்டம்.

நாள் : 18.03.2018

"யுகம் தேய்ந்து போனாலும் பெயர் நிற்குமென்றால்
ஒருவர்க்கே அண்ணாவென் றுரை நாற்ப தென்ப"

எனக் காலத்தை வென்ற கவியரசு கண்ணதாசன் புகழ்ந்திட்ட, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட அறிஞர் அண்ணாவின் பெயர் தாங்கிய நாமக்கல் "அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி" – க்கு அகவை ஐம்பது.

இந்த ஆலமரத்தில் தங்கிப்பயின்று பறந்த பறவைகள் ஏராளம். விழுதாய்த் தாங்கும் ஆசிரியர்கள் – விண் உச்சியை எட்டிப்பிடி என மாணவப் பறவைகளைப் பறக்கவிட்டனர். இக்கல்லூரி கற்றனைத்தூறும் அறிவுக் கேணியாய், கேடில் விழுச்செல்வத்தை – நுண்மான் நுழைபுலம் நிறைந்த ஆசிரியரின் துணையோடு அள்ளி வழங்கும் ஆலயம்.

**பொன்விழா ஆண்டில் புகழ் மணக்கும்**
**கல்லூரியின் பணி தொடரும்...**
**நூறாண்டு கடக்கும் - நாநிலம் போற்றும்**
**நம் நெஞ்சமெல்லாம் வாழ்த்தும்!**

நட்புடன்

16/3/18

(அர. அருளரசு)



# திரு. சிலம்பொலி சு. செல்லப்பன்

நாமக்கல்
தமிழ் வளர்ச்சித்துறை
முன்னாள் இயக்குநர்

## வாழ்த்துச் செய்தி

திரு. சிலம்பொலி **சு. செல்லப்பன்,**
தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநர்,
தலைவர், தமிழகப் புலவர் குழு.

நாள் : 19.03.2018

தமிழ்நாட்டிற்குப் பெரும் பெருமை தேடித்தந்து கொண்டிருக்கின்ற நகரங்களுள் நாமக்கல் நகரம் முன்னணியில் உள்ளது. நாமக்கல் நகருக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளவை அங்குள்ள அரசு ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், அரசு பெண்கள் கலை மற்றம் அறிவியல் கல்லூரியும் ஆகும்.

1968 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஆண்கள் கலை மற்றம் அறிவியல் கல்லூரி இவ்வாண்டு பொன்விழாக் கொண்டாடுகின்றது என்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் அரசு அமைந்தபோது, பாவலர் முத்துசாமி அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராக அமர்த்தப்பட்டார்.

அவரிடம் முதல் பணியாக நாமக்கல் நகருக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்று சொன்னேன். அன்றே அதற்கான கல்லூரி அமைப்புக் குழுவை உருவாக்கினார். நாமக்கல் நகரைச் சேர்ந்த அனைத்துக் கட்சிப் பிரமுகர்களையும், செல்வந்தர்களையும் கொண்ட குழு ஒன்று நாமக்கல் என்.பி.எஸ். பேருந்து உரிமையாளர் திரு. சுந்தர்ராஜ் ரெட்டியார் தலைமையில் அமைக்கப்பட்டு, குறுகிய கால அளவிலேயே இரண்டு கல்லூரிகள் தொடங்குவதற்கான நிதி போதிய அளவு சேர்க்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் பாவலரும் நானும் சென்று இரண்டு கல்லூரிகளை, ஆண்களுக்கொன்று, பெண்களுக்கொன்று எனத் திறக்க அனுமதி கேட்டோம். அண்ணா "என்ன முத்துசாமி, ஒரு கல்லூரி கிடைப்பதே அரிது. நீ இரண்டு கல்லூரிகள் கேட்கிறாயே" என்றார். பாவலர் "அரசுக்குச் செலுத்த இரண்டு கல்லூரிகளுக்கான நிதி திரட்டப்பட்டுவிட்டது. மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள். எனவே இரண்டு கல்லூரிகளுக்கும் அனுமதி வேண்டும்" என்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். அண்ணா அவர்கள் "வரும் கல்வியாண்டில் ஆண்கள் கல்லூரி தொடங்குகள். அடுத்த ஆண்டில் பெண்கள் கல்லூரி தவறாது தந்துவிடுகிறேன்" என்று உறுதி தந்தார்.

இவ்வாறு 1968 ஆம் ஆண்டுத் துவக்கப்பட்ட நாமக்கல் அரசு ஆண்கள் கலை மற்றம் அறிவியல் கல்லூரி, பொன்விழா காண்பது எனக்குப் பேருவகையளிக்கிறது. மிகச் சிறப்பாகச் செயல்படும் கல்லூரிக்கும், அதன் திறமைமிகு முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர்க்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் உரித்தாக்குகின்றேன்.

அன்புடன்,

(Sd/-) (சு. செல்லப்பன்)



# முனைவர் அ. லீலா குளோரி பாய்

முதல்வர்
அ.அ.அ.கலைக்கல்லூரி
நாமக்கல்

வாழ்த்துச் செய்தி

முனைவர் **அ. லீலா குளோரி பாய்,**
முதல்வர்,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
நாமக்கல்.

நாள் : 19.03.2018

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா என்ற பாரதியின் வரிகளை வணங்கி, மாணாக்கர்கள் கல்வியில் ஆண்டுகள் ஐம்பதைக் கடந்து பொன்விழாக் கண்டு உயர்ந்து நிற்கும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியை வாழ்த்துவதில் அகமகிழ்வு கொள்கிறேன். ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி கல்விக்கோயிலாகத் திகழ்ந்து பீடுநடைபோடும் இக்கல்லூரி வானளாவிய சாதனைகளைப் படைத்து பெரும்புகழ் பெற்றுத் திகழ்கின்றது. அரைநூற்றாண்டைக் கடந்து கல்விப்பணியில் சிறந்த விளங்குகிறது.

பல வைரங்களைத் தனது மகுடத்தில் பதித்து, சமூகத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணாக்கர்களுக்கு உயர்கல்வி கற்க, வழிகாட்டியாய்த் திகழ்ந்து வருவதில் பெரும் பங்கு வகித்து வருகிறது. வழி தெரியாது வரும் மாணவர்களுக்குக் கலங்கரை விளக்காகவும், அவர்களைப் பட்டைதீட்டி, ஒளிரச் செய்யும் கல்லூரிப் பேராசிரியர்களையும், அலுவலகப் பணிகளில் என்னோடு தோள் நின்று, கல்லூரி வளர்ச்சியில் பங்குபெறும் ஆசிரியர்களையும் அலுவல் சார்ந்த பணியாளர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கிறேன். பல்கலைக்கழகத் தரவரிசையிலும், தங்கப் பதக்கங்களை வெல்வதிலும் மாணவர்களின் ஆற்றல் அளப்பரியது. மாணவர்கள் மென்மேலும் பல வெற்றிகளைக் குவித்து வாழ்வில் முன்னேற மனதார வாழ்த்துகிறேன்.

கல்வி, ஒழுக்கம், பண்பாடு, கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டு, திறன்சார் போட்டிகள், நுண்கலை மன்றம், நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சுருள் சங்கம், குடிமக்கள் நுகர்வோர் மன்றம், மாணாக்கர் மேம்பாட்டுப் பயிற்சி, வேலைவாய்ப்பு வழிகாட்டி முகாம் போன்ற சமூகம் சார்ந்த நிகழ்வுகள், துறை சார்ந்த கருத்தரங்குகள், பல்துறைகளில் மாணவர்களின் ஆற்றல்கள் போன்றவற்றை வெளிப்படுத்தி, பல்துறை ஆற்றல்சார் கல்லூரியாகத் திகழ்ந்து, செம்மாந்த தன்மையுடன் ஐம்பதாவது ஆண்டில் தடம் பதித்து வரும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிக்கு என் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(அ. லீலா குளோரி பாய்)

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஏ. இராமமூர்த்தி | - | (ஜுன் 1968 - ஜுன் 1971) |
| 2. | திரு. யு. ஜமால் முகமது | - | (ஜுன் 1971 - ஜுன் 1973) |
| 3. | திரு. ஏ. கிருஷ்ணமூர்த்தி | - | (ஜுலை 1973 - செப் 1974) |
| 4. | திரு. எம். கிருஷ்ணமூர்த்தி | - | (மார்ச் 1975 - நவ. 1975) |
| 5. | முனைவர் வி. கிருஷ்ணமூர்த்தி | - | (நவ. 1975 - பிப். 1978) |
| 6. | திரு. பு.சி. கந்தசாமி | - | (நவ. 1979 - ஜுலை 1981) |
| 7. | திரு. க.ந. சுப்பிரமணியன் | - | (ஜுலை 1981 - நவ. 1981) |
| 8. | திரு. அ. வி. சீனிவாசன் | - | (மார்ச் 1982 - ஏப். 1985) |
| 9. | திரு. நா. காசிநாதன் | - | (ஏப். 1985 - ஆக. 1985) |
| 10. | திரு. வி. கே. இராசமாணிக்கம் | - | (பிப். 1986 - மே 1988) |
| 11. | திரு. சோ. செல்வராஜ் | - | (ஜுன் 1988 - மே 1993) |
| 12. | திரு. கே. குணசேகரன் | - | (செப். 1993 - மே 1996) |
| 13. | முனைவர் கோ. கோபால் | - | (ஜுலை 1996 - ஜுன் 1998) |
| 14. | திரு. கு. கந்தசாமி | - | (ஜுன் 1998 - ஜுலை 1999) |
| 15. | திரு. அ. ஆஸப் அலி | - | (ஜுலை 1999 - ஜுன் 2000) |
| 16. | திரு. கு. கை. பொன்னுசாமி | - | (ஜுன் 2000 - ஆக. 2001) |
| 17. | திரு. ச. கோவிந்தராஜ் | - | (செப். 2001 - ஜுன் 2002) |
| 18. | திரு. ஊ. சிவசாமி | - | (ஜுன் 2002 - மே 2003) |
| 19. | திரு. எ. முத்தரசு | - | (நவ. 2003 - ஜுன் 2004) |
| 20. | திரு. கோ. சிவராமகிருஷ்ணன் | - | (ஜுன் 2004 - மே 2006) |
| 21. | திரு. இரா. சென்னியப்பன் | - | (ஜுலை 2006- மே 2007) |
| 22. | திரு. தா. ருத்ரப்பன் | - | (ஜுன் 2007 - ஆக. 2007) |
| 23. | திரு. இரா. ஜம்புநாதன் | - | (செப். 2007 - ஜுலை 2008) |
| 24. | திரு. பொ. இரத்தினசபாபதி | - | (அக். 2008 - மே 2009) |
| 25. | திரு. செ. சின்னுசாமி | - | (மே 2009 - மே 2009) |
| 26. | திரு. பெ. மோகனசுந்தரம் | - | (ஜுன் 2009 - மே 2010) |
| 27. | திரு. ஆர். கோவிந்தசாமி (பொறுப்பு) | - | (ஜுன் 2010 - மே 2011) |
| 28. | முனைவர் ப. கணேசன் | - | (ஜுன் 2011 - பிப். 2012) |
| 29. | முனைவர் சா. சதாசிவம் | - | (ஜுன் 2012 - ஆக. 2012) |
| 30. | முனைவர் கோ. ஜெகதீசன் | - | (அக். 2012 - ஜுலை 2013) |
| 31. | முனைவர் த. விஸ்வலிங்கம் | - | (ஜுலை 2013 - ஜுலை 2014) |
| 32. | முனைவர் சீ. மங்கையர்க்கரசி | - | (ஜுலை 2014 - ஆக. 2014) |
| 33. | முனைவர் வெ. இராதா | - | (செப். 2014 - அக். 2015) |
| 34. | முனைவர் கு. நடராசன் | - | (டிச. 2015 - ஜுலை 2016) |
| 35. | முனைவர் அ. லீலா குளோரி பாய் | - | (அக். 2016 - மே 2018) |

முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர்,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல் - 637 002.

ஆண்டறிக்கை
2017 - 2018, நாள் 24.03.2018

**அனைவருக்கும் வணக்கம்**

நமது அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் முதல்வராகிய நான் 2017 - 2018 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி - ஒருவருக்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (கல்வி -398)

ஒருவன் ஒருமுறை கல்வி கற்றால் அக்கல்வியானது அவனது ஏழு பிறவிக்கும் பயன்படும் என்பது தமிழ்ப்புலவர் வள்ளுவரின் வாக்கு. அத்தகு சிறப்புமிக்க கல்விச் செல்வத்தை நாமக்கல் மாவட்டத்தில் விதைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அப்போதைய உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அ. மா. முத்துச்சாமி அவர்களால் 1968 - 69ஆம் கல்வியாண்டில் புதுமுக வகுப்புடன் தொடங்கப்பட்டதுதான் நமது அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி.

நாமக்கல் மாவட்டப் பொதுமக்கள், அமைச்சர்கள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் ஆகியோரது தொடர் முயற்சியால் இன்று 13 இளநிலை மற்றும் 9 முதுநிலையில் 1660 மாணவ, மாணவிகளும், M.Phil., Ph.D., பாடங்களில் 111 மாணவ, மாணவியர்களும், ஆக மொத்தம் 1771 மாணவ, மாணவிகள் பயில்கிறார்கள். 85 நிரந்தரப் பேராசிரியர்களும், 28 கௌரவ விரிவுரையாளர்களும் மற்றும் 26 அலுவலகப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். நமது கல்லூரியானது தேசிய தரச்சான்று நிறுவனத்தின் (NAAC) மூலம் முறையாகத் தர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு B கிரேடு பெறப்பட்டுள்ளது. நமது கல்லூரியில் 46 (CCTV) கேமராக்கள் வளாகம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

**உதவித்தொகை**

இக்கல்வியாண்டில் தமிழக அரசின் மூலம் மாணவ மாணவியர்க்குத் தமிழ் ஊக்கத்தொகை மொத்தம் ரூ. 1,71,600/-, கல்வி உதவித் தொகையாக பி.சி., எம்.பி.சி. வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு மொத்தம் ரூ. 10,18,484/-. இதேபோல் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் மின்னணு பணப்பரிமாற்றம் (ECS) மூலம் வழங்கப்பட உள்ளது.

**கல்லூரியின் பொதுவான நிகழ்வுகள்**

சுதந்திர தினமான 15.08.2017 அன்று முதல்வர் அ. லீலா குளோரி பாய், கொடி ஏற்றிச் சிறப்புரையாற்றினார். நல்லிணக்க நாளான 20.08.2017 அன்று முதல்வர் முன்னிலையில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்தியா பல்வேறு சமய நம்பிக்கைகள் கொண்ட மக்கள் வாழும் நாடு. இந்திய மக்கள் பிற சமய மக்களின் நம்பிக்கைகளை மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ உறுதிமொழி மேற்கொண்டனர்.

அக்டோபர் 09 முதல் 13 வரை (2017) கல்லூரியில் பயிலும் மூன்றாமாணடு இளநிலை மாணவர்களுக்கு நாமக்கல் மனவளக் கலை மன்றம் மூலமாக இலவச யோகா வகுப்புகள் நடத்தப்பட்டன.

பொன்விழா ஆண்டின் தொடக்க நிகழ்வாக 10.10.2017 அன்று நாமக்கல் நகராட்சி மன்றத்தில் இருந்து தொடங்கி நமது கல்லூரி வரையிலான மினி மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. அதில் இந்நாள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பெருவாரியாக கலந்து கொண்டனர்.

தேசிய வாக்காளர்கள் தினமான 25.01.2018 அன்று கல்லூரி முதல்வர் முன்னிலையில் பேராசிரியர்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் இந்திய நாட்டின் சிறந்த வாக்காளராகத் திகழ்வோம் என உறுதி எடுத்துக்கொண்டனர்.

குடியரசு தினமான 26.01.2018 அன்று முதல்வர் கொடி ஏற்றிச் சிறப்புரையாற்றினார்.

தீண்டாமை ஒழிப்பு தினமான 30.01.2018 அன்று முதல்வர், முன்னிலையில் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்திய நாட்டில் தீண்டாமையை ஒழிக்கும் விதமாக உறுதி எடுத்துக்கொண்டனர்.

பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மாணவ, மாணவியர்களுக்கு கல்லூரிகளுக்கு இடையேயான ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா மற்றும் பேச்சுப் போட்டிகள் 06.02.2018 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

2017-2018 கல்வியாண்டில், அனைத்துத் துறைகளும் இணைந்து இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் விதமாக அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

13.03.2018 அன்று முதல்வர் அவர்கள் கல்லூரி மாணவியர் நலன் கருதி தமிழ்நாடு உயர்கல்வித்துறை, கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆதரவு பெற்று தானியங்கி நாப்கின் வழங்கும் இயந்திரத்தைத் திறந்து வைத்தார்.

2017-2018ஆம் கல்வியாண்டில் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நாமக்கல் நகரில் சைக்கிள் பேரணி, நமது கல்லூரியிலிருந்து லத்துவாடி கிராமம் வரை பேரணி மற்றும் நிலவேம்பு கசாயம் வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் அனைத்து துறை, **NCC, YRC,** குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தினரால் சிறப்பாக நடத்தப்பட்டது.

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் உலக வன நாளான 21.03.2018 புதன்கிழமை அன்று நண்பகல் 12.00 மணியளவில் சுற்றுசூழல் சங்கம் **(Eco Club)** தொடங்கப்பட்டது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். முனைவர் கே.எஸ். அருள்சாமி, நிர்வாக இயக்குநர், செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல் சிறப்புரையாற்றினார்.

## தமிழ்த்துறை

தமிழ்த்துறையில், திருச்சி தேசியக்கல்லூரி, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சா. நீலகண்டன் முண்டாசு மகுடமானது என்ற தலைப்பில் 20.07.2017 அன்று சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

28.07.2017 அன்று முற்பகல் 10 மணியளவில் தமிழ்த்துறையில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகத் திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் திரு. பாரதி கிருஷ்ணகுமார் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

07.08.2017 அன்று கலையும் வாழ்க்கையும் என்ற தலைப்பில் சமூகப் போராளியும் எழுத்தாளருமான பேரா. சுப. வீரபாண்டியன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மேனாள் உடற்கல்வி இயக்குநர் திரு. S. கோவிந்தராஜ் அவர்கள் வரைந்த ஓவியங்களின் கண்காட்சியும் நடைபெற்றது.

12.09.2017 அன்று திருக்குறளும் காந்தியடிகளும் என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆசிரியர் திரு. க. கணேசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

12.09.2017 அன்று புளுவேல் (நீலத்திமிங்கலம்) விளையாட்டு விழிப்புணர்வு - என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக நாமக்கல் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் சார்பு நீதிபதியும் செயலாளருமான செல்வி S. அசின்பானு அவர்களும் திரு. T. சாதிக் அலி, Senior Asst., DLSA, Namakkal ஆகியோர் போக்ஸோ (POCSO) சட்டம் குறித்தும், மற்றும் நீலத்திமிங்கல விளையாட்டிலிருந்து விடுபடுதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

15.12.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன்விழாவையொட்டித் தமிழ்த்துறையின் சார்பாகப் பாரதி விழா நடைபெற்றது. இதில் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் பாரதி கண்ட புதுமைப்பெண் ஒரு கற்பனையே என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

11.01.2018 அன்று திருவள்ளுவர் தினம் மற்றும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

09.02.2018 அன்று தமிழ்த்துறையில் நம்பியகப் பொருள் இலக்கணத்தை எளிமையாகக் கற்பிப்பது எப்படி? என்ற தலைப்பில் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மு. நடராஜன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

28.02.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவில் சிறப்பு விருந்தினராக கும்பகோணம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் மு. காளிமுத்து அவர்கள் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

### ஆங்கிலத்துறை

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் 07.02.2018 அன்று ஆங்கிலத் துறையின் சார்பாக இலக்கிய மன்றம் (Literary Association) துவக்க விழாவில் திரு. V. ஜெயபால், ஆங்கிலத்துறைப் பேராசிரியர், புனித வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

### பொருளியல் துறை

பொருளியல் துறை மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்களால் 25.07.2017 அன்று தலைக்கவசம் மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உயர்திரு. அர. அருளரசு அவர்கள் இருசக்கர வாகனப் பேரணியைக் கல்லூரி வளாகத்திலிருந்து துவக்கி வைத்தார்.

23.08.2017 அன்று பொருளியில் துறை மற்றும் Security Exchange Board of India (SEBI) யும் இணைந்து Awareness on Financial Education - Financial Planning for Young Investors என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை நடத்தின. இதில் Dr. N. Chandrasekaran, Rtd. Prof. and All India NAAC Peer Team Member சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

29.08.2017 அன்று பொருளியல் துறை மாணவ, மாணவிகள் நாமக்கல்லில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு ஒருநாள் கல்விச் சுற்றுலா சென்றனர். சபதம் மூலம் சாதிப்போம், 2022-க்குள் விவசாய வருமானத்தை இரு மடங்காக உயர்த்துவோம் என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் பொருளியல் துறை மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயற்சிகளைப் பெற்றனர்.

30.08.2017 அன்று அணியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 12ஆம் வகுப்பு கலைப்பிரிவு மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

### வணிகவியல் துறை

வணிகவியல் துறையில் 03.02.2018 அன்று தொழிற்கல்விப் படிப்புகளில் (CA, ICWA, ACS, etc) எவ்வாறு வெற்றி பெறுவது என்ற தலைப்பில் கௌரவ விரிவுரை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ஆடிட்டர் திரு. மு.ஏ. சதீஷ்குமார் உரை நிகழ்த்தினார்.

05.02.2018 அன்று வங்கித் துறையில் வாய்ப்புகளும், சவால்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவிற்கு லத்துவாடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் திருமதி. வேலுமணி வெங்கடாசலம் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

வணிகவியல் மற்றும் வணிக நிர்வாகத் துறையைச் சேர்ந்து 09.02.2018 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் நடத்தியது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தென்மண்டலப் பயிற்சி அலுவலர் திரு. A. ஆறுமுகம் அவர்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவியருக்கு பேரிடர் காலங்களில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைச் செய்முறைப் பயிற்சி மற்றும் விளக்கங்கள் மூலம் அளித்தார்.

12.02.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தலைப்பில் டாக்டர். ஆனந்த் ராமசாமி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

17.02.2018 அன்று நாமக்கல் பொருளாதாரக் குற்றப்பிரிவுத் துறை – II மற்றும் வணிகவியல் துறை இணைந்து நடத்திய போலி நிதிநிறுவனங்களின் மோசடி பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

10.03.2018 அன்று கல்விச் சுற்றுலா – பென்ச் மார்க் தேயிலை உற்பத்தித் தொழிற்சாலை, உதகை.

### வணிக நிர்வாகத் துறை

வணிக நிர்வாகவியல் துறை சார்பாக 09.08.2017 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முனைவர் R. சுப்பிரமணிய பாரதி, வாழ்வைத் திட்டமிடுதல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

வணிக நிர்வாகத் துறையில் 11.08.2017 அன்று நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவு விழாவில் முன்னாள் மாணவர்கள் திரு. M. நல்லுசாமி, இயக்குநர், Day by Day Life Style Products, கோயமுத்தூர் மற்றும் திரு. விஜயராகவன் அவர்கள் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான சிறந்த முறைகள் என்ற தலைப்பில் மாணவர்களுக்குச் சிறப்புரையாற்றினார்கள்.

12.02.2018 அன்று வணிக நிர்வாகவியல் மற்றும் வணிகவியல் துறை மாணவ, மாணவிகளுக்கு Campus to Corporate என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

### இயற்பியல் துறை

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல், இயற்பியல் துறை சார்பில் 20.07.2017 மற்றும் 21.07.2017 ஆகிய தேதிகளில் நானோ பொருட்கள் என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சுந்தர் மனோகரன் துவக்க விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

23.01.2018 அன்று மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டிற்கு உதவும் CAREER GUIDANCE FOR PHYSICS STUDENTS & GROWING TRENDS IN MEDICAL PHYSICS என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முனைவர் N. நந்தகுமார், M.Sc., M.Phil., Ph.D. (Medical Robotics) அவர்கள் திறம்பட கருத்துக்களைக் கூறினார்.

12.02.2018 அன்று மோகனூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அணியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான மேற்படிப்பு வழிகாட்டுதல் குறித்த விவரங்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் பற்றிச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

பிப்ரவரி மாதம் 28ம் நாள் தேசிய அறிவியல் தினம் இயற்பியல் துறை சார்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலச் செயலர் திரு. எம். தியாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

### வேதியியல் துறை

மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் விதமாக வேதியியல் துறையின் சார்பாக நிறமாலையியல் அடிப்படைக் கொள்கை மற்றும் பயன்பாடுகள் என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் 13.10.2017 அன்று நடைபெற்றது.

03.01.2018 அன்று கல்லூரிகளுக்கிடையே வினாடி வினா, வேதியியல் துறை மாணவர்களுக்கு நடத்தப்பட்டது.

கல்லூரியின் பொன்விழா நிகழ்வையொட்டி வேதியியல் துறை சார்பாக மாநில அளவிலான கருத்தரங்கம் **Recent Trends in Chemical Research and Nanoscience** என்ற தலைப்பில் 05.01.2018 அன்று நடத்தப்பட்டது.

மாநில அளவிலான கருத்தரங்கத்தின் நிறைவுப் பகுதியில் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் கு. நடராசன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

### தாவரவியல் துறை

11.01.2018 அன்று முதுநிலை இரண்டாம் ஆண்டு தாவரவியல் துறை மாணவர்கள் மூலிகைத் தோட்டத்திற்கான நுழைவு வாயில் அமைத்தனர், மற்றும் நுண்நுட்பவியல் பற்றிய ஒருநாள் பயிற்சி நடைபெற்றது. இதில் விருதுநகர் VHNSN கல்லூரி தாவரவியல் துறை உதவிபேராசிரியர் முனைவர் P. மேகலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

13.02.2018 அன்று வினாடி வினா, தாவரங்களுக்குப் பெயர் கண்டறியும் போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடைபெற்றது.

தாவரவியல் துறை சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் 13.02.2018 அன்று நடைபெற்றது. இதில் தென்கொரியா, சியோல் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த முனைவர் M. கோவர்த்தனன் உயிரியல் முறையில் பிளாஸ்டிக் சுத்திக்கரிப்பு என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### விலங்கியல் துறை

23.01.2018 அன்று விலங்கியல் துறை சார்பாகத் தொற்று நோய்கள் பற்றிய கருத்துப்பட்டறை நடைபெற்றது. இதில் நாமக்கல் மாவட்டச் சுகாதார மேலாளர் திரு. எம். கார்த்திகேயன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

24.01.2018 மற்றும் 10.02.2018 ஆகிய தேதிகளில் விலங்கியல் துறை சார்பாக முதலாம் ஆண்டு மாணவ, மாணவியருக்கு நாமக்கல் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுடன் இணைந்து கட்டணமில்லா இரத்த வகை கண்டறியும் முகாம் நடைபெற்றது.

விலங்கியல் துறை சார்பாக உயிர் எதிர் பொருட்களின் எதிர்ப்புத் தன்மை பற்றிய கருத்தரங்கு 10.02.2018 அன்று நடைபெற்றது. கருத்தரங்கில் உயிர் எதிர் பொருட்களின் எதிர்ப்புத் தன்மை பற்றி வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (VIT) உயிர் மருத்துவ அறிவியல் துறையைச் சார்ந்த முனைவர் நா. ரமேஷ் உரையாற்றினார்.

### கணிதத் துறை

கணிதத் துறையின் சார்பில் கணித விளையாட்டுப் போட்டிகள் 07.02.2018 அன்று நடைபெற்றன. காங்கேயம் அரசு கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பி. செந்தில்குமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கணிதப் போட்டிகளைச் சிறப்பாக நடத்தினார்.

கணித ஆராய்ச்சி மையத் துவக்க விழா 08.02.2018 அன்று நடைபெற்றது. இதில் பெரியார் பல்கலைக் கழக ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் A. முத்துசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்தார்.

### புள்ளியியல் துறை

புள்ளியியல் துறை மாணவர்கள் 10.08.2017 அன்று ஒருநாள் கல்விச் சுற்றுலாவாக, நாமக்கல் அருகிலுள்ள தனியார் நிறுவனமான சரண்யா நூற்பு ஆலைக்குச் (Saranya Spinning Mill (P) Ltd.) சென்று பார்வையிட்டார்கள்.

03.02.2018 அன்று புள்ளியியல் துறையில் மாணவ, மாணவியர்களுக்கிடையேயான வினாடி வினாப் போட்டி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் மற்றும் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. இரவிச்சந்திரன் துவக்கி வைத்தார்கள். இப்போட்டியைப் புள்ளியியல் துறை உதவிப் பேராசிரியர் திருமதி. S. சுஜாதா முன்னின்று நடத்தினார்.

03.02.2018 அன்று புள்ளியியல் துறை மாணவ, மாணவியர் எடை மற்றும் உயரம் அளவிடப்பட்டு உடல் நிறை குறியீட்டு – சுகாதாரச் சோதனையை (Body Mass Index - Health Check) நடத்தினார்கள்.

20.02.2018 அன்று அளவைப் பொருளியல் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மா. குமாரவேலு அளவைப் பொருளியல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

2014–2017 ஆம் ஆண்டில் இளநிலை புள்ளியியல் பயின்ற மாணவன் எம். முனிராஜ் பெரியார் பல்கலைக்கழக தரப் பட்டியலில் ஆறாவது இடம் பெற்றார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அம்மாணவனுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்.

### புவியியல் துறை

20.02.2018 அன்று அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் புவியியல் துறையில் **Employment Opportunities for Geography Students** என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடந்தது. இந்நிகழ்ச்சியில் முனைவர் V. தங்கமணி, புவியியல் உதவி பேராசிரியர், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை, சிறப்புரையாற்றினார்.

21.02.2018 அன்று **The Indian Geographical Society (IGS)** மூலம் ஏற்பாடு செய்த மாநில அளவிலான **8th Talent Test - Young Geographer - 2018** - செயல் திறன் தேர்வு நடைபெற்றது. இதில் புவியியல் துறையின் இளநிலை மற்றும் முதுநிலை இறுதியாண்டு மாணவர்கள் கலந்துகொண்டு தேர்வு எழுதினார்கள்.

23.02.2018 அன்று பெரியார் பல்கலைக்கழக ஆளுமைக்குட்பட்ட கல்லூரிகளுக்கு இடையேயான வினாடி வினாப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் பரிசுகளை வழங்கினார்.

### கணினி அறிவியல்

கணினி அறிவியல் துறையின் சார்பாக 20.01.2018 அன்று ஆரோக்கிய வாழ்விற்கு உணவு முறையும் யோகமும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினரான தைவான் நாட்டில் பணிபுரியும் டாக்டர் கு. வைரமணி சிறப்புரை நிகழ்த்தினார்.

03.02.2018 சனிக்கிழமை அன்று FIFTH GENERATION TECHNOLOGY என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் சேலம், மைசூரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் அ. சுரேஷ் அவர்கள் கைபேசியின் ஐந்தாம் தலைமுறை கம்பியில்லாத தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

### நூலகத்துறை

கணினி மயமாக்கப்பட்ட நூலகத்தில் மொத்தம் 41,320 புத்தகங்கள் உள்ளன. இதன் மூலம் 59 ஆய்விதழ்கள், 3 தமிழ் செய்தித்தாள்கள் மற்றும் 2 ஆங்கில தினசரி செய்தித்தாள்கள் பெறப்படுகின்றன. UGC-யின் 92 மென் ஆய்விதழ்கள், 80,000 த்திற்கும் மேற்பட்ட E-Book உள்ளன.

### உடற்கல்வி

17.09.2017 அன்று நாமக்கல் மாவட்ட அளவில் நடைபெற்ற பளு தூக்கும் போட்டியில் நமது கல்லூரி மாணவர் U. செல்வக்குமார் II B.Sc. (இயற்பியல் துறை) இரண்டாம் இடம் பெற்றார். மேலும், 24.12.2017 அன்று மாவட்ட அளவில் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் நான்காவது இடத்தை பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

23-25 அக்டோபர் 2017-ல் ஓசூர், MGR கல்லூரியில் நடைபெற்ற தடகளப் போட்டியில் 800 மீட்டர் ஓட்டப் பந்தயப் பிரிவில் நமது கல்லூரி மாணவி S. சுகன்யா III B.A., (பொருளாதாரம்), பெரியார் பல்கலைக்கழக அளவில் வெண்கலப் பதக்கம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான சதுரங்கப் போட்டியில் நமது கல்லூரியைச் சேர்ந்த கணிதத்துறை மாணவர் A. பிரசாத் II M.Sc. கலந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்.

நமது கல்லூரியில் துறைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் 16.02.2018ல் தொடங்கி 02.03.2018 வரை நடைபெற்றன.

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 09.03.2018 அன்று கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவிகள் ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டத்தை வென்று இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

### நாட்டு நலப்பணி திட்டம்

NSS சார்பில் முனைவர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய திரைப்படம் (சலாம் கலாம்) 05.10.2017 அன்று மாணவ, மாணவியர்களுக்குத் திரையிடப்பட்டது.

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், NSS சார்பில் "தூய்மை இந்தியா வாரம்" செப்டம்பர் மாதம் 15 முதல் 22 வரை கொண்டாடப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு NSS சார்பில் கல்லூரியில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் மாவட்ட அளவில் நடைப்பெற்ற போட்டிகளில் கலந்துக் கொண்டனர்.

07.12.2017 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் தேசிய கொடி நாள் தினம் கொண்டாடப்பட்டது.

ஒரு மாணவருக்கு ஒரு மரக்கன்று வழங்குதல் திட்டமானது 13.12.2017 அன்று செயல்படுத்தப்பட்டது.

11.01.2018 அன்று நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS மற்றும் நேரு யுவகேந்திரா இணைந்து நமது கல்லூரியில் இளைஞர் பாராளுமன்றம் நிகழ்ச்சி நடத்தின.

19.01.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் விவேகானந்தர் 155வது பிறந்த தினத்தை முன்னிட்டு NSS சார்பாக Namakkal Heart Fullness Yoga நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்களுக்கு யோக பயிற்சி வழங்கப்பட்டது.

14.03.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) சார்பாக புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் நடைபெற்றது.

நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் 25.03.2018 முதல் 31.03.2018 வரை ஈச்சவாரி, லத்துவாடி, நல்லையக் கவுண்டன் புதூர் மற்றும் வடக்கால் புதூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இதில் நான்கு அலகுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## கூட்டுறவு பண்டகச்சாலை

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், மாணவர் கூட்டுறவு பண்டகச்சாலையில் (எஸ். 207) மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், மற்றும் செய்முறை ஏடுகள் ஆகியவை நியாய விலையில் விற்கப்படுகின்றன.

## நுண்கலை மன்றம்

பொன்விழா ஆண்டை முன்னிட்டு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நுண்கலை மன்றம் 31.08.2017 அன்று கல்லூரி முதல்வர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டு பல்வேறு போட்டிகள் மாணவ, மாணவிகளிடையே நடத்தப்பட்டன.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

2017-18 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் தொடங்கப்பட்டது. பொன்விழா ஆண்டு நிகழ்வுகளையொட்டிப் பெற்றோர் - ஆசிரியர் சிறப்பு சந்திப்பு அனைத்து துறைகளால் நடத்தப்பட்டது.

## முன்னாள் மாணவர் சங்கம்

2017-18 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் தொடங்கப்பட்டது. பொன்விழா ஆண்டு நிகழ்வுகளையொட்டி முன்னாள் மாணவர் சந்திப்புக் கூட்டத் தொடக்க விழா 07.10.2017 அன்று நடைபெற்றது. இதில் முன்னாள் மாணவர் சங்க துணைத்தலைவர் திரு. R. கரிகாலன் உட்பட பெருவாரியான சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## இளைஞர் செஞ்சிலுவை சங்கம்

சர்வதேச போதை ஒழிப்பு விழிப்புணர்வு நாளான 26.06.2017 அன்று நாமக்கல் பேருந்து நிலையத்தில் போதைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை இரத்த வங்கிக்காக நமது கல்லூரி மாணவர்கள் 06.07.2017 அன்று இரத்த தானம் செய்தனர்.

15.08.2017 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டுக் கல்லூரி மாணவ, மாணவியருக்குப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

05.09.2017 அன்று ஆசிரியர் தினத்தை முன்னிட்டுக் கல்லூரியில் உள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு இனிப்பு மற்றும் ஆசிரியர் தின வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

07.02.2018 அன்று நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை இரத்த வங்கிக்காக இரத்த தான முகாம் நடைபெற்றது. திரு. அர. அருளரசு I.P.S. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், காவல் துறையினரால் மாணவர்களின் உடற்தகுதிக்காகச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### செஞ்சுருள் சங்கம்

கல்லூரி மாணவர்களுக்கு 26.07.2017 அன்று டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைப்பெற்றது. சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு 16.08.2017 புதன்கிழமை அன்று மாணவ, மாணவிகள் சமுதாய நலனுக்காக உறுதிமொழி ஏற்றனர்.

12.10.2017 வியாழக்கிழமை அன்று ஒரு நாள் பயிற்சிப் பட்டறை வாழ்க்கையின் வெற்றிக்கான அவசியத் திறன்கள் என்ற தலைப்பில் நடைபெற்றது. எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சித்த மருத்துவர் திரு. S. பூபதிராஜா கலந்துகொண்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் S. அய்யப்பராஜா, ஆங்கில மொழியை ஆளுமைப்படுத்துதல் குறித்துப் பேசினார்.

### குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

21.08.2017 அன்று தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, மூட்டைகட்டல் மற்றும் பெயரிடுதலில் தவறான நடத்தைகள் என்ற தலைப்பில் பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் (Vigilance Awareness Week) கொண்டாடும் வகையில் எனது பார்வை – ஊழல் இல்லா இந்தியா (My Vision - Corruption free India) என்ற தலைப்பில் ஊழலைத் தடுப்பதற்காக உறுதிமொழியை கல்லூரியின் அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் எடுத்துக்கொண்டனர்.

01.11.2017 அன்று நுகர்வோர் மன்றத்தின் சார்பாக ஊழல் பற்றிய கண்காணிப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

பொருட்கள் மற்றும் சேவை வரி (Goods and Services Tax - GST) பற்றிய பொதுமக்களின் கருத்தைக் கண்டறிய மாணவ, மாணவியர்கள் (Questionnaire) வினாப் பட்டியலைப் பயன்படுத்தி விவரம் சேகரித்தனர்.

### ஆய்வு வளர்ச்சித் துறை

ஆராய்ச்சி மாணவர் கூட்டம் 17.02.2018 மற்றும் 07.03.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. ரவிச்சந்திரன் வரவேற்றார். இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் சு. பங்காரு முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். இதில் ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தேவைப்படும் வசதிகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

### மகளிர் தனிப்பிரிவு

மகளிர் மன்றம் சார்பாக 24.01.2018 அன்று மாணவிகளுக்கு சுகாதாரக் கல்வி மற்றும் ஆலோசனை முகாம் நடைபெற்றது.

08.03.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் மகளிர் தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிக் கல்வி இயக்க மேனாள் இணை இயக்குநர் முனைவர் க. கலா வாழ்த்துரை வழங்கினார். புள்ளியியல் துறை உதவிப் பேராசிரியர் திருமதி சா. சுஜாதா தொகுத்து வழங்கினார்.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

15.02.2018 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வழிகாட்டும் நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உயர்திரு. அர. அருளரசு அவர்கள் மாணவர்கள் சீருடைப் பணியாளர் தேர்வினை எதிர்கொள்ளத் தேவைப்படும் வழிமுறைகளைக் கூறினார். இந்நிகழ்ச்சியை வேலைவாய்ப்புப் பயிற்சித்துறை அலுவலர் முனைவர் க. பன்னீர்செல்வன் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சித்துறை உறுப்பினர் முனைவர் எ. ஞா. வெஸ்லி ஜெபசிங் தேவயிரக்கம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

### மென்திறன் திட்ட பயிற்சி மையம்

இந்த ஆண்டு நமது கல்லூரியின் மென்திறன் திட்ட பயிற்சி மையம் தமிழக அரசின் டான்ஸ்கி உதவியுடன் இறுதியாண்டு மாணவர்கள் அனைவருக்கும் மென்திறன் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுடைய ஆளுமைத்திறன் மேம்பாட்டிற்கு உதவியது.

### லஞ்ச ஒழிப்பு

சர்வதேச லஞ்ச ஒழிப்பு தினமான 09.12.2017 அன்று கல்லூரி முதல்வர் முன்னிலையில் பேராசிரியர்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் லஞ்சம் இல்லாத பாரதத்தை உருவாக்குவோம் என்று உறுதிமொழி மேற்கொண்டனர்.

### பகடி வதை தடுப்புக் குழு

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பகடிவதை தடுப்புக் குழு அமைக்கப்பட்டு பகடிவதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுவது தடுக்கப்படுகிறது.

### ஆராய்ச்சி திட்டத்திற்கான நிதியுதவி

வேதியியல் உதவிப் பேராசிரியர் முனைவர் பொ. சிவக்குமார் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் வேதியியல் துறை மாணவர்கள் ரூ.10,000 ஆராய்ச்சி உதவித்தொகையும் முனைவர் பொ. சிவக்குமார் வேதியியல் உதவிப்பேராசிரியர் அவர்கள் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தில் இருந்து ரூ.1,00,000/- மற்றும் UGC-யில் இருந்து ரூ.2,50,000/- ஆராய்ச்சி உதவித்தொகையாகப் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்திலிருந்து வேதியியல் துறைக்கு ரூ. 10,000/- மாநில அளவில கருத்தரங்கம் நடத்த உதவித்தொகை பெறப்பட்டது.

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல் இயற்பியல் துறை சார்பில் 20.07.2017 மற்றும் 21.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் 'நானோ பொருட்கள்' என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்த ரூ.1,00,000/- திரு. கிங்சன் சாலமன் பெற்றார்.

இயற்பியல் துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தில் வழங்கப்பட்ட ரூ.1,00,000/- தொகையில் கிராமப்புற மேம்பாட்டிற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் 5 நாட்கள் இலவச பயிலரங்கம் நடைபெற்றது.

தமிழ் துறையில் முனைவர் பி. கந்தசாமி உதவிப் பேராசிரியர் கொங்கு வட்டார நாட்டுப்புற கரகாட்ட ஆட்ட முறைகள் எனும் தலைப்பில் பல்கலைக்கழக மானிய குழுவிலிருந்து நிதியுதவி ரூ.1,50,000/- பெற்று குறுந்திட்ட ஆய்வு செய்து வருகிறார்.

தமிழ்துறையில் கல்லூரிக் கல்வித்துறை வழங்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கான உதவித்தொகை மாதம் ரூ.3,000/- வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.36,000/- வீதம் கே. சித்ரா மற்றும் எஸ். சுதா ஆகிய மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. ந. தனபால் செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திடமிருந்து மாதம் ரூ. 12,000/- நிதியுதவி பெற்று முனைவர் பட்டம் செய்து வருகிறார்.

நமது கல்லூரியில் முழு நேரமாக 26 நபர்களும், பகுதி நேரமாக 39 நபர்களும் முனைவர் பட்டயப்படிப்பும் **(Ph.D.)** 24 நபர்கள் முழுநேரமாகவும், 56 நபர்கள் பகுதிநேரமாகவும் நிறைஞர் ஆராய்ச்சிப்படிப்பு **(M.Phil.)** பயின்று வருகின்றனர். மேலும் சர்வதேச அளவில் 77 ஆராய்ச்சிகட்டுரைகளும், தேசிய அளவில் 4 ஆராய்ச்சி கட்டுரைகளும் சமர்ப்பித்துள்ளனர். மேலும் 46 நபர்கள் பல்வேறு கருத்தங்கங்களில் கலந்து கொண்டுள்ளனர். மேலும், நமது கல்லூரியின் வேதியியல் துறையில் பணிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

## பொன்விழா சிறப்பு நிதிகள்

தமிழக அரசு, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நமது கல்லூரியில் 20 வகுப்பறைகள் மற்றும் 5 ஆய்வக அறைகள் கட்ட ரூபாய் 4,36,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது.

50வது ஆண்டை ஒட்டிப் பொன்விழா ஆண்டு நிகழ்வுகளுக்காக ரூபாய் 5,00,000/- கல்லூரி தன்வைப்பு நிதிக் குவியலில் இருந்து தமிழக அரசால் செலவீனம் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது.

உயர்கல்வித்துறை மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக ரூபாய் 43,070/- மதிப்புள்ள தானியங்கி நாப்கின் வழங்கும் இயந்திரம் இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டது. மேலும் கல்லூரியின் பிரதான சாலையில் பேவர்பிளாக் அமைத்துத்தர கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சுமார் 2.5 லட்சம் மதிப்புள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

தமிழக அரசின் இவ்வாண்டு நிதியில் இருந்து பொதுப்பணித்துறை மூலமாக கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டது. மேலும் வகுப்பறைகளுக்கிடையே மண்தரையில் பேவர்பிளாக், கல்லூரின் முகப்பில் தார்ச்சாலை அமைக்கப்பட்டது.

2001 - 2002ஆம் கல்வியாண்டில் இராசிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்ட வகுப்பறைகள் இந்தாண்டு புதுப்பிக்கப்பட்டன.

பொன்விழா ஆண்டினை முன்னிட்டு மாணவியர் ஓய்வு அறை முன்னாள் மாணவர்கள் (OSA) சார்பாகக் கட்ட திட்டமிடப்பட்டு 23 மார்ச், 2018 அன்று பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் திரைப்பட இயக்குநர் திரு. S.P. முத்துராமன் மற்றும் மேனாள் உயர்கல்வித்துறை இயக்குநர் (பெ) முனைவர் க. சேகர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், முதல்வர் அ. லீலா குளோரி பாய், முன்னாள் மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. R. கரிகாலன் மற்றும் பொறுப்பாளர்கள், திரு. S.K. வேல், திரு. ஜோதி V குப்புசாமி, திரு. K. நடராஜன், இந்நாள், முன்னாள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

**நன்றி வணக்கம்!!!**

## பாவலர் முத்துசாமி



பாவலர் முத்துசாமி அவர்கள் பட்டதாரி ஆசிரியராக இருந்து நாமக்கல் சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் விளங்கியவர். பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். நாமக்கல் நகரில் இரு அரசு கலைக்கல்லூரிகள் ஒரே ஆண்டில் அமையக் காரணமானவர். நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும் இவரது முயற்சியால் அமைந்தது. நாமக்கல் நகரில் இவரது பெயரில் பாவலர் மன்றம் அமைந்துள்ளது.

## கல்லூரியின் வரலாறு



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாவின் பெயரைத் தாங்கியுள்ள இக்கலைக்கல்லூரி 1968 - 69 ஆம் ஆண்டில் நகரில் ஒரே சமயத்தில் உருக்கொண்ட இரு அரசு கல்லூரிகளில் ஒன்றாகும். அப்போதைய நாமக்கல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் உள்ளாட்சித்துறை அமைச்சருமாய் விளங்கிய பாவலர் திரு. முத்துசாமி பி.ஏ., பி. டி., அவர்களது அயரா உழைப்பினாலும், நாமக்கல் வருவாய் கோட்ட அலுவலர் திரு. சொக்கலிங்கம் அவர்களது நன்முயற்சியினாலும், இப்பகுதி மக்களது தூண்டுகோல் மற்றும் நன்கொடை ஆகியவற்றாலும் இக்கலைக்கல்லூரிதோற்றம் கொண்டது. நாமக்கல், மோகனூர் பெருவழிச் சாலையில் 5 கி.மீ. தொலைவில் குன்று சூழ்ந்த மேட்டுப் பகுதியில் 41.13 ஏக்கர் பரப்பளவில் நல்ல இயற்கைச் சூழலில் இக்கல்லூரி அமைந்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்று இக்கல்லூரி 1968 - 69 ஆம் ஆண்டு புதுமுக வகுப்புகளுடன் நாமக்கல் (மேற்கு) உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. இக்கல்லூரி 1997 முதல் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்று செயல்பட்டு வருகிறது.

## இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பட்டப்படிப்புகள்

| வ. எண் | பாடம் | இளங்கலை / இளம் அறிவியல் | துவங்கிய ஆண்டு |
|---|---|---|---|
| 1. | ஆங்கில இலக்கியம் | இளங்கலை | 1968 -1969 |
| 2. | கணிதம் | இளம் அறிவியல் | 1968 - 1969 |
| 3. | புவியியல் | இளம் அறிவியல் | 1968 -1969 |
| 4. | வணிகவியல் | இளங்கலை | 1970 - 1971 |
| 5. | வேதியியல் | இளம் அறிவியல் | 1970 - 1971 |
| 6. | தாவரவியல் | இளம் அறிவியல் | 1970 - 1971 |
| 7. | பொருளியல் | இளங்கலை | 1973 - 1974 |
| 8. | தமிழ் இலக்கியம் | இளங்கலை | 1979 - 1980 |
| 9. | இயற்பியல் | இளம் அறிவியல் | 1979 - 1980 |
| 10. | வணிக நிர்வாகவியல் | இளங்கலை | 2002 - 2003 |
| 11. | விலங்கியல் | இளம் அறிவியல் | 2012 - 2013 |
| 12. | புள்ளியியல் | இளம் அறிவியல் | 2012 - 2013 |
| 13. | கணினி அறிவியல் | இளம் அறிவியல் | 2012 - 2013 |

## முதுகலை மற்றும் முது அறிவியல் பட்டப்படிப்புகள்

| வ. எண் | பாடம் | முதுகலை/ முது அறிவியல் | துவங்கிய ஆண்டு |
|---|---|---|---|
| 1. | தாவரவியல் | முது அறிவியல் | 1978 -1979 |
| 2. | ஆங்கில இலக்கியம் | முதுகலை | 2012 - 2013 |
| 3. | தமிழ் இலக்கியம் | முதுகலை | 2012 - 2013 |
| 4. | பொருளியல் | முதுகலை | 2012 - 2013 |
| 5. | இயற்பியல் | முது அறிவியல் | 2012 - 2013 |
| 6. | வேதியியல் | முது அறிவியல் | 2012 - 2013 |
| 7. | கணிதம் | முது அறிவியல் | 2012 - 2013 |
| 8. | புவியியல் | முது அறிவியல் | 2012 - 2013 |
| 9. | வணிகவியல் | முதுகலை | 2017 - 2018 |

## ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகள்

| வ. எண் | பாடம் | இளங்கலை / இளம் அறிவியல் | துவங்கிய ஆண்டு |
|---|---|---|---|
| 1. | தாவரவியல் (முழு நேரம்) | அறிவியல் பிரிவு | 1983 -1984 |
| 2. | தமிழ் இலக்கியம் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2002 - 2003 |
| 3. | ஆங்கில இலக்கியம் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2013 - 2014 |
| 4. | இயற்பியல் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2013 - 2014 |
| 5. | பொருளியல் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2013 - 2014 |
| 6. | வேதியியல் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2013 - 2014 |
| 7. | தாவரவியல் (பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2014 - 2015 |
| 8. | வணிகவியல் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2017 - 2018 |
| 9. | கணிதம் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2017 - 2018 |

## முனைவர் பட்டப்படிப்புகள்

| வ. எண் | பாடம் | முதுகலை/ முது அறிவியல் | துவங்கிய ஆண்டு |
|---|---|---|---|
| 1. | தமிழ் இலக்கியம் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2002 -2003 |
| 2. | இயற்பியல் (முழு நேரம்) | அறிவியல் பிரிவு | 2012 - 2013 |
| 3. | ஆங்கில இலக்கியம் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2013 - 2014 |
| 4. | பொருளியல் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2013 - 2014 |
| 5. | வேதியியல் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2013 - 2014 |
| 6. | தாவரவியல் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2014 - 2015 |
| 7. | வணிகவியல் (முழு & பகுதி நேரம்) | கலைப்பிரிவு | 2017 - 2018 |
| 8. | கணிதம் (முழு & பகுதி நேரம்) | அறிவியல் பிரிவு | 2017 - 2018 |

இக்கல்லூரியின் நூலகம் இதற்கென அமைந்த தனிக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. போதிய அளவு விரிவான விளையாட்டுத் திடல் அமைந்துள்ளது. மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்று செயல்பட்டு வருகிறது. அனைத்து மாணவர்களும் ஒருசேர உணவு உண்ணுவதற்கேற்ற உணவுக்கூடம் உள்ளது. சிற்றுண்டிச் சாலை ஒன்றும் உள்ளது. 300 மாணவர்கள், 100 மாணவிகள் கொண்ட நாட்டு நலப்பணித்திட்டமும் (NSS) கல்லூரியில் இயங்கி வருகிறது. செஞ்சிலுவை (YRC) மற்றும் செஞ்சுருள் (RRC) சங்கங்களும் இயங்கி வருகின்றன.



கல்லூரி மாணவர்களுக்கென 1984 - 85 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரி உணவு விடுதி தொடங்கப்பெற்று இயங்கி வருகிறது.

# கல்லூரித் துவக்க விழா புகைப்படங்கள்

முதல்வர் மற்றும் பேராசிரியர்கள்



துவக்கக் கால மாணவர்கள்



# கல்லூரியின் சிறப்பம்சம்

1. திப்பு சுல்தான் எழுப்பிய மலைக்கோட்டை நமது கல்லூரிச் சின்னத்தில் இடம் பெற்று வரலாற்றுப் பெருமையை உணர்த்தும் ஒரே கல்லூரி.
2. சிறந்த ஒலி, ஒளி வசதியுடன் கூடிய டிஜிட்டல் கலையரங்கம்.
3. மாணவர்களுக்கான மென்திறன் பயிற்சி மையம்.
4. அரசுப் பணித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம்.
5. தரமான மின்நூலகம்.
6. முழு ஆளுமையை வளர்க்கும் கல்வி முறை.
7. பெற்றோர் ஆசிரியர் கழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.
8. முன்னாள் மாணவர் சங்கம்.
9. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி.
10. கண்காணிப்பு கேமரா வசதி.
11. அனைத்துத் துறைகளிலும் அச்சு மற்றும் ஒளியச்சுக் கருவிகள்.
12. கூட்டுறவுப் பண்டகச் சாலை.
13. தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினால் தர "B" சான்றிதழ் பெற்ற கல்லூரி.
14. 90% முனைவர் பட்ட ஆசிரியர்களைக் கொண்ட கல்லூரி
15. நவீன அறிவியல் ஆய்வுக் கூடங்கள்
16. மாணவர் குறு ஆராய்ச்சித் திட்டங்களைக் கொண்ட கல்லூரி.
17. ஆசிரியர்கள் மாணவர்களுக்கான தரமான சிற்றுண்டியகம்.
18. கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.
19. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.
20. கேலிவதைத் தடை செய்தல் பற்றி அதற்கான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துதல்.
21. மென்திறன் மேம்பாட்டு வளர்ச்சி.
22. கல்லூரியில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை.
23. கணினி அறிவுப் பயிற்சித் திட்டம்.
24. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை
25. நுகர்வோர் மன்றம்.
26. மகளிர் மன்றம்.
27. சுற்றுச்சூழல் சங்கம்



# துறை வாரியாக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

## தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளங்கலைத் தமிழ் இறுதி ஆண்டு



முதுகலைத் தமிழ் இறுதி ஆண்டு



# ஆங்கிலத்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளங்கலை ஆங்கிலம் இறுதி ஆண்டு



முதுகலை ஆங்கிலம் இறுதி ஆண்டு



# பொருளியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளங்கலை பொருளாதாரம் இறுதி ஆண்டு



# வணிக நிர்வாகத்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளங்கலை வணிக நிர்வாகம் இறுதி ஆண்டு



## வணிகவியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் வணிகவியல் இறுதி ஆண்டு



## கணினி அறிவியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - கணினி அறிவியல் இறுதி ஆண்டு



# இயற்பியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

## இளம் மற்றும் முது அறிவியல் - இயற்பியல் இறுதி ஆண்டு மாணவர்கள்







# வேதியியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - வேதியியல் இறுதி ஆண்டு - தமிழ் வழி



இளம் அறிவியல் - வேதியியல் இறுதி ஆண்டு - ஆங்கில வழி



# வேதியியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

முது அறிவியல் - வேதியியல் இறுதி ஆண்டு



வேதியியல் ஆய்வகம்



# தாவரவியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - தாவரவியல் இறுதி ஆண்டு



முது அறிவியல் - தாவரவியல் இறுதி ஆண்டு



## விலங்கியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - விலங்கியல் இறுதி ஆண்டு



## கணிதவியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - கணிதம் இறுதி ஆண்டு



## புள்ளியியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் அறிவியல் - புள்ளியியல் இறுதி ஆண்டு



## புவியியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

இளம் மற்றும் முது அறிவியல் - புவியியல் இறுதி ஆண்டு



இயற்பியல் ஆய்வகம்



கணித ஆய்வகம்



தாவரவியல் ஆய்வகங்கள்





விலங்கியல் ஆய்வகம்



முதல்வர் மற்றும் கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



முதல்வர் மற்றும் கல்லூரி விடுதிக்குழு உறுப்பினர்கள்



## முதல்வர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள்



## முதல்வர் மற்றும் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள்



முதல்வர் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு ஒருங்கிணைப்பாளர்கள்



முதல்வர் மற்றும் AISHE மைய அதிகாரிகள்



## முதல்வர் மற்றும் IQAC ஒருங்கிணைப்பாளர்கள்



## முதல்வர் மற்றும் IQAC உறுப்பினர்கள்



# சுதந்திர தினக் கொடியேற்று விழா

நாள் : 15 ஆகஸ்ட், 2017, இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



சுதந்திர தினமான 15.08.2017 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்கள் கொடி ஏற்றிச் சிறப்புரையாற்றினார்.


# நல்லிணக்க நாள்

நாள் 20 ஆகஸ்ட், 2017, இடம் அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



நல்லிணக்க நாளான 20.08.2017 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்கள் முன்னிலையில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்தியா பல்வேறு சமய நம்பிக்கைகள் கொண்ட மக்கள் வாழும் நாடு. இந்திய மக்கள் பிற சமய மக்களின் நம்பிக்கைகளை மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ உறுதிமொழி மேற்கொண்டனர்.


VOTE RIGHT
National Voter's Day
"Proud to be a voter - Ready to vote"



## தேசிய வாக்காளர்கள் தினம்

நாள் : 25 ஜனவரி, 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

தேசிய வாக்காளர்கள் தினமான 25.01.2018 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்கள் முன்னிலையில் அலுவலகத்தில் பணிபுரியும் ஒவ்வொருவரும் இந்திய நாட்டின் சிறந்த வாக்காளராகத் திகழ்வோம் என உறுதி எடுத்துக்கொண்டனர்.







# குடியரசு தின விழா

நாள் : 26 ஜனவரி, 2018

இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



குடியரசு தினமான 26.01.2018 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்கள் கொடி ஏற்றிச் சிறப்புரையாற்றினார்.

# தீண்டாமை ஒழிப்பு தினம்

நாள் : 30 ஜனவரி, 2018, இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



தீண்டாமை ஒழிப்பு தினமான 30.01.2018 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்கள் முன்னிலையில் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இந்திய நாட்டில் தீண்டாமையை ஒழிக்கும் விதமாக உறுதி எடுத்துக்கொண்டனர்.

## பொன்விழா ஆண்டு நிகழ்வு கல்லூரிகளுக்கிடையே பேச்சு, கட்டுரை, வினாடி வினா மற்றும் ஓவியப் போட்டிகள்

நாள் : 06 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்














நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டுக் (1968 - 2018) கொண்டாட்டத்தை முன்னிட்டு கல்லூரிகளுக்கு இடையேயான ஓவியப் போட்டி, கட்டிரைப் போட்டி, வினாடி வினா மற்றும் பேச்சுப்போட்டிகள் 06.02.2018 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றன. இதில் பெரியார் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளிலிருந்து பெருந்திரளான மாணவ, மாணவியர் போட்டிகளில் பங்கு பெற்றனர். இதன் தொடக்கவிழாவில் முனைவர் மு. இரவிச்சந்திரன், புள்ளியியல் துறைத்தலைவர் வரவேற்புரை நல்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் விழாவிற்குத் தலைமை தாங்கித் தலைமையுரை ஆற்றினார். விலங்கியல் துறைத்தலைவர் முனைவர் மு. விஜயராஜன் மற்றும் வேதியியல் துறைத்தலைவர் திரு. ஆ. லோகநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மா. குமாரவேலு அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நவின்றார். புள்ளியியல் துறை உதவிப் பேராசிரியர் திருமதி. சா. சுஜாதா அவர்கள் விழாவினைத் தொகுத்து வழங்கினார்.

# நாப்கின் வழங்கும் இயந்திரம் திறப்பு

நாள் : 13 மார்ச், 2018, இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





13.03.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய், கல்லூரி மாணவியர் நலன் கருதி தமிழ்நாடு அரசு ஆதரவு பெற்று நாப்கின் வழங்கும் இயந்திரத்தை நிறுவித் திறந்து வைத்தார். இந்த இயந்திரத்தில் 5 ரூபாய் நாணயத்தை உள்ளே செலுத்துவதன் மூலம் நாப்கினை மாணவியர் சிரமமில்லாமல் எளிதில் பெற்றுக்கொள்ள முடியும்.




# தமிழ்நாடு அரசுப் பணியாளர்

## தேர்வுக்கான (TNPSC) இலவசப் பயிற்சி

தேதி : 12 ஜூலை, 2017 இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





தமிழ்த்துறையில் 12.07.2017 அன்று மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்கான (TNPSC) இலவசப் பயிற்சி வகுப்பு தொடக்க விழா நடைபெற்றது. இதில் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கி மாணாக்கர்களுக்கு இலவச வினா வங்கிகளைத் தந்தார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி முன்னிலை வகித்தார். முனைவர் கா. சந்திரசேகரன் அறிமுகவுரையாற்றினார். முனைவர் சு. கார்த்திகேயன், முனைவர் து. இரவிக்குமார் ஆகியோர் மாணாக்கர்களுக்குப் பயிற்சியளித்தனர்.



## சிறப்புச் சொற்பொழிவு : முண்டாசு மகுடமானது

தேதி : 20 ஜூலை, 2017, இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



திருச்சி தேசியக்கல்லூரி, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சா. நீலகண்டன் முண்டாசு மகுடமானது என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ.லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி வரவேற்றார். முனைவர் அரசுபரமேசுவரன் அறிமுகவுரையாற்றினார். முனைவர் ப. நல்லுசாமி நன்றியுரையாற்றினார்.



# சிறப்புச் சொற்பொழிவு :
# சென்ற இடமெல்லாம் சிறப்பு

தேதி : 28 ஜூலை, 2017 இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன் விழாவையொட்டி 28.07.2017 அன்று முற்பகல் 10 மணியளவில் தமிழ்த்துறையில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகத் திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையேற்றார். நாமக்கல் தமிழ்ச்சங்கத் தலைவர் டாக்டர் ஆர். குழந்தைவேல் வாழ்த்துரை வழங்கினார். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் திரு. சே.மா. இராமசாமி மற்றும் மேனாள் கல்லூரி மாணவர் முனைவர் டி.எம். மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி நன்றியுரையாற்றினார். இதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேஸ்வரன் செய்தார்.







## சிறப்புச் சொற்பொழிவு :
## கலையும் வாழ்க்கையும் மற்றும் ஓவியக் கண்காட்சி

தேதி : 07 ஆகஸ்ட், 2017, இடம் : கல்லூரிக் கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்










தமிழ்த்துறையில், 07.08.2017 அன்று கலையும் வாழ்க்கையும் என்ற தலைப்பில் சமூகப்போராளியும் எழுத்தாளருமான பேரா. சுப. வீரபாண்டியன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இக்கல்லூரியின் மேனாள் உடற்கல்வி இயக்குநர் திரு. S. கோவிந்தராஜ் வரைந்த ஓவியங்களின் கண்காட்சியும் நடைபெற்றது. இந்த ஓவியக் கண்காட்சியைச் சிறப்பு விருந்தினர் பேரா. சுப. வீரபாண்டியன் திறந்து வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குமோரி பாய் தலைமை தாங்கினார். நாமக்கல் கம்பன் கழகத் தலைவர் திரு. வ. சத்தியமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் வரவேற்றார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ. சின்னதுரை நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராகத் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் செயல்பட்டார்.







# ஆய்வாளர் அரங்கம்

தேதி : 23 ஆகஸ்ட், 2017

இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



தமிழ்த்துறையில், 23.08.2017 அன்று முனைவர் பட்ட மாணாக்கர்களுக்கான ஆய்வாளர் அரங்கம் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் பங்கேற்று ஆய்வாளர்களின் கட்டுரைமீது வினாக்கள் தொடுத்து ஆய்வு சிறப்பாக அமையும் விதத்தில் விவாதங்கள் நடைபெற்றன.



இதில் முறையே

1. ப. கோமதி - ஜல்லிக்கட்டும் இன்றைய சூழலும்
2. சு. சுதா - ஆண்டாள் பிரியதர்ஷினியின் தகனம் சிறுகதையில் சமுதாயச் சிக்கல்கள்
3. மா. பூங்கொடி - க.நா.சுவின் பொய்த்தேவு நாவலில் சமுதாயத் தேடலும் பின்விளைவுகளும் ஆகிய தலைப்புகளில் கட்டுரை வாசித்தனர்.




## கருத்தரங்கம் :
## திருக்குறளும்
## காந்தியடிகளும்

தேதி : 12 செப்டம்பர், 2017, இடம் : தமிழ்த்துறை,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



தமிழ்த்துறையில், 12.09.2017 அன்று திருக்குறளும் காந்தியடிகளும் என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆசிரியர் திரு. க. கணேசன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி முன்னிலை வகித்தார். முனைவர் து. இரவிக்குமார் வரவேற்றார். முனைவர் சு. கார்த்திகேயன் நன்றியுரையாற்றினார். பேராசிரியர்களும் மாணாக்கர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



# கருத்தரங்கம் புளூவேல் (நீலத்திமிங்கல) விளையாட்டு விழிப்புணர்வு

தேதி : 12 செப்டம்பர், 2017

இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



தமிழ்த்துறையில், 12.09.2017 அன்று புளூவேல் (நீலத்திமிங்கலம்) விளையாட்டு விழிப்புணர்வு - என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக நாமக்கல் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் சார்பு நீதிபதியும் செயலாளருமான செல்வி S. அசின்பானு, திரு. வீ. சாதிக் அலி, Senior Asst., DLSA, Namakkal ஆகியோர் சட்ட விழிப்புணர்வு குறித்துக் கருத்துக்களையும், குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கான போக்ஸோ (POCSO) சட்டம் குறித்தும், மற்றும் நீலத்திமிங்கல விளையாட்டிலிருந்து விடுபடுதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் இளநிலை மூன்றாமாண்டு மாணாக்கர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இவ்விழாவில் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். புள்ளியியல் துறைத் தலைவர் முனைவர் கு. இரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. பூபதி வரவேற்க முனைவர் பி. கந்தசாமி நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது.



# நாமக்கல் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல் இணைந்து நடத்திய போட்டிகள்

நாள்: 15 செப்டம்பர் 2017, இடம்: தமிழ்த்துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்.



நாமக்கல் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறையும் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியும் இணைந்து 15.09.2017 அன்று நடத்திய மாவட்ட அளவிலான போட்டிகளில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற முதுகலைத்தமிழ் முதலாமாண்டு மாணவர் க. ஜெயக்குமார் அவர்களைப் பாராட்டி நற்சான்றிதழும் பரிசும் வழங்கினார்.





## இளநிலை மாணவ, மாணவிகளுக்கான யோகா வகுப்பு

நாள்: 09 - 13 அக்டோபர், 2017.
இடம்: கலையரங்கம்,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்.

தமிழ்த் துறையில் 2017-2018 ஆம் கல்வி ஆண்டில், இளங்கலை மற்றும் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மனவளக் கலை மன்றத்தில் இருந்து 09.10.2017 முதல் 13.10.2017 வரை (5 நாட்கள்) இலவச யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.







# பாரதி விழாவில் வழக்காடு மன்றம்

தேதி : 15 டிசம்பர், 2017

இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

15.12.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன் விழாவையொட்டித் தமிழ்த்துறையின் சார்பாகப் 'பாரதி விழா' நடைபெற்றது. இதில் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் பாரதி கண்ட புதுமைப்பெண் ஒரு கற்பனையே என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் கா. சந்திரசேகரன் வழக்குத் தொடுக்க தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர்







பி. விஜயராணி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை மகளிர் கல்லூரி, வழக்கை மறுத்துச் சிறப்பித்தார். இதற்கு நடுவராகத் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். இவ்விழாவினையொட்டி மாணாக்கர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. பேச்சுப்போட்டியில் முறையே விக்னேஷ்குமார் (I B.Sc. Physics), க. யோகதனம் (I M.A English) மற்றும் செ. தயாநிதி (II M.A. Tamil) – முதல், இரண்டு, மூன்று பரிசுகளும்; கவிதைப்போட்டியில் முறையே மு. சுரேந்திரன் (II M.A. Tamil), க. ஜெயக்குமார் (I M.A. Tamil) மற்றும் தி. தினேஷ் (I M.A English) – முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் பரிசுகளை வழங்கினார். முன்னதாகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் வரவேற்றார். தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் ப. நல்லுசாமி நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது. நிகழ்ச்சியைத் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அ. சின்னதுரை தொகுத்து வழங்கினார்.



# திருவள்ளுவர் தினம் மற்றும் நூல் வெளியீட்டு விழா

தேதி : 11 ஜனவரி, 2018

இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

---


11.01.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன்விழாவையொட்டித் தமிழ்த்துறையின் சார்பாகத் 'திருவள்ளுவர் தினம்' மற்றும் 'நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் பி.கந்தசாமி வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் துரை. இரவிக்குமார் எழுதிய ஆண் பேசும் பெண்ணியம், மூன்றாம் பிறை, யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியம் - எழுத்து ஆகிய நான்கு நூல்களை மேனாள் கண்காணிப்பாளர் காக்கிப்பூ விஜயராகவன் வெளியிட்டார். மேனாள் கலால் துறை ஆணையர் சி.க.கருப்பண்ணன் நூல்களைப் பெற்றுக் கொண்டார். நாமக்கல் தமிழ்ச்சங்க இணைச் செயலர் திருக்குறள் திலகம் ராசாக்கவுண்டர் சிறப்புரையாற்றினார். நூல்கள் குறித்து தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன், உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ. சின்னரை, முனைவர் க. பூபதி ஆகியோர் விமர்சனம் செய்தனர். நூலாசிரியர் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் துரை. இரவிக்குமார் நன்றியுரையாற்றினார். திருவள்ளுவர் தினத்தையொட்டிப் பொங்கல் வைத்து மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகத் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் திறம்படச் செயல்பட்டார்.













## தமிழ்த்துறையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டம்

தேதி : 07 பிப்ரவரி, 2018

இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

---

07.02.2018 அன்று தமிழ்த்துறையில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். தமிழ்ப் பேராசிரியர்கள் முனைவர் சு. அன்பரசன், முனைவர் பி. கந்தசாமி, முனைவர் க. பூபதி, முனைவர் து. இரவிக்குமார் ஆகியோர் மாணவர்கள் நலன் குறித்துப் பேசினர். இறுதியாக கௌரவ விரிவுரையாளர் திரு. ந. சேகர் நன்றியுரையாற்றினார்.





# நம்பியகப்பொருள் இலக்கணத்தை எளிமையாகக் கற்பிப்பது எப்படி?

தேதி : 09 பிப்ரவரி, 2018, இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்







09.02.2018 அன்று தமிழ்த்துறையில் நம்பியகப்பொருள் இலக்கணத்தை எளிமையாகக் கற்பிப்பது எப்படி? என்ற தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். தமிழ் உதவிப் பேராசியர்கள் முனைவர் பி. கந்தசாமி தலைமை வகித்தார். முனைவர் கா. சந்திரசேகரன் வரவேற்றார். முனைவர் து. இரவிக்குமார் நன்றியுரையாற்றினார்.

# மதுரை உலகத் தமிழச் சங்கமும் – நாமக்கல் மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறையும் இணைந்து நடத்திய தமிழாசிரியருக்கான புத்தாக்கப் பயிற்சி

நாள்: 27 பிப்ரவரி, 2018, இடம்: கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்.




நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டத்தின் நிகழ்வாக 27.02.2018 அன்று மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் நாமக்கல் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து நடத்திய தமிழாசிரியர்களுக்கான புத்தகப் பயிற்சியில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் தமிழ் இலக்கியத்தில் தொன்மையும் நீட்சியும் என்ற தலைப்பிலும் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணர்தல் என்ற தலைப்பிலும் பயிற்சியளித்தனர்.









## விளைத்திட்பம்




## எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்

தேதி : 28 பிப்ரவரி, 2018
இடம் : தமிழ்த்துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

28.02.2018 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன்விழாவையொட்டித் தமிழ்த்துறையின் சார்பாகச் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன் முன்னிலை வகித்தார். முனைவர் ப. நல்லுசாமி அறிமுகவுரையாற்றினார். சிறப்பு விருந்தினராகக் கும்பகோணம் அரசு ஆடவர் கலைக்கல்லூரித் தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் மு. காளிமுத்து எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழி வாற்றுகையில் மானிடப் பிறவி உயர்ந்த பிறவி அதனால் மனிதர்களை வாழ்த்தப் பழக வேண்டும். நாம் பிறந்ததற்கு நோக்கம் இருக்க வேண்டும். நோக்கம் இல்லையென்றால் வாழ்ந்து பயனில்லை. மாணவர்களாகிய நீங்கள் ஆசையை வளர்த்துக்கொண்டு படிக்க வேண்டும். அப்போதுதான் அந்த ஆசை நிறைவேறும். இலட்சியத்தைக் கனவு காண வேண்டும். நல்ல எண்ணங்களை நினைக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்றதோடு புராணக்கதைகளையும், கவிஞர்களின் அறிவுரைகளையும் கூறினார். முன்னதாகத் தமிழ் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ. சின்னதுரை வரவேற்க முனைவர் து. இரவிக்குமார் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது.

# ஆங்கிலத்துறை




## ஆங்கிலத்துறை
## இலக்கிய மன்றம் (Literary Association)

நாள் : 07 பிப்ரவரி, 2018
இடம் : கலையரங்கம், அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் 07.02.2018 அன்று நடைபெற்ற ஆங்கிலத் துறையின் இலக்கிய மன்றம் (Literary Association) துவக்க விழாவில் திரு. V. ஜெயபால், ஆங்கிலத் துறைப் பேராசிரியர், புனித வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். துறைத் தலைவர் திரு. கொ. சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாணவன் ச. சந்தீப் குமார் நன்றி நவின்றார்.






# தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி

நாள் : 25 ஜூலை, 2017
இடம் : அ.அ.அ.கலைக் கல்லூரி, நாமக்கல்



பொருளியல் துறை மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்களால் 25.07.2017 அன்று தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பெற்றது. நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு. அர. அருளரசு இருசக்கர வாகனப் பேரணியைக் கல்லூரி வளாகத்திலிருந்து துவக்கி வைத்தார். முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார். பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மா. குமாரவேலு, முன்னிலை வகித்தார். முனைவர் அ. சக்திவேல் வரவேற்புரை நல்க முனைவர் ம. மாதவன் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் நாமக்கல் மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்ட 200 பேர் கொண்ட குழு இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்தபடி கல்லூரி வளாகத்திலிருந்து பேரணியைத் தொடங்கி நாமக்கல் நகர் முழுவதும் சாலைப் பாதுகாப்பு விதிகள் மற்றும் தலைக்கவசத்தின் அவசியம் குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்தவாறும் பேரணியை நடத்தினார்கள்.







# தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி



நாள் : 25 ஜூலை, 2017

இடம்: பூங்கா திடல், பேருந்து நிலையம் அருகில், நாமக்கல்



25.07.2017 அன்று நாமக்கல் மாவட்டக் காவல் துறை நடத்திய தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி நாமக்கல் பேருந்து நிலையம் அருகில் உள்ள பூங்கா திடலில் நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் துவக்கி வைத்தார். பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மா. குமாரவேலு தலைமையிலும் துறைப் பேராசிரியர்கள் முன்னிலையிலும் பொருளியல் துறை மாணவ மாணவிகள் பொதுமக்களுக்குக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் காட்சிகளை விளக்கிக் கூறினர். இந்நிகழ்வின் போது பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் சு. பாலமுருகன் தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டி வந்தவர்களுக்கு திருக்குறள் புத்தகத்தைப் பரிசாக வழங்கினார்.



# "AWARENESS ON FINANCIAL EDUCATION & FINANCIAL PLANNING FOR YOUNG INVESTORS"

நாள் : 23 ஆகஸ்ட், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




23.08.2017 அன்று பொருளியல் துறை மற்றும் **Security Exchange Board of India (SEBI)**யும் இணைந்து **"Awareness on Financial Education - Financial Planning for Young Investor"** என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நடத்தின. இதில் **Dr. N. Chandrasekaran, Rtd. Prof. and All India NAAC Peer Team Member** சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.





# ஒருநாள் சுற்றுலா

நாள் : 29 ஆகஸ்ட், 2017
இடம் : வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல்








நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக 29.08.2017 அன்று பொருளியல் துறை மாணவ மாணவிகள் ஒருநாள் கல்விச் சுற்றுலா சென்றனர். நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககம் சென்னை மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் புதுடெல்லி இணைந்து 'சபதம் மூலம் சாதிப்போம், 2022க்குள் விவசாய வருமானத்தை இருமடங்காக உயர்த்துவோம்'. (நியூ இந்தியா மூவ்மெண்ட் 2017-2022) என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் பொருளியல் துறை மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு வேளாண் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள், மண்வளத்தைப் பாதுகாக்கக் கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறைகள், வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்தல், தேனீ வளர்ப்பு முறைகள், கலப்பின நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பற்றிய பயிற்சிகளைப் பெற்றனர்.

# உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி

நாள் : 30 ஆகஸ்ட், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்





30.08.2017 அன்று அணியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 200- க்கும் மேற்பட்ட 12 ஆம் வகுப்பு கலைப்பிரிவு மாணவ மாணவியர்களுக்கு ஒருநாள் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி என்ற தலைப்பில் பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மா. குமாரவேலு, பேராசிரியர்கள் முனைவர் ம. மாதவன், பேரா சு. பாலமுருகன், முனைவர் அ. சக்திவேல், முனைவர் த. மாரிச்சாமி மற்றும் பேரா இரா. பன்னீர்செல்வம் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு விளக்கமாகக் கூறினர்.

INSIDE HIGHER ED CAREERS

# பாராட்டு விழா

**தடகளப் போட்டி வெற்றியாளர்களுக்கு**

நாள் : 26 அக்டோபர், 2017

இடம் : பொருளியல் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்











பொருளியல் துறையைச் சேர்ந்த மாணவி S. சுகன்யா (III B.A.) மற்றும் மாணவன் D. சக்திவேல் (I B.A.) ஆகிய இருவரும் தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றமையைப் பாராட்டும் விதமாக 26.10.2017 அன்று பாராட்டு விழா நடைபெற்றது.

ஒசூர். M.G.R. கல்லூரியில் 23-25 அக்டோபர், 2017' ல் நடைபெற்ற பல்கலைகழக அளவிலான 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் மாணவி S. சுகன்யா வெண்கலப் பதக்கம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

10.10.2017 அன்று நமது கல்லூரி நடத்திய பொன்விழா ஆண்டு மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் S. சுகன்யா முதலிடம் பெற்றார். இதே போட்டியில் ஆடவர் பிரிவில் துறை மாணவன் D. சக்திவேல் மூன்றாம் இடம் பெற்றார்.

# பெற்றோர்- ஆசிரியர் கூட்டம்

நாள் : 07 பிப்ரவரி, 2018

இடம் : பொருளியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




07.02.2018 அன்று பொருளியல் துறையில் பெற்றோர் - ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர் கலந்துகொண்டு மாணவ மாணவியரின் கல்வி முன்னேற்றம், கல்லூரியின் கட்டமைப்பு, எதிர்காலத் திட்டம், வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடினர்.








## பொங்கல் விழா

தேதி: 11 ஜனவரி, 2018
இடம்: பொருளியல் துறை,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

11.01.2018 அன்று பொருளியல் துறையில் சமத்துவப் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்குப் பொருளியல் துறைத்தலைவர், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நமது கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





## மென் திறன் பயிற்சி

தேதி: 01 மார்ச், 2018
இடம்: பொருளியல் துறை,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

அன்று பொருளியல் துறை மாணவர்களுக்கு மென் திறன் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் பயிற்சிக் கையேடுகளை வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்வில் பொருளியல் துறைத் தலைவர், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.






# தொழிற்கல்விப் படிப்புகளில் (CA., ICWA., ACS., etc.) எவ்வாறு வெற்றிபெறுவது

நாள் : 03 பிப்ரவரி, 2018

இடம் : வணிகவியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




வணிகவியல் துறையில் 03.02.2018 அன்று தொழிற்கல்விப் படிப்புகளில் (CA, ICWA, ACS, etc) எவ்வாறு வெற்றிபெறுவது என்ற தலைப்பில் சிறப்பு வழிகாட்டி நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆடிட்டர் மு.ஏ. சதீஷ்குமார் உரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். துறைத்தலைவர் முனைவர் க. ராஜ்குமார் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். நன்றியுரையை முனைவர் மா. மணிவண்ணன் வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.






# வங்கித்துறையில் வாய்ப்புகளும் சவால்களும்

கருத்தரங்கு

நாள் : 05 பிப்ரவரி, 2018

இடம் : வணிகவியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்










வணிகவியல் துறையில் 05.02.2018 அன்று வங்கித் துறையில் வாய்ப்புகளும், சவால்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக லத்துவாடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் திருமதி. வேலுமணி வெங்கடாசலம் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. கீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். துறைத் தலைவர். முனைவர் க. ராஜ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். நன்றியுரையை முனைவர் தீ.க. செந்தில்குமார் வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

# பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு

நாள் : 06 பிப்ரவரி, 2018
இடம் : வணிகவியல் துறை
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்










வணிகவியல் துறையில் 06.02.2018 அன்று பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். முனைவர் கா. காசிலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். துறைத்தலைவர் முனைவர் க. ராஜ்குமார் தலைமையுரையாற்றினார். இவ்விழாவில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் நினைவுப்பரிசு வழங்கினார். இவ்விழாவில் மாணவ, மாணவிகளின் பெற்றோர் மற்றும் துறை உதவிப் பேராசிரியாகள் கலந்து கொண்டனர். நன்றியுரையை முனைவர் இரா. அன்பழகன் அவர்கள் வழங்க விழா இனிதே நிறைவுபெற்றது.









# தேசிய பேரிடர் மேலாண்மை

நாள்: 09 பிப்ரவரி, 2018
இடம்: வணிகவியல் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

வணிகவியல் மற்றும் வணிக நிர்வாகத்துறை சேர்ந்து 09.02.2018 அன்ற தேசிய பேரிடர் மேலாண்மை என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் நடத்தினர். இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தென்மண்டலப் பயிற்சி அலுவலர் திரு. A. ஆறுமுகம் கலந்து கொண்டு மாணவ, மாணவியருக்கு பேரிடர் காலங்களில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளுக்குச் செய்முறைப் பயிற்சியும், விளக்கமும் அளித்தார். இவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரை வழங்கினார். வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் க. ராஜ்குமார் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் தெ. காஞ்சனா வணிக நிர்வாகத் துறைத்தலைவர் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் வணிகவியல் மற்றும் வணிக நிர்வாகத்துறையைச் சார்ந்த உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். முனைவர் வெ. ராஜேஸ்வரி நன்றியுரை வழங்க, விழா இனிதே நிறைவு பெற்றது.

# வாழ்க்கை வாழ்வதற்கே

நாள் : 12 பிப்ரவரி, 2018
இடம் : வணிகவியல் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

வணிகவியல் துறையில் 12.02.2018 அன்று வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தலைப்பில் கௌரவ விரிவுரை நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில் டாக்டர். ஆனந்த் ராமசாமி சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். துறைத்தலைவர் முனைவர் க. ராஜ்குமார் வரவேற்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துறை உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். நன்றியுரையை முனைவர் க. அருண்முகில் வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.














# போலி நிதிநிறுவனங்களின் மோசடி பற்றிய விழிப்புணர்வு

நாள் : 17 பிப்ரவரி, 2018
இடம் : வணிகவியல் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

வணிகவியல் துறையில் 17.02.2018 அன்று நாமக்கல் பொருளாதாரக் குற்றப் பிரிவுத் துறை – II மற்றும் வணிகவியல் துறை இணைந்து நடத்திய போலி நிதிநிறுவனங்களின் மோசடி பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக நாமக்கல் பொருளாதாரக் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு. ஆ. வேலு மற்றும் சென்னை உயாநீதிமன்ற மற்றும் டெல்லி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். செந்தில் வடிவேலன் சிறப்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரை ஆற்றினார். துறைத்தலைவர் முனைவர் க. ராஜ்குமார் வரவேற்பரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் துறை உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ. மாணவிகள் கலந்து கொண்டனர். நன்றியுரையை முனைவர் தீ.க. செந்தில்குமார் வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.




## கல்விச் சுற்றுலா

நாள் : 10 மார்ச், 2018
இடம் : BENCH MARK
தேயிலை உற்பத்தித் தொழிற்சாலை,
உதகை.



வணிகவியல் துறை சார்பாக 10.03.2018 அன்று கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. இதில் 45 மாணவ, மாணவியர் மற்றும் துறைப் பேராசிரியர்கள் 7 பேர் கலந்து கொண்ட கல்விச் சுற்றுலா மலைகளின் அரசி, உதகையில் உள்ள BENCH MARK தேயிலை உற்பத்தித் தொழிற்சாலையைப் பார்வையிட்டனர். அதில் அவர்களுக்குத் தேயிலை உற்பத்தி, தயாரிப்பு, சந்தைப்படுத்துதல் பற்றிய விவரங்கள் நேரடியாக விளக்கப்பட்டன. இது மாணவ, மாணவிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. மேலும், அங்குள்ள சுற்றுலாத் தலங்களான தொட்டபெட்டா மற்றும் தாவரவியல் பூங்கா ஆகிய இடங்களைப் பார்வையிட்டு மாணவ, மாணவிகள் மகிழ்ச்சியும், பயனும் அடைந்தனர்.





# வணிக நிர்வாகத்துறை





## வாழ்வைத் திட்டமிடுதல்

தேதி : 09 ஆகஸ்ட், 2017
இடம் : வணிக நிர்வாகத் துறை,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்




வணிக நிர்வாகவியல் துறை சார்பாக 09.08.2017 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்வைத் திட்டமிடுதல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இறுதியில், மாணவர்களிடையே உரையாடி, அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார் சேலம் பெரியார் பல்கலைக்கழக வணிக மேலாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் R. சுப்பிரமணியபாரதி.



# எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான சிறந்த முறைகள்

என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு


தேதி : 11 ஆகஸ்ட், 2017

இடம் : வணிக நிர்வாகவியல் துறை,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்




வணிகநிர்வாகத் துறை விழாவில் முன்னாள் மாணவர்கள் திரு. M. நல்லுசாமி, இயக்குநர், Day by Day Life Style Products, கோயமுத்தூர் மற்றும் திரு. விஜயராகவன் அகியோர் 11.08.2017 அன்று நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவில் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான சிறந்த முறைகள் என்ற தலைப்பில் மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார்கள்.











## வானொலி விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேதி : 23 ஆகஸ்ட், 2017

இடம் : வணிக நிர்வாகத் துறை,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

23.08.2017 அன்று முசில் வானொலி பண்பலை நிகழ்ச்சியில், வணிக நிர்வாகவியல் துறை மாணவ / மாணவியர் கலந்துகொண்டு டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வைச் சிறுகதை, கவிதை, பாட்டு மற்றும் நாடகங்கள் மூலம் ஏற்படுத்தினர்.





## மரம் நடும் விழா

தேதி : 18 செப்டம்பர், 2017

இடம் : அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

வணிக நிர்வாகவியல் துறையின் சார்பில் 18.09.2017 அன்று கல்லூரி வளாகத்தில் மாசற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் வணிக நிர்வாகவியல் துறையின் மாணவர்கள் கல்லூரி வளாகம் முழுவதும் மரக்கன்றுகளை நட்டனர்.







# தூய்மை இந்தியா திட்டம்

தேதி : 25 செப்டம்பர், 2017

இடம் : அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

25-09-2017 அன்று வணிக நிர்வாகவியல் துறை மாணவ / மாணவிகள் தூய்மைஇந்தியா திட்டத்தின்கீழ் கல்லூரி வளாகத்தின் பல பகுதிகளில் தூய்மைப் பணியை மேற்கொண்டனர்.







# தூய்மை இந்தியா திட்டம்

தேதி : 26 அக்டோபர், 2017

இடம் : அ.அ.அ. கலைக்கல்லூரி,
லத்துவாடி கிராமம், நாமக்கல்.







26.10.2017 அன்று வணிக நிர்வாகவியல் துறை மாணவ / மாணவியர் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டு டெங்கு விழிப்புணர்வுப் பேரணி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியிலிருந்து லத்துவாடி வரை நடைபெற்றது. துறைத்தலைவர் மற்றும் மாணவ / மாணவியர் டெங்கு விழிப்புணர்வு பற்றிய பிரசுரங்களை ஊர்ப் பொதுமக்களுக்கு வழங்கினர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதாரத் துறையுடன் இணைந்து லத்துவாடிப் பள்ளி மாணவ / மாணவியருக்கு நிலவேம்புக் கசாயம் வழங்கப்பட்டது.



# தூய்மை இந்தியா விழிப்புணர்வு நிகழ்ச்சி


தேதி : 30 ஜனவரி, 2018
இடம் : உயர்நிலைப் பள்ளி, லத்துவாடி கிராமம், நாமக்கல்











30.01.2018 அன்று தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் லத்துவாடிப் பள்ளி மாணவ / மாணவிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பற்றியும், தூய்மையாக இருத்தல் பற்றியும் துறைப் பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவ / மாணவிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும், பள்ளி மாணவ / மாணவிகளுக்குத் தூய்மை இந்தியா என்ற தலைப்பின்கீழ் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் இறுதியாக, மாணவ / மாணவிகளை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.




## பேரிடர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேதி : 09 பிப்ரவரி, 2018
இடம் : வணிக நிர்வாகத் துறை,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

09.02.2018 அன்று தேசிய பேரிடர் விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தேசிய பேரிடர் மேலாண்மைக் கழகத்தின் பயிற்சியாளர் திரு. A. ஆறுமுகம் கல்லூரி முதல்வர் தலைமையில் ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மாணவர்களுக்குத் தீ மற்றும் நிலநடுக்கம் போன்ற ஆபத்துகளில் இருந்து தவிர்த்துக்கொள்வது பற்றி செய்முறைப் பயிற்சியின் மூலம் வழிகாட்டினார்.






## பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

தேதி : 10 பிப்ரவரி, 2018
இடம் : வணிக நிர்வாகவியல் துறை,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

10.02.2018 அன்று வணிக நிர்வாகவியல் துறையின் பெற்றோர் - ஆசிரியர் கூட்டம் துறைத் தலைவர் முனைவர் தெ. காஞ்சனா தலைமையில் நடைபெற்றது.










# CAMPUS TO CORPORATE

## என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறை

தேதி : 12 பிப்ரவரி, 2018

இடம் : வணிக நிர்வாகத் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

12.02.2018 அன்று வணிக நிர்வாகவியல் மற்றும் வணிகவியல் துறை மாணவ / மாணவிகளுக்கு Campus to Corporate என்ற தலைப்பில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் மற்றும் துறை ஆசிரியர்களின் தலைமையில் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது. முனைவர் K. சுசீந்திரன், உதவிப் பேராசிரியர், மேலாண்மைத் துறை, K.S. ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு கல்வி நிறுவனத்தில் பணியாற்றும் அவர் மாணவ / மாணவிகளுக்கு மேலாண்மை சார்ந்த விளையாட்டுகள் மூலம் பல கருத்துகளை வலியுறுத்தினார்.



## நானோ பொருட்கள் இரண்டு-நாள் தேசியக் கருத்தரங்கு

தேதி : 20 - 21 ஜூலை, 2017

இடம் : கல்லூரிக் கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல், இயற்பியல் துறை சார்பில் 20.07.2017 மற்றும் 21.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் நானோ பொருட்கள் என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சுந்தர்மனோகரன் துவக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், அரசு கல்லூரி மாணாக்கர்கள் தங்கள் கஷ்டங்களை மறந்து படிப்பை மட்டும் கவனத்தில் கொண்டு கடினமாக உழைத்தால் அவரவர் துறையில் பெரிய விஞ்ஞானிகளாகிச் சாதனை புரிய முடியும் என்று மாணாக்கர்களை ஊக்கப்படுத்தினார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் ஐதராபாத், மும்பை, கோழிக்கோடு, கவுஹாத்தி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து அழைக்கப்பட்ட விஞ்ஞானிகள் நானோ சம்பந்தமாகத் தங்கள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை விளக்கினார்கள். கருத்தரங்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 130 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

கல்லூரியின் இயற்பியல் துறையைச் சேர்ந்த 75 இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட மொத்தம் 200 பேர் பங்குபெற்றுப் பயன் அடைந்தனர். கருத்தரங்கின் முடிவில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். செயல் ஒருங்கிணைப்பாளர் முனைவா அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ் (இயற்பியல் துறை, உதவி பேராசிரியர், எல்.ஆர்.ஜி அரசு கலைக்கல்லூரி, திருப்பூர்) மற்றும் நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, இயற்பியல் துறைப்பேராசிரியர்கள் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தினர்.

# TNSCST ஆதரவுடன் ஐந்து-நாள் இலவசப் பயிலரங்கம் - கிராமப்புறத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

தேதி : 04 - 06 அக்டோபர், 2017 மற்றும்
09 - 10 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





## முதல் நாள்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மற்றும் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரி, சார்பில் கிராமப்புறத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் ஐந்து நாட்கள் இலவசப் பயிலரங்கம் 04.10.2017 அன்று துவங்கியது. துவக்க நாளன்று காளான் வளர்ப்பு பற்றிய நவீன உத்திகள், காளான் உணவில் உள்ள சத்துக்கள் பற்றி விளக்கப்பட்டது. மேலும், வைக்கோல் காளான், பால் காளான் மற்றும் சிப்பிக் காளான்களை வீட்டில் வளர்க்கும் முறைகள் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிலரங்கிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் முனைவர் எ.ஞா. வெஸ்லி ஜெபசிங் தேவயிரக்கம் (உதவிப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்) மற்றும் முனைவர் செல்வமல்லேஸ்வரன் (இணைப் பேராசிரியர், முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ராசிபுரம்) ஆகியோர் பயிற்சியை நடத்தினர். இப்பயிற்சியில் சுமார் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.







## இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் 05.10.2017 அன்று மண்புழு உரம் தயாரித்தல் பற்றி விளக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்

உயர்திரு. கே.பி.பி. பாஸ்கர் மற்றும் முன்னாள் நகர்மன்றத் தலைவர் திரு. இரா. கரிகாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பயிற்சியைத் துவக்கி வைத்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார்..

பேராசிரியர்கள் முனைவர் மு. விஜயராஜன், முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன் மற்றும் முனைவர் ப. சேகர் (விலங்கியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்) ஆகியோர் பயிற்சியைச் சிறப்புற நடத்தினர். இப்பயிற்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.





## மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் 06.10.2017 அன்று சோப்பு, சோப்பு ஆயில் மற்றும் உணவுக் கலப்படம் பற்றிய விழிப்புணர்வு சார்ந்த விளக்கப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பயிலரங்கிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார்.

வேதியியல் துறைப் பேராசிரியர்கள் திரு. ஆ. லோகநாதன், முனைவர் பொ. மகாலிங்கம் மற்றும் முனைவர் பொ. தமிழரசு (அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்) ஆகியோர் பயிற்சியைச் சிறப்புற நடத்தினர். இப்பயிற்சியில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.







## நான்காம் நாள்



09.10.2017 அன்று புவி வெப்பமயமாதல் - துளசிச் செடி வளர்ப்பின் மூலம் பூமியைக் குளிர்வித்தல், துளசி மற்றும் துளசி மதிப்புக் கூட்டல் பொருள்களின் வியாபார வாய்ப்புகள் குறித்த இலவசப் பயிலரங்கம் நடைபெற்றது. இதில், திரு. துளசி K. பாலசுப்பிரமணியன், நிறுவனர், உலக பசுமை வளர்ச்சிக்குழு, திருச்சிராப்பள்ளி மற்றும் திரு. S.P. ராமலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். கருத்தரங்கில் புவி வெப்பமயமாதலினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் துளசிச் செடி வளர்ப்பின் மூலம் காற்றில் ஆக்ஸிஜனை அதிகரிப்பது போன்ற முக்கிய தகவல்கள் விளக்கப்பட்டன. இப்பயிலரங்கிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. மீனா குமாரி பாய் தலைமை வகித்தார். புள்ளியியல் துறைப் பேராசிரியர்கள் முனைவர் கு. இராஜேந்திரன், திருமதி சா. சுஜாதா மற்றும் வணிகவியல் துறைப் பேராசிரியர் முனைவர் க. ராஜ்குமார் ஆகியோர் பயிலரங்க அமைப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். இப்பயிலரங்கில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.









### ஐந்தாம் நாள்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மற்றும் அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரி, நாமக்கல் சார்பில் கிராமப்புறத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் ஐந்து நாட்கள் இலவசப் பயிலரங்கம் 04.10.2017 அன்று துவங்கி 10.10.2017 அன்று நிறைவுற்றது.

நிறைவு நாளன்று சூரிய ஒளியில் இயங்கும் சாதனங்களின் பயன்பாடு மற்றும் அரசின் மானியங்கள் என்ற தலைப்பில் பயிலரங்கு நடைபெற்றது. இப்பயிலரங்கிற்குச் சிறப்புப் பயிற்சியாளராக நிர்வாக இயக்குநர், நேஷனல் மரபுசாரா ஆற்றல் மையம், சேலம் திரு. வெ. மனோஜ்குமார், கலந்து கொண்டு சூரிய ஒளியில் இயங்கும் பல்வேறு மாதிரி சாதனங்களைக் கொண்டு பயிற்சியை நடத்தினார்.



இப்பயிலரங்கிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். நிறைவு விழாவிற்குத் திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் முனைவர் ரா. மணி, கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பேராசிரியர்கள் முனைவர் கோ. மகேந்திரன், முனைவர் வீ. வேலுசாமி, முனைவர் து. சசிக்குமார் மற்றும் முனைவர் இரா. கோபி ஆகியோர் நிறைவுவிழா ஏற்பாடுகளைச் செய்தனர். இப்பயிற்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.








# பொங்கல் விழா

தேதி : 11 ஜனவரி, 2018
இடம் : இயற்பியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

11.01.2018 அன்று இயற்பியல் துறையில் சமத்துவப் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு இயற்பியல் துறைத்தலைவர், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நமது கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# CAREER GUIDANCE FOR PHYSICS STUDENTS & GROWING TRENDS IN MEDICAL PHYSICS

## என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு

தேதி : 23 ஜனவரி, 2018, இடம் : இயற்பியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





பண்பாட்டையும் அறிவையும் போற்றி வளர்க்கும் அறிஞர் அண்ணா அரசு கலைக்-கல்லூரியின் 50-ஆம் ஆண்டுப் பொன்விழாவை முன்னிட்டு இயற்பியல் துறையில், முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் சு. பங்காரு அவர்கள் வழிகாட்டலின்படியும் மற்றும் துறை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் 23-01-2018 செவ்வாய்கிழமை அன்று மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டிற்கு உதவும்CAREER GUIDANCE FOR PHYSICS STUDENTS & GROWING TRENDS IN MEDICAL PHYSICS என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முனைவர் N. நந்தகுமார்,



M.Sc., M.Phil., Ph.D. (Medical Robotics) அவர்கள் திறம்பட கருத்துக்களைக் கூறினார். அதுமட்டுமல்லாது அனைத்து மாணவ மாணவியருக்கும் எளிதில் புரியும் பொருட்டு சில காணொளிக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. இக்கருத்தரங்கு மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.






# பெற்றோர் - ஆசிரியர் சிறப்பு சந்திப்புக் கூட்டம்

தேதி : 02 பிப்ரவரி, 2018
இடம் : கலையரங்கம்,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் பொன்விழா ஆண்டை முன்னிட்டு இயற்பியல் துறையின் சார்பாப் பெற்றோர் - ஆசிரியர் சிறப்பு சந்திப்புக் கூட்டம் 02.02.2018 அன்று காலை 11.00 மணியளவில் கல்லூரிக் கலை அரங்கத்தில் இயற்பியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் சு. பங்காரு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளம்அறிவியல், முதுஅறிவியல் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர். இவ்விழாவில் இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் ந. பழநிவேலு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் மாணவர்களின் வருகைப்பதிவு, கல்வி கற்கும் திறன் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவது பற்றிப் பெற்றோர்களிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விழாவின் நிறைவில் பேராசிரியர் முனைவர் இரா. கோபி நன்றியுரை வழங்கினார்.






# மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் சிறப்புப் பயிற்சி வகுப்பு

தேதி : 12 பிப்ரவரி, 2018


இடம் : மோகனூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் அணியாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, நாமக்கல்

நமது கல்லூரியின் பொன்விழாக் கொண்டாட்டங்களின் ஒரு நிகழ்வாக 12.02.2018, திங்கட்கிழமைஅன்று மோகனூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் அணியாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இரு பள்ளிகளில் இயற்பியல் துறையைச் சார்ந்த முனைவர் இரா. பாலசுப்ரமணியன், முனைவர் ந. பழநிவேலு, முனைவர் ந. சேதுபதி மற்றும் முனைவர் வீ. வேலுசாமி ஆகியோர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான மேற்படிப்பு வழிகாட்டுதல் குறித்த விவரங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தினார்கள். மேற்கண்ட பயிற்சியில் பள்ளி மாணவ, மாணவியர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கலந்துகொண்டதோடு அல்லாமல் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு பெற்றனர். இவ்விரு நிகழ்வுகளிலும், அப்பள்ளிகளின் தலைமையாசிரிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தன.










## FAREWELL DAY FUNCTION

தேதி : 21 பிப்ரவரி, 2018
இடம் : கல்லூரிக் கலையரங்கம்,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்




21.02.2018 அன்று இயற்பியல் துறையில், இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு (III B.Sc.) மற்றும் முது அறிவியல் இரண்டாம் ஆண்டு (II M.Sc.) ஆகிய மாணவர்களை இணைத்து FAREWELL DAY நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய், இயற்பியல் துறைத் தலைவர் முனைவர் சு. பங்காரு மற்றும் துறைப் பேராசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரைகளையும், வாழ்த்துகளையும் வழங்கிச் சிறப்பித்தனர்.








# தேசிய அறிவியல் தின விழா

தேதி : 28 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி சர். சி. வி. இராமன் தனது கண்டுபிடிப்பை வெளியிட்ட தினமான பிப்ரவரி மாதம் 28ம் நாள் மாணவர்களின் புதிய கண்டுபிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது. நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன்விழா ஆண்டின் சிறப்பு நிகழ்வாகத் தேசிய அறிவியல் தினம் இயற்பியல் துறைசார்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலச் செயலர் திரு. எம். தியாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு எளிய அறிவியல் சோதனைகளை மாணவ, மாணவிகளுக்குச் செய்முறை விளக்கம் மூலமாக செய்து காட்டினார்.

மேலும், அறிவியல் என்பது நம்மைச்சுற்றி நடைபெறும் அனைத்திலும் உள்ளது. அறிவியல் அறிவியலாக இருந்தபொழுது இயற்கையோடு இணைந்து மனிதன் நோயற்ற வாழ்வை வாழ்ந்தான். ஆனால், அறிவியல் தொழில்நுட்பமாக வளர்ந்த பிறகு இயற்கை வளங்கள் மறைந்து ஆபத்து மிகுந்த பெயர் தெரியாத நோய்களோடு வாழ்கிறான். எனவே, வருங்கால இந்தியாவையும் உலகையும் ஆபத்திலிருந்து மீட்டெடுக்க மாணவர்கள் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தினார். மேலும், மேஜிக் எனப்படும் மாயாஜால நிகழ்வுகளில் மறைந்துள்ள அடிப்படை அறிவியலைப் புரிந்துகொள்கின்ற வகையில் மாணவர்களைச் செய்துகாட்டச்சொல்லி, விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

முன்னதாக, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் - நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிக் கிளையினைத் துவக்கி வைத்தார். விழாவில் முனைவர் சு. பங்காரு இயற்பியல் துறைத்தலைவர் முன்னிலை வகிக்க முனைவர் இரா. பாலசுப்ரமணியன் வரவேற்றார். விழாவிற்கான ஏற்பாடுகளை இயற்பியல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர். முனைவர் ந. சேதுபதி நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுபெற்றது.

## மரம் நடும் விழா

நாள் : 04 அக்டோபர், 2017

இடம் : கல்லூரி வளாகம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்





04.10.2017 அன்று கல்லூரியில் பசுமைப்புரட்சி ஏற்படுத்தும் நோக்கத்துடன் சுத்தமான காற்றைக் கொடுக்கும் வேப்பமரக்கன்று நடும் நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் முன்னிலையில் நடைபெற்றது. அதுசமயம் கல்லூரி முதல்வரிடமிருந்து வளாகத்தில் நூறு எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் வேதியியல் துறை சார்பாக உதவிப் பேராசிரியர் முனைவர் பொ. தமிழரசு மூலமாகப் பெறப்பட்டன. பின்னர், இம்மரக்கன்றுகள் கவனத்துடன் நடப்பட்டுப் பாதுகாப்புடன் வளர்க்கப்படுகின்றன.


# வரவேற்பு விழா மற்றும் வேதியியல் மன்றக் கருத்தரங்கு

நாள் : 13 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



2017, அக்டோபர் 13, அன்று 2017-18 ஆம் ஆண்டு வேதியியல் துறையில் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர்ந்த மாணவர்களை வரவேற்று ஆசிரியர்கள் மற்றும் துறை மாணவர்களுடன் இடையீட்டுக் கலந்துரையாடலும், இதனைத் தொடர்ந்து வேதியியல் மன்றக் கருத்தரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



வேதியியல் மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்க துறைத்தலைவர் திரு. ஆ. லோகநாதன் வரவேற்க, கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையேற்றுத் துவக்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார்.

கருத்தரங்கத்தின் சிறப்புக் கருத்தியலராக இராசிபுரம், திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பொ. பெரியசாமி கரிமவேதிவினைகளின் அடிப்படைகள் என்ற தலைப்பில் உரையாற்றினார். கரிமவேதிவினைககளின் வகைகள், அவை நடைபெறுவதற்கான அடிப்படைக் காரணங்கள் மற்றும் நடைபெறும் வழிமுறைகள் பற்றி ICT-யின் நவீன உபகரணங்கள் மூலமாக எளிமையாகவும், தமிழ் மற்றும் ஆங்கில வழி மாணவர்கள் பயன்பெறும் விதத்திலும் உரை நிகழ்த்தினார்.

வேதியியல் மன்ற மாணவர்கள் நன்றி தெரிவிக்க நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.


# நிறமாலையியல் அடிப்படைக் கொள்கை மற்றும் பயன்பாடுகள்

நாள் : 13 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் விதமாக வேதியியல் துறையின் சார்பாக நிறமாலையியல் அடிப்படைக் கொள்கை மற்றும் பயன்பாடுகள் என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் 13.10.2017 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முனைவர் பொ. பெரியசாமி, வேதியியல் துறை, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம், அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேதியியல் துறையைச் சார்ந்த பேராசிரியர்கள், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.



# உலக மண்வள மேம்பாட்டுத் தினம்

நாள் : 05 டிசம்பர், 2017
இடம் : அரசு வேளாண்மை அறிவியல் கல்லூரி, நாமக்கல்



அரசு வேளாண்மை அறிவியல் கல்லூரியில் (நாமக்கல்) உலக மண்வள மேம்பாட்டுத் தினத்தையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் வேளாண்மை அறிவியல் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மையில் சிறந்த நிபுணர்கள் பல்வேறு கருத்துகளைப் பல கல்லூரி மாணவர்களுக்கும் ஊர்ப் பொது மக்களுக்கும் ஏற்றாற்போல பல அரிய தகவல்களை அளித்தனர். மேலும், ஆடுவளர்ப்பு, மீன் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு, அசெல்லா வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, உரம் தயாரிப்பு, மண் வகைகள், மண் பரிசோதனை இயந்திரம், தானியங்கள் பயிரிடும் முறை, பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் கலப்பு உரங்களின் கலப்பு விகிதம் ஆகியவற்றைப் பற்றிப் பார்த்தும் கேட்டும் தெரியாத பல தகவல்கள் அறிய வாய்ப்பாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் வேதியியல் துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# QUIZ

# கல்லூரிகளுக்கிடையேயான
# வினாடி வினா நிகழ்ச்சி

நாள் : 03 ஜனவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்







பொன்விழா நிகழ்வையொட்டி நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான வினாடி வினாப் (இளநிலை) போட்டியினைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தொடங்கி வைத்த காட்சி

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரிப் பொன்விழா நிகழ்வையொட்டி கல்லூரிகளுக்கிடையே வினாடி வினாப் (இளநிலை மற்றும் முதுநிலை வேதியியல்) போட்டி 03.01.2018 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் துறைத்தலைவர் திரு. ஆ. லோகநாதன் வரவேற்புரை வழங்க கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த வினாடி வினாப் போட்டியில் இருபதுக்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டி தகுதிச்சுற்று மற்றும் வாய்மொழி தேர்வு என நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. முனைவர் பொ. தமிழரசு, உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர் பொ. மகாலிங்கம், உதவிப் பேராசிரியர் முறையே இளநிலை வேதியியல் மற்றும் முதுநிலை வேதியியல் வினாடி வினாப் போட்டிகளுக்கான ஒருங்கிணைப்பாளர்களாக சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்திருந்தனர்.

# Recent Trends in Chemical Research and Nano-Science

## ஒருநாள் கருத்தரங்கு

நாள் : 05 ஜனவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




மாநில அளவிலான கருத்தரங்கத்தைத் துவக்கிவைத்த கல்லூரி முதல்வர் முனைவர் அ. லிலா குளோரி பாய் அவர்களைக் கௌரவிக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பொ. சிவக்குமார் அருகில் முதல் அமர்வு சிறப்பு அழைப்பாளர் முனைவர் வி. சிவக்குமார்.




மாநில அளவிலான கருத்தரங்கத்தின் நிறைவுப் பகுதியில் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் கு. நடராசன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றும் காட்சி.

கல்லூரியின் பொன்விழா நிகழ்வையொட்டி வேதியியல் துறை சார்பாக மாநில அளவிலான கருத்தரங்கம் "Recent Trents in Chemical Research and Nanoscience" என்ற தலைப்பில் 05.01.2018 அன்று நடத்தப்பட்டது. வேதியியல் துறைத் தலைவர் திரு. ஆ. லோகநாதன் வரவேற்புரை வழங்க கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் வாழ்த்துரை வழங்கிக் கருத்தரங்கக் கட்டுரைகள் அடங்கிய புத்தகத்தை வெளயிட்டுக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார்.

இறுதியாக கட்டுரை சமர்ப்பிப்புச் சான்றிதழ். அறிவியல் நிபுணர்களால் தேர்வு செய்யப்பட்ட சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குச் சிறப்புப் பரிசும், கருத்தரங்கில் கலந்து கொண்டவாகளுக்குப் பங்களிப்புச் சான்றிதழும் இணை இயக்குநர் மற்றும் கல்லூரி முதல்வரால் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் தொழில் முனைவோர், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மாணவ மாணவியர் என முந்நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டார்.

இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பொ. சிவக்குமார் நன்றியுரை வழங்க கருத்தரங்கம் இனிதே நிறைவுபெற்றது.



மாநில அளவிலான கருத்தரங்கத்தில் கலந்துகொண்டவர்கள்



# பெற்றோர் – ஆசிரியர் கலந்துரையாடல் நிகழ்ச்சி

நாள் : 17 பிப்ரவரி, 2018
இடம் : வேதியியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

வேதியியல் **துறை** மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர் கலந்துரையாடல் 17.02.2018 அன்று வேதியியல் துறையில் நடைபெற்றது. நிகழ்வின் வேதியியல் துறைத் தலைவர் திரு. ஆ. லோகநாதன் வரவேற்புரையாற்றினார். மாணவர்களின் பெற்றோர் கருத்து தெரிவிக்கையில் வகுப்புகள் சிறப்பாக நடைபெறுவதாகவும் ஆசிரியர்கள் கண்டிப்புடன் **இருப்பதோடு** தோழமையுடனும் உதவிசெய்கிறார்கள் என்பதை அறிந்துள்ளோம். அதேநேரத்தில் ஆய்வக வசதியை மேம்படுத்துவதாலும் நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமும் மேலும் சிறப்பாக இத்துறை செயல்படும் என நம்புவதாகக் கருத்து தொவித்துள்ளனர்.

**மாணவர்கள் ஒழுக்கம்** நிறைந்தவர்களாக வளர ஆசிரியர்கள் பொறுப்புடன் கவனித்துக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.






# தாவரவியல் துறை

## மரம் நடும் விழா

தேதி : 11 ஜனவரி, 2018

இடம் : கல்லூரி வளாகம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்




கல்லூரிப் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு 11.01.2018 அன்று தாவரவியல் துறை மற்றும் நாமக்கல் மாவட்ட வனத்துறை இணைந்து நமது கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டனர்.

## மூலிகைத் தோட்டத்திற்கான நுழைவு வாயில் அமைத்தல்

தேதி : 11 ஜனவரி, 2018, இடம் : தாவரவியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



11.01.2018 அன்று முதுநிலை இரண்டாம் ஆண்டு தாவரவியல் துறை மாணவர்களால் மூலிகைத் தோட்டத்திற்கான நுழைவு வாயில் அமைக்கப்பட்டது.

# நுண்நுட்பவியல் என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி

தேதி : 11 ஜனவரி, 2018, இடம் : தாவரவியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்




11.01.2018 அன்று நுண்நுட்பவியல் பற்றிய ஒருநாள் பயிற்சி நடைபெற்றது. இதில் விருதுநகர் VHNSN கல்லூரி தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் P. மேகலிங்கம் அவர்கள் நுண்நுட்பவியலின் பல்வேறு தொழில்நுட்பங்களைத் தாவரவியல் மாணவர்களுக்கு விளக்கினார்.

# பெற்றோர் – ஆசிரியர் சந்திப்பு

தேதி : 05 பிப்ரவரி, 2018, இடம் : தாவரவியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



05.02.2018 அன்று தாவரவியல் துறையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு நடைபெற்றது.

# வினாடி வினா நிகழ்ச்சி

தேதி : 13 பிப்ரவரி, 2018

இடம் : தாவரவியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



கல்லூரிப் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு வினாடிவினா, தாவரங்களுக்குப் பெயர் கண்டறியும் போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கும் நிகழ்ச்சி 13.02.2018 அன்று நடைபெற்றது.







# உயிரியல் முறையில் பிளாஸ்டிக் சுத்திகரிப்பு

ஒருநாள் கருத்தரங்கு

தேதி : 13 பிப்ரவரி, 2018,

இடம் : தாவரவியல் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

கல்லூரிப் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு தாவரவியல் துறை சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் 13.02.2018 அன்று நடைபெற்றது. இதில் தென்கொரியா, சியோல் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த முனைவர் M. கோவர்த்தனன் அவர்கள் உயிரியல் முறையில் பிளாஸ்டிக் சுத்திகரிப்பு என்ற தலைப்பில் கருத்தரங்க உரையாற்றினார். திருச்செங்கோடு KSR பொறியல் கல்லூரி உயிர்தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர் பிலிப்ராபின்சன் அவர்கள் உயிரியல் படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பில் கருத்தரங்க உரையாற்றினார். இதில் தாவரவியல் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



Zoology

# மரக்கன்று நடுதல்

நாள் : 20 ஜூலை. 2017

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி வளாகம். நாமக்கல்



அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 50ஆம் ஆண்டுப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக விலங்கியல் துறை சார்பாக மரக்கன்று நடுதல் நிகழ்ச்சி 20.07.2017 அன்று துறைத்தலைவர் முனைவர் மு. விஜயராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு மரக்கன்றுகள் நடுவது மட்டுமின்றி அவற்றைப் பெரிதாக வளர்த்து மரமாகும் வரை பராமரிப்பது பற்றியும், அதனால் சார்பு சூழ்நிலை மற்றும் மனிதர்களுக்கு விளையும் நன்மைகள் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டது.

மரம் நடுவோம் மழை வளம் காப்போம் நெகிழிப் பயன்பாடு குறைப்போம் எனும் உறுதி மொழியும் எடுக்கப்பட்டது.



# டெங்கு விழிப்புணர்வு

நாள் : 27 ஜூலை, 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்






27.07.2018 அன்று விலங்கியல் துறை சார்பாக டெங்கு விழிப்புணர்வு நிகழச்சி நடத்தப்பட்டது. சுற்றுப்புறச் சூழல் மாசு காரணமாகப் பெருகிவரும் கொசுக்கள் மூலமாகப் பரவிவரும் நோய்கள் குறிப்பாக டெங்கு காய்ச்சல் பற்றித் தெளிவான முறையில் விளக்கப்பட்டது குழுமியிருந்த மாணவ / மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு முனைவர் நா. நாகரத்தினம் அவர்களால் விழிப்புணர்வு உரை வழங்கப்பட்டுச் சுற்றுப்புறச் சூழலலைப் பேணிக்காப்போம் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை தாங்கினார்.

# தொற்றுநோய்கள் பற்றிய கருத்துப்பட்டறை

நாள் : 23 ஜனவரி, 2018,

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



23.01.2018 அன்று விலங்கியல் துறை சார்பாகத் தொற்றுநோய்கள் பற்றிய கருத்துப்பட்டறை கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். இக்கருத்துபட்டறைக்கான ஏற்பாட்டினைத் துறைத் தலைவர் முனைவர் மு. விஜயராஜன் மற்றும் துறை சார்ந்த பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மாவட்டச் சுகாதார மேலாளர் திரு. எம். கார்த்திகேயன் தொற்று நோய்கள் பற்றியும், அவற்றைக் கண்டறியும் முறைகளைப் பற்றியும் தக்க செய்முறைகளோடு விளக்கினார். இக்கருத்துப் பட்டறையில் சுமார் இருநூறு மாணவ மாணவியர் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.





# இரத்த வகை கண்டறியும் முகாம்

நாள் : 24 ஜனவரி & 10 பிப்ரவரி, 2018
இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



24.01.2018 மற்றும் 10.02.2018 ஆகிய தேதிகளில் விலங்கியல் துறை சார்பாக நமது கல்லூரியில் பயிலும் முதலாம் ஆண்டு இளங்கலை, இளம்அறிவியல் மற்றும் முதலாம் ஆண்டு முதுகலை, முதுஅறிவியல் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும், நாமக்கல் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுடன் இணைந்து கட்டணமில்லா இரத்தவகை கண்டறியும் முகாம் நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.



## பெற்றோர் – ஆசிரியர் சந்திப்பு

நாள் : 03 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்








03.02.2018 அன்று விலங்கியல் துறையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கழகச் சந்திப்பு.

## கட்டுரைப் போட்டி

நாள் : 06 பிப்ரவரி, 2018

இடம் : விலங்கியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்





06.02.2018 அன்று பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டதை முன்னிட்டு விலங்கியல் துறை சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் 80-க்கும் மேற்பட்டப் பிற கல்லூரி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



# உயிர் எதிர் பொருட்களின் எதிர்ப்புத் தன்மை

நாள் : 10 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




விலங்கியல் துறை சார்பாக உயிர் எதிர் பொருட்களின் எதிர்ப்புத் தன்மை பற்றிய கருத்தரங்கு 10.02.2018 அன்று கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரை ஆற்றினார். இக்கருத்தரங்குக்கான ஏற்பாட்டினைத் துறைத்தலைவர் முனைவர் மு. விஜயராஜன் மற்றும் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன், முனைவர் ப. சேகர், முனைவர் நா. நாகரத்தினம், முனைவர் மு. செல்லப்பன், முனைவர் மு. பிரதாப் மற்றும் முனைவர் ஆ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர். கருத்தரங்கில் உயிர் எதிர் பொருட்களின் எதிர்ப்புத் தன்மை பற்றி வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (VIT) உயிர் மருத்துவ அறிவியல் துறையைச் சார்ந்த முனைவர் நா. ரமேஷ் உயிர் எதிர்பொருட்கள் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் அவற்றால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அதற்கான மாற்று வழிமுறைகள் பற்றியும் விரிவாக உரையாற்றினார். இக்கருத்தரங்கில் நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டத்தைச் சார்ந்த 250க்கும் மேலான கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# சுற்றுச்சூழல் சங்கம்

நாள் : 21 மார்ச், 2018
இடம் : கலையரங்கம்
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்







அறிஞர் அரசு கலைக்கல்லூரியில் சுற்றுச்சூழல் சங்கம் தொடக்க விழா 21.03.2018 புதன் கிழமை அன்று முனைவர் ப. சேகர் அவர்கள் வரவேற்புரை வழங்க. முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்களின் தலைமை உரையுடன், முனைவர் கே.எஸ். அருள்சாமி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று முனைவர் மு. விஜயராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி முனைவர் நா. நாகரத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன் பொறுப்பாளராக பொறுப்பேற்று சுற்றுச்சூழல் சங்கம் தொடங்கப்பட்டது.

# கணித விளையாட்டுப் போட்டிகள்

தேதி : 07 பிப்ரவரி, 2018
இடம் : கணிதத் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

கணிதத் துறையின் சார்பில் கணித விளையாட்டுப் போட்டிகள் 07.02.2018 அன்று சிறப்பாக நடைபெற்றன. கணிதக் கோலப் போட்டியை முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் துவக்கிவைத்தார். இதில் காங்கேயம் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பி. செந்தில்குமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுக் கணிதப் போட்டிகளைச் சிறப்பாக நடத்தினார்.













# கணித ஆராய்ச்சி மையத் துவக்க விழா

தேதி : 08 பிப்ரவரி 2018
இடம் : கணிதத் துறை, அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்











கணித ஆராய்ச்சி மையத் துவக்க விழா 08.02.2018 அன்று நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரை ஆற்றினார். பெரியார் பல்கலைக் கழக ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் A. முத்துசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்தார். கணிதப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. கணித மேதை ஸ்ரீனிவாச ராமானுஜம் பற்றிய குறும்படமும் திரையிடப்பட்டது.





# கணிதத்துறை பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு


தேதி: 17 பிப்ரவரி, 2018

இடம்: கணிதத் துறை. அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் கணிதத் துறையின் சார்பில் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சந்திப்பு 17.02.2018 அன்று நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரை ஆற்றினார். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெற்றோர் பங்கேற்றனர். துறையின் அனைத்து பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர், மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கையில் வெற்றிக்கான வழிமுறைகள் பற்றிப் பேசினர். குடும்ப வறுமையை உணர்ந்து நன்கு படிக்க வேண்டும் என அறிவுரை கூறப்பட்டது.







## டெங்கு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

நாள்: 18 ஜூலை, 2017, இடம்: அரசு மருத்துவமனை, நாமக்கல்






புள்ளியியல் துறை சார்பாக 18.07.2017 அன்று நாமக்கல் நகரில் டெங்கு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது. புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. இரவிச்சந்திரன் வரவேற்புரை நல்கினார். Dr. M. சரஸ்வதி, இணை இயக்குநர், நலப்பணிகள், அரசு மருத்துவமனை, நாமக்கல், அவர்களும், முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி அவர்களும் கொடி அசைத்து சைக்கிள் பேரணியைத் துவக்கி வைத்தார்கள்.. புள்ளியியல் துறை, உதவிப் பேராசிரியர் திருமதி S. சுஜாதா நன்றியுரை வழங்கினார். புள்ளியியல் துறை மாணவர்கள் மிதிவண்டிகளில் டெங்கு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு பற்றிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அறிவிப்புத் தாள்களை மக்களுக்கு வழங்கியும், அதைப்பற்றி மக்களுக்கு விளக்கிக் கூறியும் அமைதியான முறையில் மிகவும் ஒழுக்கத்துடன் பேரணியை நடத்தினார்கள்.





நாமக்கல் அரசு மருத்துவமனையில் தொடங்கிய பேரணி, உழவர் சந்தை வழியாக, சேலம் சாலை, பேருந்து நிலையம், துறையூர் சாலை, ஆண்டவர் பெட்ரோல் பங்க், திருச்சி சாலை, மோகனூர் சாலை வழியாகச் சென்று பேருந்து நிலையம் வரை பேரணி தொடர்ந்தது. நாமக்கல் நகரக் காவல் துறை அதிகாரிகள் மற்றும் நாமக்கல் நகர மருந்து கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் மருந்து வணிகர்கள் சங்கமும் பேரணி அமைதியான முறையில் நடைபெற உதவி புரிந்தார்கள்.

# கல்விச் சுற்றுலா

நாள் : 10 ஆகஸ்ட், 2017
இடம் : பொன்னேரி, நாமக்கல் மாவட்டம்











புள்ளியியல் துறை மாணவர்கள் 10.08.2017 அன்று ஒருநாள் கல்விச் சுற்றுலாவாக, நாமக்கல் அருகிலுள்ள தனியார் நிறுவனமான சரண்யா நூற்பு ஆலைக்குச் (Saranya Spinning Mill (P) Ltd.) சென்று ஆலையில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளையும் பார்வையிட்டார்கள். பல்வேறு நவீன இயந்திரங்கள் மூலம் பஞ்சிலிருந்து நூல் நூற்பது முதல் ஆடை நெய்யும் வரையிலான அனைத்து செயல்பாடுகள் மற்றும் ஆலையின் நடைமுறைகள் அனைத்தையும் பார்வையிட்டனர்.



# மரம் நடும் விழா

தேதி : 24 ஜனவரி, 2018


இடம் : கல்லூரி வளாகம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



பொன்விழா ஆண்டை முன்னிட்டு கல்லூரியில் 24.01.2018 அன்று புள்ளியியல் துறை சார்பாகப் பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து நமது கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டனர்.








# வினாடி வினாப் போட்டி

நாள் : 03 பிப்ரவரி, 2018
இடம் : புள்ளியியல் துறை,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




03.02.2018 அன்று புள்ளியியல் துறையில் மாணவ-மாணவியர்களுக்கிடையேயான வினாடி-வினாப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் மற்றும் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. இரவிச்சந்திரன் அவர்களும் துவக்கி வைத்தார்கள். இப்போட்டியைப் புள்ளியியல் துறை உதவிப் பேராசிரியர் திருமதி. S. சுஜாதா முன்னின்று நடத்தினார்.



# உடல்நிறை குறியீட்டுச் சுகாதார சோதனை

நாள் : 03 பிப்ரவரி, 2018

இடம் : திறந்தவெளிக் கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்





03.02.2018 அன்று புள்ளியியல் துறையின் மாணவ-மாணவியர்கள், அத்துறையின் உதவிப் பேராசிரியை திருமதி. S. சுஜாதா அவர்களின் மேற்பார்வையின்கீழ் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்களின் எடை மற்றும் உயரம் அளவிடப்பட்டு உடல் நிறை குறியீட்டு - சுகாதாரச் சோதனையை (Body Mass Index - Health Check) நடத்தி அவரவர்களுக்கான அறிக்கையை வழங்கினார்கள்.



## பெற்றோர் - ஆசிரியர் கூட்டம்

நாள் : 12 பிப்ரவரி, 2018
இடம் : புள்ளியியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்






12.02.2018 அன்று புள்ளியியல் துறையில் பெற்றோர் - ஆசிரியர் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

## அளவைப் பொருளியல் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் பரிசளிப்பு விழா

நாள் : 20 பிப்ரவரி, 2018
இடம் : புள்ளியியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

20.02.2018 அன்று அளவைப் பொருளியல் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். இறுதியாக, பொருளியல் துறைத் தலைவர் முனைவர் மா. குமாரவேலு அவர்கள் அளவைப் பொருளியல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.





# பல்கலைக்கழகத் தரப் பட்டியலில் இடம் பெற்ற மாணவருக்குப் பாராட்டு விழா

நாள் : 20 பிப்ரவரி, 2018

இடம் : புள்ளியியல் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




2014-2017 ஆம் ஆண்டில் இளநிலைப் புள்ளியியல் பயின்ற மாணவன் எம். முனிராஜ் பெரியார் பல்கலைக்கழகத் தரப் பட்டியலில் ஆறாவது இடம் பெற்றார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அம்மாணவனுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்.



## EMPLOYMENT OPPORTUNITIES FOR GEOGRAPHY STUDENTS

### சிறப்புச் சொற்பொழிவு

நாள் : 20 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

20.02.2018 அன்று அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் புவியியல் துறையில் **Employment Opportunities for Geography Students** என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் முனைவர் V. தங்கமணி, புவியியல் உதவிப் பேராசிரியர், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை, சிறப்புரையாற்றினார்.







இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். துறைத் தலைவர் திரு. பெ. சுந்தரசோழன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இறுதியாக முனைவர் க. பன்னீர்செல்வன் நன்றியுரை வழங்கினார்.

## The Indian Geographical Society (IGS) ஏற்பாடு செய்த மாநில அளவிலான 8th Talent Test - Young Geographer -2018

நாள் : 21 பிப்ரவரி, 2018

இடம் : புவியியல் துறை, அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்






அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, புவியியல் துறையில் 21.02.2018 அன்று துறைத் தலைவர் திரு. பெ. சுந்தரசோழன் மேற்பார்வையில் - The Indian Geographical Society (IGS) மூலம் ஏற்பாடு செய்த மாநில அளவிலான 8th Talent Test - Young Geographer - 2018 - செயல்திறன் தேர்வு நடைபெற்றது. இதில் புவியியல் துறையின் இளநிலை மற்றும் முதுநிலை இறுதியாண்டு மாணவர்கள் கலந்துகொண்டு தேர்வு எழுதினார்கள்.

# பொன்விழா ஆண்டை முன்னிட்டு வினாடி வினாப் போட்டி

நாள் : 23 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் 23.02.2018 அன்று பெரியார் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட கல்லூரிகளுக்கு இடையேயான வினாடி வினாப் போட்டியானது புவியியல் துறையின் சார்பாக நடத்தப்பட்டது. இப்போட்டியில் சேலம் அரசினர் கலைக்கல்லூரி புவியியல் துறை மாணவர்கள் முதலிடத்தையும், நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் இரண்டாமிடத்தையும் மற்றும் தர்மபுரி ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் மூன்றாமிடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற அணிகளுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைப் புவியியல் துறைத் தலைவர் பேரா. பெ. சுந்தரசோழன் செய்திருந்தார். இறுதியில் பேரா. க. பன்னீர்செல்வன் நன்றியுரை வழங்கினார். இதில் கல்லூரியைச் சார்ந்த புவியியல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.








# பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு

நாள் : 02 மார்ச். 2018

இடம் : புவியியல் துறை, அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்



நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் புவியியல் துறையில் 02.03.2018 அன்று பெற்றோர் ஆசிரியர் மாணவர் சங்கக் கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டு மாணவர்களின் திறன் மற்றும் வருகை குறித்து அறிந்து கொண்டனர். மேலும், இது போன்ற கூட்டங்களைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். அனைவரையும் புவியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் க. பன்னீர்செல்வன் வரவேற்றார். புவியியல் துறைத் தலைவர் திரு. பெ. சுந்தரசோழன் அவர்கள் தலைமை ஏற்றுச் சங்கத்தின் நோக்கங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இறுதியில் முனைவர் பெ. தங்கவேலு நன்றி தெரிவித்தார்.










## மரம் நடும் விழா

தேதி : 09 ஜூலை, 2017
இடம் : கல்லூரி வளாகம்,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



2017-18 கல்வியாண்டில், கணினி அறிவியல் துறையின் சார்பாக 09.07.2017 அன்று இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் வெவ்வேறு விதமான 50 மரகன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.





# ஆரோக்கிய வாழ்விற்கு உணவுமுறையும் யோகமும்

தேதி : 20 ஜனவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.







நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டத்தின் நிகழ்வாக கணினி அறிவியல் துறையின் சார்பாக 20.01.2018 சனிக்கிழமை அன்று கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் ஆரோக்கிய வாழ்விற்கு உணவு முறையும் யோகமும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தைவான் நாட்டில் பணிபுரியும் டாக்டர் கு. வைரமணி (இயற்கை மருத்துவம்) அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவின் முதல் நிகழ்வாகத் தமிழ்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து கல்லூரி முதல்வரும் சிறப்பு விருந்தினரும் கணினி அறிவியல் துறைத் தலைவர் மற்றும் துறைப் பேராசிரியர்களும் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தனர்.

கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ப. கமலக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் தலைமையுரை நிகழ்த்தினார். அடுத்ததாக கணினி அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியர் திரு. கு. மயில்வாகனன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் கருத்தரங்க தலைப்பில் விரிவான சிறப்புரை நிகழ்த்தி, யோகத்தின் செய்முறைப் பயிற்சிகள் சிலவற்றையும் செய்து காட்டினார். சிறப்புரையில் ஆரோக்கியமான வாழ்விற்கு அன்றாடம் நாம் கடைபிடிக்க வேண்டிய அந்தந்த வயதினருக்கு ஏற்ற உணவு முறைகள் பற்றி விவரித்தார். இன்றைய காலகட்டத்தில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் துரித உணவுப் பழக்கத்தைப் பற்றியும் விவரித்தார்.

நமது வாழ்வின் ஆரோக்கியத்திற்கு யோகா பயிற்சியின் முக்கியத்துவத்தை விரிவாக விளக்கினார். மேலும் தினந்தோறும் நாம் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத சில எளிய பயிற்சிகளைச் செய்து காட்டினார். இந்நிகழ்ச்சி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமைந்திருந்தது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்துக் குறிப்பெடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதல்வருக்கும் சிறப்பு விருந்தினருக்கும் கணினி அறிவியல் துறையின் சார்பாக நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

நிறைவாகக் கணினி அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் எ.து. வெங்கடேஷ் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவடைந்தது.

# FIFTH GENERATION TECHNOLOGY

## கருத்தரங்கம்

தேதி : 03 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.




நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டத்தின் நிகழ்வாக கணினி அறிவியல் துறையின் சார்பாக 03.02.2018 சனிக்கிழமைஅன்று கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் FIFTH GENERATION TECHNOLOGY என்ற தலைப்பில் கருத்தரங்கம் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சேலம், மைசூரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் அ. சுரேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவின் முதல் நிகழ்வாகத் தமிழ்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து கல்லூரி முதல்வரும் சிறப்பு விருந்தினரும் துறைப் பேராசிரியர்களும் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தனர். கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ப. கமலக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். அவரைத் தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் தலைமையுரை நிகழ்த்தினார். அடுத்ததாக கணினி அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர். த. ராஜேந்திரன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் கருத்தரங்க தலைப்பில் விரிவான சிறப்புரை நிகழ்த்தி, கைபேசியின் ஐந்தாம் தலைமுறை கம்பியில்லாத தொழில்நுட்பத்தின் முக்கியதுவத்தையும், அவசியத்தைப் பற்றியும் விரிவாக விளக்கினார்.

இந்நிகழ்ச்சி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமைந்திருந்தது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்துக் குறிப்பெடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதல்வருக்கும் சிறப்பு விருந்தினருக்கும் கணினி அறிவியல் துறையின் சார்பாக நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. நிறைவாகக் கணினி அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியர் கு. மயில்வாகனன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவடைந்தது.






## மாவட்ட அளவிலான பளு தூக்கும் மற்றும் ஆணழகன் போட்டி

தேதி : 17 செப்டம்பர் & 24 டிசம்பர், 2017

இடம் : நாமக்கல் மாவட்ட பளு தூக்கும் சங்கம், நாமக்கல்





நாமக்கல் மாவட்ட அளவில் நடைபெற்ற பளு தூக்கும் போட்டியில் நமது கல்லூரி மாணவர் U. செல்வக்குமார் II - B.Sc (இயற்பியல் துறை) கலந்து கொண்டு இரண்டாம் இடம் பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமைசேர்த்துள்ளார். மேலும், இதே மாணவர் மாவட்ட அளவில் நடைபெற்ற ஆணகழன் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

முதல்வர் மற்றும் உடற்கல்விப் பொறுப்பாளர்கள்



# பொன்விழா ஆண்டை முன்னிட்டு மினி மாரத்தான் போட்டி

தேதி : 10 அக்டோபர், 2017

இடம் : நகராட்சி பூங்கா, நாமக்கல் - அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்




10.10.2017 அன்று நாமக்கல் நகராட்சி மன்றத்தில் இருந்து தொடங்கி மோகனூர் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் முடிவடைந்தது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக ஓடினார்கள்.






# பெரியார் பல்கலைக்கழகக்
# கல்லூரிகளுக்கிடையேயான தடகளப் போட்டிகள்

தேதி : 23 - 25 அக்டோபர், 2017
இடம் : M.G.R. கல்லூரி, ஒசூர்

23, 24, 25 அக்டோபர் 2017-ல் ஒசூர், M.G.R. கல்லூரியில் நடைபெற்ற தடகளப் போட்டியில் 800 மீட்டர் ஓட்டப் பந்தயப் பிரிவில் நமது கல்லூரி மாணவி S. சுகன்யா, III - B.A (பொருளாதாரம்), பெரியார் பல்கலைக் கழக அளவில் வெண்கலப் பதக்கம் பெற்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும், 4x100 மீட்டர் தொடர் ஓட்டப் பிரிவில் 1) N. பாலமுருகன் III - B.Sc (கணிதம்) 2) R. பாலகுமார் II - BBA 3) M. தனபால் III - B.Sc (கணிதம்) 4) S. நந்தகுமார் II - B.Sc (புவியியல்) ஆகியோர் பெரியார் பல்கலைக்கழக அளவில் ஐந்தாம் இடம் பிடித்துள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டில் பெரியார் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையேயான சதுரங்கம், இறகுப் பந்து, கையுந்து பந்து, மட்டைப் பந்து, கூடைப் பந்து, கால் பந்து, கோ-கோ (மகளிர்), பளு வழு தூக்குதல், கபடி ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி நமது அறிஞர் அண்ணா கலைக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்கள்.

தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான சதுரங்கப் போட்டி சென்னையில் உள்ள வேல் டெக் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரியைச் சோந்த A. பிரசாத் II - M.Sc கணிதத்துறை மாணவர் பெரியார் பல்கலைக்கழகத்தின் சார்பாகக் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்.





## கையுந்துப் பந்துப் போட்டி

தேதி : 24 - 26 டிசம்பர், 2017

இடம் : தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தர்மபுரி

மாநில அளவில் நடைபெற்ற முதல் அமைச்சர் கோப்பைக்கான கையுந்துப் பந்துப் போட்டியில் நமது கல்லூரி I - M.Sc கணிதத் துறை மாணவர் K. சக்திவேல் தர்மபுரி மாவட்ட அணிக்காகக் கலந்து கொண்டு முதலாவது இடத்தைப் பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.











## துறைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி

தேதி : 16 பிப்ரவரி - 02 மார்ச், 2018
இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் துறைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை 16.02.2018 அன்று நமது கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் துவக்கி வைத்தார்கள்.





















இப்போட்டியானது 16.02.2018ல் தொடங்கி 02.03.2018 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் கபாடி, மட்டைப்பந்து, கால்பந்து, கையுந்துப் பந்து, கூடைப் பந்து, கோ-கோ, சதுரங்கம் மற்றும் தடகளம் ஆகிய விளையாட்டுக்களில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

## பொன்விழா ஆண்டை முன்னிட்டு கல்லூரிகளுக்கிடையேயான தடகளப் போட்டி

தேதி : 09 மார்ச், 2018

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 09.03.2018 அன்று கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி - முசிறி, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி - இராசிபுரம், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் மகளிர் அரசுக்கலைக் கல்லூரி - நாமக்கல், அரசு கலைக்கல்லூரி - கரூர் அறிஞர் மற்றும் அண்ணா அரசு கலைக்கல்லூரி - நாமக்கல் ஆகிய கல்லூரிகளிலிருந்து மாணவ - மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்கள். இப்போட்டியில் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியை சேர்ந்த மாணவ - மாணவிகள் ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டத்தை வென்று இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.


















ARIGNAR ANNA GOVERNMENT ARTS COLLEGE

## NSS – மாணவர் சேர்க்கை

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

2017-18 ஆம் ஆண்டிற்கான நான்கு அலகு மாணவ / மாணவியர்களின் பெயர்கள், இனம், இரத்த பிரிவு, மின்னஞ்சல் முகவரி, செல் பேசி எண்கள் போன்ற விவரங்கள் முறைப்படி சேகரிக்கப்பட்டு நாட்டு நலப்பணித் திட்டத்தில் மொத்தம் 400 மாணவ / மாணவியர்கள் சேர்க்கப்பட்டனர்.

### NSS - முதல்வர் மற்றும் திட்ட அலுவலர்கள்



# கொடி நாள்

நாள் : 07 டிசம்பர், 2017

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் தேசிய கொடி நாள் தினம் கொண்டாடப்பட்டது. அதில் முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவ / மாணவியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். அந்த தினத்தை முன்னிட்டு தேசிய கொடி நாள் நிதியானது முதல்வர், பேராசிரியர்கள் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் மற்றும் மாணவ / மாணவியர்களிடம் வசூலிக்கப்பட்டு மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.







# மரம் நடும் விழா

நாள்: 05 செப்டம்பர், 2017

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் NSS-சார்பில் 05.09.2017 அன்று மரநடு விழாவானது நடைபெற்றது. அதில் கல்லூரி முதல்வர் உட்பட பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பல்வேறு வகையான மரக்கன்றுகளை நட்டனர்.

# தூய்மை இந்தியா வாரம்

நாள்: 15-29 செப்டம்பர், 2017

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், NSS சார்பில் தூய்மை இந்தியா வாரம் கொண்டாடப்பட்டது. அதில் NSS-ன் நான்கு அலகுகளைச் சேர்ந்த மாணவ / மாணவியர் கல்லூரி வளாகத்தைத் தூய்மைப்படுத்தினர். இதில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் கலந்துகொண்டு தூய்மைப்பணியினைத் துவக்கி வைத்தார்.



15.09.2017 அன்று நமது கல்லூரியில் NSS சார்பில் தூய்மைஇந்தியா விழிப்புணர்வு உறுதிமொழி கல்லூரி முதல்வர் முன்னிலையில் எடுக்கப்பட்டது. இதில், பேராசிரியர்கள், மாணவ / மாணவியர் தூய்மைகுறித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.



18.09.2017 அன்று NSS சார்பில் கல்லூரியில், கொடிக்கம்பம் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கல்லூரி அலுவலகம் உள்ளிட்ட இடங்கள் தூய்மை செய்யப்பட்டது.



19.09.2017 அன்று NSS சார்பில் கல்லூரி வளாகத்தில் உள்ள தேவைப்படாத புல் மற்றும் களைகளை அகற்றித் தூய்மைப்படுத்தினர்.



20.09.2017 அன்று NSS சார்பாக கல்லூரி வளாகத்திற்குள் புதிய மரக்கன்றுகள் நடுதல் மற்றும் மாணவர்கள் அமர்வதற்கான இருக்கைகளை தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.





21.09.2017 அன்று NSS சார்பில் தூய்மை இந்தியா உறுதிமொழி தேவையில்லாத செடிகளை அகற்றி தூய்மைப்படுத்தும் பணி நடத்தப்பட்டது.



22.09.2017 அன்று NSS-ன் அனைத்து மாணவ / மாணவியர் கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டிட அறைகளைச் சுத்தப்படுத்தும் பணியை மேற்கொண்டனர்.



25.09.2017 அன்று கல்லூரியின் அனைத்து துறைகளைச் சேர்ந்த மாணவ / மாணவியர் கல்லூரி வளாகத்தைத் தூய்மைசெய்யும் பணிகளை மேற்கொண்டனர்.



26.09.2017 அன்று NSS சார்பில் கல்லூரி வளாகத்தில் உள்ள கழிவறைகள், தண்ணீர்த் தொட்டிகள் தூய்மைப்படுத்தப்பட்டன.



27.09.2017 அன்று NSS சார்பில் நாமக்கல்லில் உள்ள இரயில் நிலையமானது தூய்மைப் படுத்தப்பட்டது.



28.09.2017 அன்று NSS - அனைத்து அலகுகளின் சார்பில் லத்துவாடியில் உள்ள முனியப்பன் கோவில் வளாகமானது தூய்மைப் படுத்தப்பட்டது.

29.09.2017 அன்று NSS - அனைத்து அலகுகளின் சார்பில் லத்துவாடி சாலையின் இரு புறங்களிலும் உள்ள தேவையற்ற செடி, கொடிகளை அகற்றித் தூய்மைப்படுத்தினர்.

## எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா

நாள்: 08 செப்டம்பர், 2017
இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு NSS சார்பில் கல்லூரியில் உள்ள மாணவ / மாணவியர்களுக்குப் பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ/மாணவியர் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டனர்.



# டாக்டர். A.P.J. அப்துல் கலாம் – வாழ்க்கை வரலாறு அடங்கிய திரைப்படம்

நாள் : 05 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், NSS சார்பில் முனைவர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய திரைப்படம் (சலாம் கலாம்) மாணவ / மாணவியர்களுக்குத் திரையிடப்பட்டது. இத்திரைப்படத்தைக் கல்லூரியில் உள்ள பெரும்பான்மையான மாணவ / மாணவியர்கள் பார்த்துப்பயன்பெற்றனர்.



# டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாள்: 12 அக்டோபர், 2017
இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்





12.10.2018 அன்று அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS சார்பில் டெங்கு விழிப்புணர்வுப் பேரணி கல்லூரி வளாகத்திலிருந்து லத்துவாடி கிராமம் வரை நடத்தப்பட்டது. மேலும், லத்துவாடி பஞ்சாயத்தில் வீடு வீடாகச் சென்று மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நிலவேம்புக் கசாயம் வழங்கப்பட்டது.





## ஒரு மாணவருக்கு ஒரு மரக்கன்று நிகழ்ச்சி

நாள்: 13 டிசம்பர், 2017

இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS சார்பில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் ஒரு மாணவருக்கு ஒரு மரக்கன்று வழங்குதல் திட்டமானது செயல்படுத்தப்பட்டது.



## இளைஞர் பாராளுமன்றம்

நாள்: 11 ஜனவரி, 2018

இடம் : திறந்தவெளிக் கலையரங்கம்,
அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

11.01.2018 அன்று நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS மற்றும் நேரு யுவகேந்திரா இணைந்து நமது கல்லூரியில் இளைஞர் பாராளுமன்றம் நிகழ்ச்சி நடத்தின. அதில், மாணவ, மாணவியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.






# NAMAKKAL HEART FULLNESS YOGA

நாள்: 19 ஜனவரி, 2018

இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



சுவாமி விவேகானந்தரின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு 19.01.2018 அன்று நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS சார்பாக Namakkal Heart Fullness Yoga அமைப்பு நடத்திய நிகழ்ச்சியில் இளைஞர்களை மேம்படுத்தும் விதமாக மாணவ, மாணவியர்களுக்கு யோக பயிற்சி வழங்கப்பட்டது.








## குடியரசு தின விழா

நாள்: 26 ஜனவரி, 2018
இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



26.01.2018 அன்று நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் NSS சார்பாக குடியரசு விழாவானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவ மற்றும் மாணவியர் திரளாகக் கலந்து கொண்டனர்.



# புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாள்: 14 மார்ச், 2018
இடம் : அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்



14.03.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) சார்பாக புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி வளாகத்தில் புகையிலை சம்பந்தமான எந்த ஒரு பொருளும் அனுமதிக்கப்படுவது இல்லை என்றும் புகையிலை இல்லா வளாகமாக நம் கல்லூரி திகழவேண்டுமென்றும் மாணவர்களிடையே கல்லூரி முதல்வர் கேட்டுக்கொண்டார்.



# நாட்டு நலப்பணித்திட்டம் சிறப்பு முகாம்

நாள்: 25 மார்ச், 2018 முதல் 31 மார்ச், 2018 வரை

இடம் : அலகு - I : ஈச்சவாரி கிராமம்,

அலகு - II : லத்துவாடி கிராமம்,

அலகு - III : நல்லையக் கவுண்டன் புதூர் கிராமம்

அலகு - IV : வடக்கால் புதூர் கிராமம்

## முதல் நாள் 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை

முகாமின் தொடக்கவிழா அன்று கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் தலைமையேற்றார். சிறப்பு விருந்தினராக மாண்புமிகு நீதிபதி செல்வி. S. அசின்பானு B.L., செயலாளர் அவர்கள் நாமக்கல் மாவட்ட சட்டபணி ஆணைக்குழு சார்பாக கலந்து கொண்டு பெண்கல்வி அவசியம் மற்றும் சட்ட விழிப்புணர்வை நாட்டுநலப்பணித்திட்ட மாணவ மாணவிகளிடையே ஏற்படுத்தினார். அன்றைய தினம் பிற்பகலில் அருகாமையில் உள்ள கோவில்கள் மற்றும் அரசு நடுநிலைப்பள்ளிக்கு வெளிப்புறமுள்ள பகுதியை தூய்மை செய்தனர். மாலை 6 மணிக்கு ஊர் மக்களுக்கு அனைவருக்கும் கல்வி அவசியம் குறித்து நாடகம் நடத்தி காண்பிக்கப்பட்டது.





## இரண்டாம் நாள் 26.03.2018 திங்கள்கிழமை

காலை 9 மணிக்கு இலவச கண் சிகிச்சை முகாம் வாசன் கண் மருத்துவமனை மூலமாக லத்துவாடி கிராமத்தில் நடைபெற்றது. இதில் ஊர் மக்கள் மற்றும் மாணவ மாணவிகள் பலரும் இலவச கண்சிகிச்சை செய்து கொண்டனர். அன்று களப்பணியாக நம்பிக்கை இல்லம் சென்று அங்குள்ள சாலையை சீரமைக்கும் பணியையும் மற்றும் பூங்காவை சுத்தம் செய்தனர்.




அன்று பிற்பகல் கண் நலன் குறித்து சிறப்பு விருந்தினர் மருத்துவர் அண்ணபூரணி அவர்கள் மாணவ மாணவிகளிடையே சிறப்புரை நிகழ்த்தினார்.

மாலை 6 மணிக்கு டெங்கு விழிப்புணர்வு குறித்து ஊர்மக்களுக்கு நாடகம் வாயிலாக எடுத்துரைக் கப்பட்டது.



மூன்றாவது நாள் 27.03.2018 செவ்வாய்க்கிழமை

காலை 9 மணிக்கு களப்பணியாக ஈச்சவாரி கிராமத்தில் லத்துவாடி பஞ்சாயத்து சார்பில் வளர்க்கப்பட்டு வரக்கூடிய 450 மரக்கன்றுகளை சுற்றியுள்ள பகுதியை சுத்தம் செய்ததோடு நீர்த்தேங்கும்படி மண் அணைப்பை மாணவ மாணவிகள் செய்தனர். அதோடு வடக்கால்புதூர் கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் குடியிருப்பு பகுதி அமைந்துள்ள இடங்களை மாணவ மாணவிகள் தூய்மைச் செய்தனர்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் மற்றும் இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் கலந்து கொண்டு இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு குறித்து சிறப்புரையாற்றினார்.

மாலை 6 மணிக்கு பெண்கல்வி அவசியம் குறித்து ஓரங்க நாடகம் மக்களுக்கு நடத்தி காண்பிக்கப்பட்டது.








நான்காவது நாள் 28.03.2018 புதன்கிழமை

காலை 9 மணிக்கு டெங்கு விழிப்புணர்வு பேரணியை அந்தந்த கிராமங்களில் சுகாதார ஆய்வாளர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது. இதில் பொதுமக்கள் பெரும்பாலானோர் பயனடைந்தைனர். களப்பணியாக அந்தந்த கிராமங்களில் சாலையோர பகுதிகள் மற்றும் பொது இடங்கள் தூய்மை செய்யப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்ட உதவி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு இயற்கை வளங்கள் பாதுகாத்தல் குறித்தும் மட்கும் மற்றும் மட்கா குப்பைகள் பிரித்தெடுப்பது குறித்தும் சிறப்புரையாற்றினார்.






### ஐந்தாம் நாள் 29.03.2018 வியாழக்கிழமை



காலை 9 மணிக்கு தூய்மை இந்தியா மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த பேரணி அந்தந்த கிராமங்களில் நேரு யுவகேந்திரா சார்பில் நடத்தப்பட்டதோடு மட்டுமில்லாமல் கழிப்பிடத்தின் அவசியம் குறித்தும் மட்கும் மற்றும் மட்கா குப்பைகள் பிரித்தெடுக்கும் முறை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாலை 3 மணிக்கு நேரு யுவகேந்திரா சார்பில் தூய்மை இந்தியா பணமில்லா பண பரிவர்த்தனை மற்றும் டிஜிட்டல் இந்தியா குறித்து சிறப்பு விருந்தினர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

மாலை 6 மணிக்கு எதிர்கால இந்தியா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது.



### ஆறாவது நாள் 30.03.2018 வெள்ளிக்கிழமை

காலை 9 மணிக்கு களப்பணியாக சாலையோர பகுதிகளில் உள்ள குப்பைகள் அகற்றும் பணியை மாணவ மாணவிகள் அந்தந்த கிராமங்களில் செய்தனர். அதோடு சாக்கடைகளில் உள்ள கழிவுகளையும் அகற்றும் பணியை மாணவ மாணவிகள் செய்தனர்.

அன்று பகல் 12 மணியளவில் மாவட்ட மனநல மருத்துவர் குணமணி, அரசு மருத்துவமனை, நாமக்கல் சார்பில் கலந்து கொண்டு மனநல ஆலோசனை மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்.

மாலை 3 மணிக்கு சிறப்பு விருந்தினராக நுகர்வோர் பாதுகாப்பு செயலாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இணை செயலாளர் கலந்து கொண்டு நுகர்வோரின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மாலை 6 மணிக்கு இரத்ததானம் செய்வதினால் ஏற்படும் நன்மைகள் குறித்து கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### ஏழாவது நாள் 31.03.2018 சனிக்கிழமை

காலை 9 மணிக்கு களப்பணியாக அப்துல்கலாம் இலட்சிய இந்திய சங்கம் சார்பில் 200 துளசி செடிகள் நாட்டு நலப்பணித்திட்டத்திற்கு வழங்கப்பட்டது. ஒருவருக்கு ஒரு செடி வழங்குதல் என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு அந்தந்த கிராமங்களில் வழங்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு முகாம் நிறைவு விழா நடைபெற்றது. அதில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பு முகாமை நிறைவு செய்தனர்.





# நுண்கலை மன்றத் துவக்க விழா

தேதி : 31 ஆகஸ்ட், 2017
இடம் : திறந்தவெளிக் கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.




பொன்விழா ஆண்டை முன்னிட்டு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நுண்கலை மன்றம் 31.08.2017 அன்று கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டு. அன்று முதல் பல்வேறு போட்டிகள் மாணவ, மாணவிகளிடையே தனித்தனியே நடைபெற்றன. போட்டியின் ஏற்பாடுகளை மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்கள், திருமதி. சா. சுஜாதா, உதவிப்பேராசிரியர், புள்ளியியல் துறை மற்றும் முனைவர் பெ. தங்கவேலு, உதவிப்பேராசிரியர், புவியியல் துறை அவர்களும் மேற்கொண்டார்கள். நடத்தப்பட்ட போட்டிகளின் விவரம் மற்றும் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

போட்டியின் விவரங்கள் :

Rangoli with
Colour Powder (Girls)
and Art Design (Boys)










## Mehandi (Girls) and Tattos (Boys)

















## Soap Carving








## Vegetable Carving











## Hair Style



## Drawing











## Bridal Makeup





## Paper Craft



## Wealth out of Wastes



## Dance (Solo)












## Dance (Two Members)






Dance (Group)




Miming Show








Singing




Mimicry




## வன உயிரினப் பாதுகாப்பு வார விழா

இடம் : தமிழ்நாடு வனத்துறை மற்றும்
கிரீன் பார்க் பள்ளி, நாமக்கல்.
நாள் : 27 செப்டம்பர், 2017

நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு வனத்துறை சார்பாக வன உயிரினப் பாதுகாப்பு வார விழா நடைப்பெற்றது. அவ்விழாவிற்கு நாமக்கல் மாவட்ட கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான வன உயிரினப் பாதுகாப்பு பற்றிய ஓவியப்போட்டி நடைபெற்றது. அதில், நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள். அதில் கணிதத் துறையை சேர்ந்த இளங்கலை மூன்றாமாண்டு மாணவன் K. ராஜா முதல் பரிசு பெற்றார்.

## சர்வதேச போதை ஒழிப்பு விழிப்புணர்வு

தேதி : 26 ஜூன், 2017, இடம் : நாமக்கல் பேருந்து நிலையம்

சர்வதேச போதை ஒழிப்பு விழிப்புணர்வு நாளான 26.06.2017 அன்று நாமக்கல் பேருந்து நிலையத்தில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு போதைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் நாமக்கல் சரகக் காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதல்வர் மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்







## இரத்த தான முகாம்

தேதி : 06 ஜூலை, 2017

இடம் : அ.அ.அ.க. கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் மாவட்ட அரசு தலைமைமருத்துவமனை இரத்த வங்கிக்காக நமது கல்லூரி மாணவர்கள் இரத்த தானம் செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு இரத்த வங்கி அலுவலர் Dr. அன்புமலர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



# சிறப்புச் சொற்பொழிவு
# டெங்கு விழிப்புணர்வு

தேதி : 27 ஜூலை, 2017

இடம் : அ.அ.அ.க. கல்லூரி, நாமக்கல்





டெங்கு விழிப்புணர்வு இந்திய மருத்துவ சங்கத்தினரோடு இணைந்து மாணவ, மாணவியருக்கு ஏற்படுத்தப்பட்டு நில வேம்புக் கசாயம் விநியோகிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுகாதார அலுவலர்கள் திருமதி. Dr. கலைச்செல்வி, Dr. சதீஷ்குமார், Dr. சுந்தரராமன் மற்றும் Dr. அன்புமலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுதந்திர தினப் போட்டிகள்

தேதி : 14 ஆகஸ்ட், 2017

இடம் : கல்லூரிக் கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ மாணவியர்க்குக் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, கோலப் போட்டி மற்றும் ரங்கோலிப் போட்டிகள் நடத்தி வெற்றிப் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.




# ஆசிரியர் தினக் கொண்டாட்டம்

தேதி : 05 செப்டம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்லூரியில் உள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு கேக், இனிப்பு மற்றும் ஆசிரியர் தின வாழ்த்து அட்டை கொடுக்கப்பட்டு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

# தூய்மை பாரதம் நிகழ்ச்சி

தேதி : 27 செப்டம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்




தூய்மைபாரதம் திட்டத்தினை முன்னிட்டு நாமக்கல் இரயில் நிலையம் சுத்தப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் இரயில் நிலையம் அதிகாரி திரு. ராஜேந்திரன் பிரசாத் அனுமதியளித்துக் கலந்து கொண்டார்.



## கிராமப்புறங்களில் டெங்கு விழிப்புணர்வு

தேதி : 27 அக்டோபர், 2017, இடம் : லத்துவாடி, நாமக்கல்






இந்தியன் ரெட்கிராஸ் சொஸைட்டியின் அமைப்போடு இணைந்து கல்லூரி அருகே அமைந்துள்ள லத்துவாடி கிராமச்சுற்றுப்புறத்தில் டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு வீடாகச் சென்று ஏடிஸ் கொசு உற்பத்திக்கான இடங்கள் மற்றும் சுற்றுப்புறத்தினைப் பார்வையிட்டு சுத்தம் செய்து நிலவேம்புக் கசாயம் விநியோகிக்கப்பட்டது.




## இரத்த தான முகாம்

தேதி : 07 பிப்ரவரி, 2018

இடம் : கலையரங்கம்,
அ.அ.அ. கலைக்கல்லூரி, நாமக்கல்


07.02.2018 அன்று நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை இரத்த வங்கிச் [illegible] கு இரத்த தான முகாம் நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் என 100 பேர் இரத்த தானம் செய்தனர்.



# இரத்த வகை கண்டறியும் முகாம்

தேதி : 10 பிப்ரவரி, 2018
இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நம்முடைய கல்லூரியில் சேர்ந்துள்ள முதலாமாண்டு (UG/PG) மாணவ, மாணவியருக்கான இரத்த வகை கண்டறியும் முகாம் விலங்கியல் துறையினரோடு இணைந்து 10.02.2018 அன்று நடத்தப்பட்டது.







# சீருடைப் பணியாளர் தேர்வு விழிப்புணர்வு

தேதி : 15 பிப்ரவரி, 2018
இடம் : கலையரங்கம், அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல்

நம்முடைய கல்லூரி மாணவ, மாணவியர் தனித்திறன், பொது அறிவு மற்றும் வேலைவாய்ப்பு விழிப்புணர்வு பெறுவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சி 15.02.2018 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அர. அருளரசு I.P.S. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், காவல் துறையினரால் உடற் தகுதிக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.



# செஞ்சுருள் சங்கம்




## டெங்கு விழிப்புணர்வு

தேதி : 26 ஜுலை, 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



Red Ribbon Club

தாவரவியல் துறை மூன்றாம் ஆண்டு தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி மாணவர்களுக்கு 26.07.2017 அன்று டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திரு. S. காந்திமதிநாதன், ஆலோசகர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மோகனூர், அவர்கள் கலந்துகொண்டு டெங்கு காய்ச்சல் பரவும் முறைகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும் கல்லூரி வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டு, ஏடிஸ் கொசுக்களுக்கு எதிராகக் கல்லூரி வளாகத்தில் புகை அடிக்கப்பட்டது.

## சர்வதேச இளைஞர் தினம்

தேதி : 16 ஆகஸ்ட், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு 16.08.2017 புதன்கிழமை அன்று மாணவ, மாணவிகள் சமுதாய நலனுக்காக உறுதிமொழி ஏற்றனர். தொடர்ந்து கட்டுரை, ஓவியம் மற்றும் கோலப்போட்டிகளும் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் முன்னிலை வகித்தார். திருமதி. N. ஜான்சி, ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்தல் மற்றும் பரிசோதனை மையம் (HIV Testing Centre), அரசு நகர ஆரம்ப சுகாதார நிலையம், நாமக்கல் அவர்கள் கலந்து கொண்டார். மேலும் கல்லூரிப் பேராசிரியர்களும் கலந்து கொண்டார்கள். இறுதியாக செஞ்சுருள் சங்கம் திட்ட அலுவலர் முனைவர் ம. சந்திரசேகரன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.



## தூய்மை இந்தியா திட்டம்

தேதி : 14 செப்டம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்





தாவரவியல் துறை, முதுகலை இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகள் மற்றும் இளங்கலை மூன்றாம் ஆண்டு தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி மாணவ, மாணவிகள் 14.09.2017 வியாக்கிழமை அன்று தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் கல்லூரி வளாகம் தூய்மைப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் தாவரவியல் இணைப் பேராசிரியர் முனைவர் M.ராஜேஸ்வரி கலந்துகொண்டார்.




## தூய்மை இந்தியா நிகழ்ச்சி

தேதி : 27 செப்டம்பர், 2017
இடம் : நாமக்கல் இரயில் நிலையம்

தூய்மைபாரதம் திட்டத்தின்கீழ் நாமக்கல் இரயில்வே நிலையத்தை வேதியியல் இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகள் தூய்மைப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். இரயில்வே நிலைய அலுவலர் திரு. இராஜேந்திர பிரசாத் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியை NSS, YRC மற்றும் RRC திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.






## ஒருநாள் பயிற்சிப் பட்டறை : வாழ்க்கையின் வெற்றிக்கான அவசியத் திறன்கள்

தேதி : 12 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம்,
அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

12.10.2017 வியாக்கிழமை அன்று ஒருநாள் பயிற்சிப் பட்டறை 'வாழ்க்கையின் வெற்றிக்கான அவசியத் திறன்கள்' என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் கல்லூரி முதல்வர் முனைவர். அ. லீலா குளோரி பாய் தலைமை வகித்தார். மேலும், எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சித்த மருத்துவர் திரு. S. பூபதிராஜா, டெங்கு காய்ச்சல் பரவும் முறைகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள், நிலவேம்புக் குடிநீர் குடிப்பதன் அவசியம் குறித்துப் பேசினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் S. அய்யப்பராஜா, ஆங்கில மொழியை ஆளுமைப்படுத்துதல், தலைமைப் பண்பு திறன் வளர்த்தல் மற்றும் மன அழுத்தத்தைச் சமாளிக்கும் திறன் குறித்துப் பேசினார். அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அரசு பரமேஸ்வரன், நாட்டின் வளர்ச்சியில் இளையோரின் பங்கு என்ற தலைப்பில் பேசினார். இதில் வணிகவியல், தமிழ், தாவரவியல் மற்றும் விலங்கியல் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இறுதியாக, முனைவர் ம. சந்திரசேகரன், செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர், நன்றி கூறினார்.









# பொன்விழா ஆண்டு நிகழ்வு : ஆராய்ச்சி மாணவர்கள் கூட்டம்

நாள் : 17 பிப்ரவரி, 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டை முன்னிட்டுப் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் ஆராய்ச்சி மாணவர் கூட்டம் 17.02.2018 அன்று முற்பகல் 12.00 மணியளவில் அறை எண் 39இல் நடைபெற்றது. இதில் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. ரவிச்சந்திரன் அவர்கள் வரவேற்றார். இயற்பியல் துறைத் தலைவர் முனைவர் சு. பங்காரு அவர்கள் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் தலைமைவகித்தார். இதில் ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தேவைப்படும் வசதிகள் விவாதிக்கப்பட்டன. ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவித்தொகை, யு.ஜி.சி. மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சி நிதி பெற்றுத் தருதல் முதலானவை கலந்து ஆலோசிக்கப்பட்டது. இறுதியாக இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. பாலசுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் ஆராய்ச்சி நெறியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.








## பொன்விழா ஆண்டு நிகழ்வு ஆராய்ச்சி நெறியாளர்கள் கூட்டம்

நாள் : 07 மார்ச், 2018

இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பொன்விழா ஆண்டை முன்னிட்டுப் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் 07.03.2018 அன்று பிற்பகல் 01.30 மணியளவில் அறை எண் 39இல் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் கல்லூரியின் அனைத்து ஆராய்ச்சித் துறைகளையும் சார்ந்த ஆராய்ச்சி நெறியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 25க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நெறியாளர்கள் கலந்துகொண்டு அவரவர்களின் கருத்தைப் பதிவிட்டனர். மேலும், ஆராய்ச்சி முன்னேற்றத்திற்கான அனைத்து அம்சங்களையும் விவாதித்தனர்.



# ஆய்வக உதவியாளர்கள் வழங்கிய நினைவுப் பரிசு

நாள் : 04 அக்டோபர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களின் சார்பாக 04.10.2017 அன்று முனைவர் அ. லீலா குளோரி பாய், கல்லூரி முதல்வர், அவர்களைச் சந்தித்து சுவர்க் கடிகாரம் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

## அலுவலகம்





முதல்வருடன் கல்லூரி அலுவலகப் பணியாளர்கள்





திரு. ர. பால்ராஜ்
தோட்டக்காரர்



திரு. கே. ஜெகநாதன்
இரவுக் காவலர் (சி.நி)

# மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலை

## மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலை லிமிடெட்

இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் இயங்கிக் கொண்டிருக்கும் மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலையில் (எஸ். 207) மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், செய்முறை ஏடுகள், மற்றும் கையேடுகள் ஆகியவை மிகக்குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலையின் நிர்வாகக்குழுவில் 7 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கூட்டுறவுச் சங்க விதிமுறைகளின் படி தேர்தல் நடத்தப்பட்டு தேர்வு செய்யப்படுவார்கள்.

தற்போது மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலையின் தலைவராக இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சு பங்காரு அவர்களும், உறுப்பினராக தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி அவர்களும் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு. இரா. செல்வராஜ் அவர்களும் நிர்வாகக்குழு உறுப்பினராகச் செயல்பட்டு வருகின்றனர்.

மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலையின் செயலாளராகக் கணினி அறிவியல் துறையில் பணிபுரியும் உதவிப்பேராசிரியர் (கணினிப்பயன்பாடு) திரு. க. மகாமுனி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

ஒவ்வொரு ஆண்டின் மார்ச் மாத முடிவில் மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலையின் வரவு-செலவு கணக்கை தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

**முதல்வருடன் பண்டகச்சாலை பொறுப்பாளர்கள்**





**முதல்வருடன் குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர்**



## நுகர்வோர் மன்ற உறுப்பினர்கள் சேர்க்கை

**இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்**

2017-18-ம் ஆண்டிற்கான **நுகர்வோர் மன்ற உறுப்பினர்களாக** 100 மாணவ, மாணவியர் நுகர்வோர் ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெ. இராஜேஸ்வரி அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



## மூட்டை கட்டல் மற்றும் பெயரிடுதலில் தவறான நடத்தைகள்

தேதி : 21 ஆகஸ்ட், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, நமது கல்லூரியின் நுகர்வோர் மன்றம் 'மூட்டை கட்டல் மற்றும் பெயரிடுதலில் தவறான நடத்தைகள்' என்ற தலைப்பில் பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 30 மாணவ / மாணவியர் போட்டிகளில் பங்கேற்றனர்.



## கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள்

தேதி : 08 செப்டம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 08.09.2017 அன்று மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## டெங்கு விழிப்புணர்வுப் பேரணி

தேதி : 26 அக்டோபர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் நுகர்வோர் மன்றம் மற்றும் நாமக்கல் மாவட்ட சுகாதாரத் துறை இணைந்து 26.10.2017 அன்று கல்லூரியிலிருந்து லத்துவாடி கிராமம் வரை 'டெங்கு விழிப்புணர்வுப் பேரணி' மேற்கொண்டனர்.





இந்தப் பேரணியைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் துவக்கி வைத்தார். இதில், நுகர்வோர் மன்ற அலுவலர் முனைவர் வெ. இராஜேஸ்வரி, நாமக்கல் மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர் திரு. ராஜேஷ் கண்ணா, கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம்

கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் **(Vigilance Awareness Week - 3 அக்டோபர் - 4 நவம்பர்)** கொண்டாடும் வகையில் முதன் முதலாக 'எனது பார்வை – ஊழல் இல்லா இந்தியா' **(My Vision – Corruption free India)** என்ற தலைப்பில் ஊழலைத் தடுப்பதற்காக ஒருங்கிணைந்த உறுதிமொழியைக் கல்லூரியின் அனைத்து ஆசிரியர்களும் எடுத்துக் கொண்டனர்.





## ஊழல் பற்றிய கண்காணிப்பு

தேதி : 01 நவம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

## ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு

தேதி : 03 நவம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்







## பொருட்கள் மற்றும் சேவை வரி பற்றிய பொதுமக்களின் கருத்து

தேதி : 17 -28 பிப்ரவரி, 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

# சுகாதார கல்வி மற்றும் ஆலோசனை முகாம்

நாள் : 24 ஜனவரி, 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்



பொன்விழா ஆண்டை முன்னிட்டு மகளிர் மன்றம் 31.08.2017 அன்று கல்லூரி முதல்வரால் துவக்கப்பட்டு ஒருங்கிணைப்பாளராக திருமதி. S. சுஜாதா, உதவிப் பேராசிரியர், புள்ளியியல் துறை நியமிக்கப்பட்டார். மகளிர் மன்றம் சார்பாக 24.01.2018 அன்று மாணவிகளுக்குச் சுகாதாரக் கல்வி மற்றும் ஆலோசனை முகாம் நடைபெற்றது.







அம்முகாமில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், மருத்துவர் பி. ஜெயந்தி (Senior Civil Surgeon) பெண்களுக்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் பற்றியும் மருத்துவர் S. குணமணி (District Psychiatrist) Mental Health பற்றியும் மற்றும் பேராசிரியை S. சுஜாதா மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளர், குடும்பத்தில் பெண்களின் முக்கியத்துவம் பற்றியும் மாணவிகளிடையே உரையாற்றினர்.






## பெண்கள் தின விழா

**நாள் : 08 மார்ச், 2018**
**இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்**

08.03.2018 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் மகளிர் தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. முதல்வர் முனைவர் அ.லீலா குளோரி பாய் தலைமையேற்று வரவேற்புரையாற்றினார். கல்லூரிக் கல்வி இயக்கக மேனாள் இணை இயக்குநர் முனைவர் க.கலா அவர்கள் வாழ்த்துரையாற்றும்போது பெண்கள் மற்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் சென்ற இடமெல்லாம் சிறப்படைய முடியும். நன்றாகப் படிக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்று பேசினார்.









பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோம் என்ற தலைப்பில் மாயனூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன மேனாள் துணை முதல்வர் வாழ்வியல் நெறியாளர் பேராசிரியர் எஸ். சேதிபதி சிறப்புரையாற்றுகையில் வாழ்க்கையில் குறிக்கோள் வேண்டும். வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் எல்லாம் குறிக்கோள் இல்லாமல் உயர்ந்ததில்லை. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வீண். மாணவிகளாகிய உங்களிடம் திறமை இருக்கிறது. அத்திறமை எது என்று தெரிந்து அதை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்குத் தன்னம்பிக்கை, குறிக்கோள், திறமை இம்மூன்றும் சேர்ந்ததுதான் தகுதி இது இருந்தால் வெற்றி நிச்சயம். ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருப்பது நியதி. தன்னால் எது முடியும் என்பது தெரியும். தன்னால் எது முடியாது என்பதும் நன்றாகத் தெரியும். அதனால் எது முடியுமோ அவ்வழியில் பயணித்தால் வெற்றி நிச்சயம். உனது உடல் உனக்கான அடையாளமே தவிர அது நீ அல்ல.

நீ சாதிப்பதுதான் நீ. எல்லாவற்றிற்கும் அழிவு உண்டு ஆனால் ஆன்மாவாகிய உயிருக்கு அழிவு இல்லை. ஆண்களைவிட பெண்களுக்கு ஆளுமைஅதிகம் இருக்கிறது. அதை நீங்கள் வெளிக்கொணர வேண்டும். வாழ்வில் உயர்வதற்கு மற்றவர்களை வாழ்த்திப் பழக வேண்டும். யாரையும் யாரோடும் ஒப்பிடக்கூடாது. நேர்மறை எண்ணங்கள் உங்களை உயர்த்தும். எதிர்மறை எண்ணங்கள் உங்களைத் தாழ்த்தும் என்றும் எந்தக் காரியத்தையும் ஒத்திப் போடக்கூடாது. பயந்து போகக்கூடாது. சோம்பிப் போகக்கூடாது. தூங்கிப் போகக்கூடாது. இவற்றில் சரியாக இருந்தால் வெற்றி நிச்சயம் என்று மாயாஜால வித்தை நிகழ்வுகளுடன் பேசினார். பிறகு மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தாவரவியல் துறைத்தலைவர் திருமதி க. வசந்தாமணி நன்றியுரையாற்றினார். விழா ஒருங்கிணைப்பாளர் புள்ளியியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி சா. சுஜாதா தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மாணவிகள் கலந்து கொண்டனர்.







முதல்வருடன் மகளிர் மன்ற பொறுப்பாளர்கள்





# தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வழிகாட்டும் நிகழ்ச்சி

நாள் : 15 பிப்ரவரி, 2018

இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்




நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் 15.02.2018 அன்று கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வழிகாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உயர்திரு. அர. அருளரசு மாணவர்கள் சீருடைப்பணியாளர் தேர்வினை எதிர்கொள்ளத் தேவைப்படும் வழிமுறைகளை அவரது சிறப்புரையில் கூறினார். இந்நிகழ்ச்சியை வேலைவாய்ப்பு பயிற்சித்துறை அலுவலர் முனைவர் க. பன்னீர்செல்வன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை உறுப்பினர் முனைவர். எ.ஞா. வெஸ்லி ஜெபசிங் தேவயிரக்கம் இருவரும் ஏற்பாடு செய்திருந்தனர்.

**முதல்வருடன் வேலைவாய்ப்பு அதிகாரிகள்**



# மென்திறன் திட்ட பயிற்சி மையம்
## (Soft Skill Programme Centre)
2017 - 2018 கல்வியாண்டு

இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்

தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தால் 2016-17 ஆம் கல்வி ஆண்டுமுதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் இளநிலை மூன்றாம் ஆண்டு மற்றும் முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்குப் பட்டயத்துடன் கூடிய வேலைவாய்ப்புப் பயிற்சி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தொடு மென்திறன் திட்ட பயிற்சி மையம் தொடங்கப்பட்டது.

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியிலும் இப்பயிற்சி மன்றம் 2016-17 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி மன்றத்தில்,

நிர்வாகத் தலைவர் - முனைவர் A. லீலா குளோரி பாய், முதல்வர்.

ஒருங்கிணைப்பாளர் - முனைவர் M. குமாரவேலு, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், பொருளியல் துறை.

உறுப்பினர்கள் :

1. பேரா. S. சுஜாதா, உதவிப் பேராசிரியர், புள்ளியியல் துறை.

2. முனைவர் V. பாலகிருஷ்ணன், உதவிப் பேராசிரியர், தாவரவியல் துறை.

3. பேரா. R. பன்னீர்செல்வம், உதவிப் பேராசிரியர், பொருளியல் துறை.

ஆகியோரால் செயல்படுத்துப்பட்டு வருகிறது. மேலும் 2016-17 ஆம் கல்வி ஆண்டில் 15 பயிற்சியாளர்களைக் கொண்ட குழுவினரால்,

1. Introduction: Why Soft Skills,
2. Ice Breaking,
3. Rising to the Occasion,
4. Description of Objects and Processes,
5. Negotiation and Polite Conversation,
6. Group Discussion and Interview,
7. Public Speaking,
8. C.V. Letter Writing and E-mails,
9. Writing Tasks in the Work Place,
10. Presentation Skills, and
11. Drafting and Advertisement,











போன்ற தலைப்புகளில் 537 மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் பயிற்சியில் பங்கு பெற்ற மாணவ, மாணவியர்களுக்குச் சான்றிதழ்களும், அப்பயிற்சி பற்றிய குறிப்புகள் அடங்கிய புத்தகமும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி முடிக்கப்பெற்றவுடன் **Vee Gee Technology, Salem** நிறுவனத்தின் மூலம் வளாகத் தேர்வு நடைபெற்றது. இதில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவியர் 200 பேர் கலந்து கொண்டனர். அதில் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம் 5 மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்நிறுவனத்தில் வேலைவாய்ப்புப் பெற்றனர்.




2017-18 ஆம் கல்வியாண்டில் 10 பயிற்சியாளர்கள் **ICT Academy** மூலம் **'Soft Skill Programme and Business Awareness'** என்ற தலைப்பில் பயிற்சிப் பெற்று, 514 மாணவ, மாணவிகளுக்கு அப்பயிற்சியை வழங்கினார்கள். மேலும் **ICT Academy** நிறுவனத்திலிருந்து இரண்டு பயிற்சியாளர்கள் மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சிகளை வழங்கினார்கள். அப்பயிற்சியின் முடிவில், பங்கு பெற்ற மாணவ, மாணவியர்களுக்குச் சான்றிதழ்களும், அப்பயிற்சி பற்றிய குறிப்புகள் அடங்கிய புத்தகமும் வழங்கப்பட்டன.




முதல்வர் மற்றும் மென்திறன்
திட்டப் பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள்



## சர்வதேச லஞ்ச ஒழிப்பு தினம்

தேதி : 09 டிசம்பர், 2017
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.




சர்வதேச லஞ்ச ஒழிப்பு தினமான 09.12.2017 அன்று நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முனைவர் அ. லீலா குளோரி பாய், முதல்வர் தலைமையில் அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் லஞ்சம் இல்லாத பாரதத்தை உருவாக்குவோமென்ற உறுதிமொழி மேற்கொண்டனர்.

# பகடிவதை தடுப்புக் குழு

## பகடிவதை எதிர்ப்பு

தேதி : 25 ஜனவரி, 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.




பகடிவதை செய்வது குற்றமாகும் பகடிவதையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுவது சட்டப்படி குற்றவியலைச் சார்ந்த குற்றமாகும். பகடிவதை செய்வது அறியப்படுமாயின் முன்னறிவிப்பின்றி உடனடியாக நீக்கப்படுவார்கள். மேலும் காவல் துறை மூலமாக நீதிமன்றத் தண்டனைக்கு உள்ளாக்கப் படுவார்கள் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. கல்லூரிக்கு உள்ளேயும் வெளியேயும் பகடிவதை நடந்தால் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி எண் : 04286-280500, 9445673105

# முன்னாள் மாணவர் சங்கம்



## முன்னாள் மாணவர் சங்கத் தொடக்க விழா

தேதி : 07 அக்டோபர், 2017

இடம் : கலையரங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.



2017-18ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் தொடங்கப்பட்டது. அதன் அலுவலக நிர்வாகிகள் கீழ்க்காணுமாறு நியமிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| முனைவர் அ. லீலா குளோரி பாய் | - | தலைவர் |
| திரு. இரா. கரிகாலன் | - | துணைத் தலைவர் |
| திரு. ஆ. லோகநாதன் | - | செயலாளர் |
| முனைவர் சு. அன்பரசன் | - | இணைச் செயலாளர் |
| முனைவர் மு. நடராஜன் | - | பொருளாளர் |



பொன்விழா ஆண்டு நிகழ்வுகளையொட்டி முன்னாள் மாணவர் சந்திப்புக் கூட்டத் தொடக்க விழா 07.10.2017 அன்று நடைபெற்றது. முன்னாள் மாணவர் சங்கல் செயலாளர் திரு. ஆ. லோகநாதன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையேற்றார். திரு. எஸ்.கே. வேலு, திரு. ஜோதி குப்புசாமி, திரு. கே. நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க முன்னாள் மாணவர் சங்கத் துணைத் தலைவர் திரு. இரா. கரிகாலன் சிறப்புரையாற்றினார். முன்னாள் மாணவர் சங்கப் பொருளாளர் முனைவர் மு. நடராஜன் நன்றி நவில விழா நிறைவுற்றது.

# பெற்றோர் - ஆசிரியர் கழகம்

2017-18 ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் பெற்றோர் - ஆசிரியர் கழகம் தொடங்கப்பட்டது. அதன் அலுவலக நிர்வாகிகள் கீழ்க்காணுமாறு நியமிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| முனைவர் அ. லீலா குளோரி பாய் | - | தலைவர் |
| முனைவர் மு. விஜயராஜன் | - | துணைத் தலைவர் -1 |
| திரு. கு. கணேசன் | - | துணைத் தலைவர் -2 |
| திரு. பெ. சுந்தரசோழன் | - | செயலாளர் |
| முனைவர் க. பன்னீர்செல்வன் | - | இணைச் செயலாளர்-1 |
| திரு. ஆர். சக்திவேல் (விவசாயி) | - | இணைச் செயலாளர்-2 |
| திருமதி. க. வசந்தாமணி | - | பொருளாளர் |

பொன்விழா ஆண்டு நிகழ்வுகளையொட்டி முன்னாள் பெற்றோர் - ஆசிரியர் கழகக் கூட்டம் 14.02.2018 அன்று நடைபெற்றது. பெற்றோர் - ஆசிரியர் கழகச் செயலாளர் திரு. பெ. சுந்தரசோழன் வரவேற்புரை ஆற்றினார். பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் தலைமையேற்றார். இச்சந்திப்பில் மாணவர்களின் பெற்றோர்கள் பெருவாரியாகப் பங்கு பெற்றிருந்தனர். பெற்றோர் - ஆசிரியர் கழக இணைச் செயலாளர் முனைவர் க. பன்னீர்செல்வன் நன்றி நவில விழா நிறைவுற்றது.

# நூலகத்துறை

நூலகத்துறையில் மொத்தம் 40,000 புத்தகங்கள் உள்ளன. இதனுடன் 60 ஆய்விதழ்கள் மற்றும் 9 முன்னணி தினசரி செய்தித்தாள்களும் பெறப்படுகின்றன. இக்கல்லூரியில் நூலகம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. UGC யின் இணையதளத்தில் 3,800 மென் ஆய்விதழ்களும் 8,000த்திற்கும் மேற்பட்ட இணைய புத்தகங்களும் உள்ளன.

## நூலகம்







# கணினிப் பயிற்சித் திட்டம் (CLP)



- NIIT என்ற தனியார் நிறுவனத்தால் கணினி அறிவுப் பயிற்சித் திட்டம் அனைத்து அரசு கலைக்கல்லூரிகளிலும் 2000ம் ஆண்டு துவங்கப்பட்டது.
- கணினி அறிவியல் முதன்மைப் பாடமாக அல்லாத முதலாமாண்டு இளநிலை பட்ட வகுப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியர் அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து கணினி அறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மாணவ, மாணவியர் அனைவரும் பயன்பெறும் வகையில் கணினி ஆய்வகத்திற்கு தேவையான உபகரணங்கள் அனைத்தும் NIIT நிறுவனத்ததால் வழங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு 2005ம் ஆண்டு NIIT நிறுவனத்திடமிருந்து தமிழக அரசே ஏற்று நடத்த முன் வந்தது.



- ஏழை மாணவ, மாணவியர்களை கருத்தில் கொண்டு ஒவ்வொருவருக்கும் சிறு தொகையாக தலா ரூ.700/-வசூலித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.
- இப்பயிற்சிக்காக கல்லூரி முதல்வரி கீழ் ஒருங்கிணைப்பாளர்களை நியமித்து 50:1 என்ற விகிதத்தில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.
- அவ்வாறு நியமிக்கப்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் முறைப்படி கணினி அறிவியல் பாடத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.




- ஆண்டு இறுதியில் மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் மூலமாக தேர்வு நடத்தி தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- இச்சான்றிதழை மாணவர்கள் வேலைவாய்ப்பு அலுவலத்தில் (LR.NO:WW1/35516/02 DATED:02-08-2002) பதிவுச் செய்து கொள்ள இயலும். மாணவ, மாணவியர் அரசு / தனியார் துறையில் பணிக்கு செல்லும் போது இச்சான்றிதழ்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதனால் மாணவ, மாணவியர் எதிர்காலத்தில் பெரிதும் பயனடைகின்றனர்.




R. Gomathi
III - B.B.A.






R. Priyanka
II - B.Sc., Botany


அன்னையின் பாசம்



S. Pradeepa
II - M.Sc., Botany

அம்மா


தரை தவழ்ந்த முதல்,
தலை நரைக்கும் வரை,
அன்பு என்ற அரண்மனையில்,
என்னை அரவணைத்த தாயே,
என், தமிழை கொண்டு
உம்மை தலைவணங்குகிறேன்.



R. Balakumar
II - B.B.A.








R.S. Karnan
II - B.A., Tamil



திரு. கு. மயில்வாகனன்
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை






R. Gomathi
III - B.B.A.





A. Suresh
III - B.Sc., Botany

# கவிதைப் பக்கம்

## அழகு

என் தலைத்துண்டு
தாவணியாக்கி
நெருஞ்சிப்பூக்
கம்மல் மாட்டி
கடலைக்காய்த்
தொங்கட்டான் போட்டு
எருக்கம்பூவின்
கிரீடம் வாங்கி
மூக்குத்தியாக்கி
நீ அழகு காட்டியதுதான்
ஆழமாய் நிற்கிறது
மனசில்....

இருப்பைக் காட்டாமல்
எவ்விதமோ
வாழ்ந்து கொண்டிருக்கும்
மழைபெய்த நாளொன்றின்
ஈரஇரவில்
ஊரையே
உறங்கவிடாமல்
விடியவிடியத்
தாளம் போடும்
குட்டைத் தவளை

கிரிவலம் செய்து
தங்கத்தேர் இழுத்து
அலகு குத்தி
அங்கப் பிரதட்சனம் செய்து
அன்னதானமளித்து
மண்சோறு தின்று
மடிப்பிச்சை எடுத்து
தீ மித்து
எடைக்கு எடை நாணயமும்
புற்றுக்குக் கோழியும்
சாமிக்குக் கிடாயும்
நேர்ந்து
பெற்றவர்
முதியோர் இல்லத்தில்
பறவையின் எச்சமாய்
பட்டை இடுக்கில்
விழுந்த விதையை
விருட்சமாக்குகிறது
பனை.....



முனைவர் மு. நடராஜன்
தமிழ்த்துறைத் தலைவர்

## நட்பு

முனைவர் து. இரவிக்குமார்
தமிழ் உதவிப்பேராசிரியர்

ஏனோ!
உனது நட்பை
எனது மனைவியிடமும்
எனது நட்பை
உனது கணவனிடமும்
அறிமுகம் செய்யாமலே நகர்கிறோம்

## செய்வினை

குழி பறிக்கிறேன்
எப்படியாவது
ஒருவனை வீழ்த்திவிடலாமென்று
எனக்கு அவ்வளவு சாதுர்யம் இல்லை
ஒருவனும் அகப்படவில்லை
நம்பிக்கையோடு
நாட்கள் நகர்கின்றன
என்ன ஆச்சரியம்
ஒருவன் மாட்டிக் கொண்டான்
மிக விரைவாகக் குழி பறிக்கிறேன்
தொலைந்தான் அவன்
வெற்றிப் பூரிப்போடு எழுகிறேன்
என்னைச் சுற்றி ஆயிரம் குழிகள்.

முனைவர் து. இரவிக்குமார்
தமிழ் உதவிப்பேராசிரியர்

## தன்னம்பிக்கை

கடலில் இருந்து கரையைத் தாண்டுவது
அலைகள் அல்ல, விடாமுயற்சி!
பாறைகளின் இடுக்கிலும் முளைத்திருப்பது
தாவரம் அல்ல, தன்னம்பிக்கை !
தேன் கூட்டில் இருப்பது
தேன் அல்ல, உழைப்பு !
தூக்காணாங்குருவி கட்டி இருப்பது
கூடு அல்ல, சாதனை!
காக்கைகள் கூடி உண்பது
உணவு அல்ல, ஒற்றுமை!
ஒற்றுமை மனிதா! ஆம்
கடவுளே வந்தாலும்
தன்னம்பிக்கையைக்
கற்றுக் கொடுக்க நீ
தயாராக வேண்டும்.

M.S. மனோஜ்
I B.Sc., தாவரவியல்

# அறிஞர்களின் பொன்மொழிகள் சில ...



1. மனிதனிடம் பணம் தலை வணங்கிடப் பணியாற்றும் அல்லவை தலைகுப்புறத் தள்ளி விடும். - ஹேம்ஸ்

2. மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் தர்மமாகும். - விவேகானந்தர்

3. அறிவின் எதிரில் அறியாமை தலை வணங்குகிறது. - பிளேட்டோ

4. சிந்திக்காதவன் முட்டாள். சிந்திக்கத் துணியாதவன் கோழை சிந்திக்க மறப்பவன் பிடிவாதக்காரன் - டிரம்மண்ட்



5. தீமை வேறு தீமை செய்பவன் வேறு என்ற பாகுபாட்டை ஒருபோதும் மறக்கக் கூடாது. - காந்தியடிகள்

6. நாம் முன்னேறிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் இலட்சியம் இன்னமும் தூரமாகவே இருக்கிறது. - Dr. ராதாகிருஷ்ணன்



7. ஒரு நல்ல நூலைப் போல சிறந்த நண்பனும் நெருக்கமான உறவினரும் எனக்கு எவரும் இல்லை. - அறிஞர் அண்ணா

8. வாழ்வது முக்கியமல்ல சிறப்பாக வாழ்வதே முக்கியம். - சாக்ரடீஸ்

9. எரிகின்ற விளக்காக இரு. அப்போது தான் மற்ற விளக்குகளை ஏற்றி வைக்கலாம். - தாகூர்



10. நண்பர்களைப் பற்றி நல்லது பேசு. பகைவனைப் பற்றி ஒன்றும் பேசாதே - இங்கிலாந்து

11. அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதை விட அறிவுடன் ஒரு நாள் வாழ்வதே மேல். - புத்தர்

12. சோம்பேறி என்பவன் முட்கள் இல்லாத கடிகாரம் போன்றவன். நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை. - கூப்பர்



13. காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா? அப்படியானால் உனக்கு வாழ்வின் மதிப்பு தெரியும். - நெல்சன்

14. பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மை தேடிக் கொள்கிறான். - ஸெனீக்கா

15. அறிவற்ற சினேகிதனுடன் சேர்வதைவிடப் புத்த[illegible]ியான விரோதியை அடைவதே மேல். - பெர்னாட்ஷா

வெ. இசக்கிராஜா
II B.Sc., புள்ளியியல்

# அம்மா
ம்
மா

வார்த்தைகளே இல்லாத வடிவம்

அளவுகளே இல்லாத அன்பு

சுயநலமே இல்லாத இதயம்

வெறுப்பே இல்லாத முகம்

M. மோகன்ராஜ்
III B.Sc., தாவரவியல்

# அன்னை

ச. கோவிந்தராஜ்
III B.A., தமிழ்

உறவுகள் எல்லாம்

என் வருகைக்காகக்

காத்திருக்கும் போது

என் அன்னையின்

அழும் குரல் கேட்க

நான் வந்து பிறந்தேன்

என்னால் என் அன்னை

ஒருமுறை அழுவாள்

என்று தெரிந்திருந்தால்

நான் இந்த உலகிற்கே

வந்திருக்கமாட்டேன்.

# இயற்கை

வீழ்வதும் அழகே நீரருவியாய் இருந்தால்

தலை தாழ்வதும் அழகே நெற்கதிராய் இருந்தால்

தொடர் தோல்விகள் அழகே

அலைகடலாய் இருந்தால் சிதறல்கள் அழகே

விண்மீனாய் இருந்தால் கதறலும் அழகே

கார்முகிலாய் இருந்தால் அழகின் உருவாய்

இருப்பதை எல்லாம் அழிவின் உருவாய்ப் பார்ப்பது

உனது பிழையே? அல்லது மனிதா நீயே

இயற்கையில் இலக்கணம் பிழையோ?

மு. இராகவேந்திரன்
III B.Sc., தாவரவியல்

# அம்மா

கருவில் என்னைச் சுமந்து

உன்னில் இருந்த என்னை

உலகிற்குப் பரிசாய்க் கொடுத்தவளே

கண்ணீர் ததும்பும் வேளையில்

கையால் அதனைத் துடைத்தவளே

கல்லும் மண்ணும் சுமந்தும்கூட

பசியை ஆற்றி வைத்தவளே !

நீ உறங்காமல்

என்னை உறங்க வைத்தவளே

ஆயிரம் துன்பம் உனக்கிருந்தபோதும்

வறுமை தெரியாமல் வளர்த்தவளே

உறவுகள் ஆயிரம் இருந்த போதும்

உன்னைப் போல் தெய்வம் எதுவுமில்லை

காலம் உள்ள காலம் வரை

கருவில் சுமந்த உன்னை

மனதால் சுமக்க எண்ணுகிறேன்.

S. தயாநிதி
II M.A., தமிழ்

V. சதீஸ்
II M.Sc., தாவரவியல்

## நட்பு



கசக்கிப் போட்ட குப்பைகளில் சில குப்பைகளைப் பொறுக்குவதே நட்பல்ல
கசக்கவே விடாமல் கைக்குள் பொத்தி வைத்துக் கொள்வதுதான் நட்பு
எதிர்பார்ப்பின் பின்னணியில் எதையும் எதிர்பாராமல்
என்னைத் தஞ்சமடைந்தது நட்பு மட்டுமே
சற்று மாறுதலானது
ஆம் தாயும் தந்தையும் சிலகாலம்
மனைவியும் பிள்ளைகளும் சில காலம்
நட்பு மட்டுமே
வாழ்க்கையில் பெரும் பகுதியை ஆள்கிறது.

## அம்மா

R. குமார்
II M.Sc., தாவரவியல்

அடி முடி தேடினாலும்
அகராதியைப் புரட்டினாலும்
முழுமையான அர்த்தம்
அறிய முடியாத உயிர்ச் சித்திரம்.

## திருமண உறவு... ஒரு அற்புத உறவு...



பத்துப் பொருத்தங்கள் பார்த்து
ஒன்பதுகோள் நிலைகளை அறிந்து
எட்டுத் திசையில் இருந்து உறவுகளை அழைத்து
ஏழு அடி எடுத்து வைத்து
அறுசுவை உணவு உண்டு
ஐம்பூதங்கள் சாட்சியாக
நான்கு வேதங்கள் முழங்க
மூன்று முடிச்சுகளாய்
இரு மணங்கள் ஒன்றுசேரும்
ஒரு அற்புதமான உறவே
திருமண உறவு.

M.S. மனோஜ்
I B.Sc., தாவரவியல்

# என் கல்லூரி

E. பவித்ரா
III B.A., தமிழ்



பண்பாட்டின் அமைப்பில் பசுமையான
என் கல்லூரி
மனதளவிலும் படிப்பளவிலும் மாணவனை
மகிழ வைக்கும் கல்லூரி!
போட்டிபோடும் வாழ்க்கையைக் கற்றுதந்த
கல்லூரி !
மறையும் கலைகளை உயிர் கொடுத்து
வாழவைக்கும் கல்லூரி
ஒழுக்கத்திலும் ஒற்றுமையிலும்
உயர்ந்து நிற்கும் கல்லூரி
1969 ஆம் ஆண்டு பிறந்து
எட்டாத உயரத்தை எட்டிப் பார்த்து
பொன்விழா ஆண்டில் அடி எடுத்து வைக்கும் கல்லூரி
50 ஆம் ஆண்டு பிறந்த நாளைச்
சிறப்பாகக் கொண்டாடும் கல்லூரி
அதுதான் எமது கல்லூரி
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி.

# நான்

மு. சுரேந்திரன்
II M.A., தமிழ்

கவிதையொன்று எழுதிட வேண்டும்
உலகே உற்றுப் பார்க்கிற மாதிரி
ஊரே பேசுவது போல
கவிஞர்களெல்லாம் வியந்திட வேண்டும்.

என்றெல்லாம் இல்லை
என்றாவது ஒரு நாள்
என் கவிதை ஒன்றினை
நானே படித்திட
நினைக்கும் எண்ணத்தை
ஏற்படுத்தும் கவிதையினை
எழுதிட வேண்டும் நான்.



# முகமூடிகள் ...



தேர்வீதிக் கடைகளில்
ஏராளம் பொம்மைகள்
விதம்விதமாகக்
குவிந்து கிடக்கின்றன
முகமூடிகள்
சிரித்த ஜோக்கர் முகம்
முறைக்கும் எமன் முகம்
சூனியக்காரரின் சூட்சும முகம்
மந்திரவாதி முகம்
காட்டேரி முகம்
மனித முகங்களையே
காணவில்லை
கடை வெளியே தொங்கிய
திருஷ்டிப் பொம்மையின்
சூழ்ச்சியால்
முகமூடிகளெல்லாம் உயிர் பெற்றன
தேர்க் கூட்டத்தினுள்ளே கலந்தன.
பாவம் கடைக்காரன்
மக்கள் கூட்டத்தினுள்
கிடைக்கவேயில்லை
அவன் கடை முகமூடிகள்

மு. சுரேந்திரன்
II M.A., தமிழ்

## எங்கே சென்றுவிடுவாய் தோழா ....

ச. செல்வரத்தினம்
II M.Sc., தாவரவியல்

இதயத்திற்கும்
இமைகளுக்கும்
இடைவெளி இருப்பதால்
பிரிவதாய் அர்த்தமில்லை
எங்கே சென்றுவிடுவாய் தோழா !
உதடுகளுக்கும்
உறவிடம் இல்லையென்பதால்
உதறுவதாய் அர்த்தமில்லை
எங்கே சென்றுவிடுவாய் தோழா !
மனக்கண்ணில் காணாததை
முகக்கண்ணில் காட்டும் திறமை
இல்லையென்பதால்
கழிந்துப் புளிக்கும் நெல்லிக்கனியின்
சாற்றைச் சுவைக்காமல் சென்றவனே
எங்கே சென்றுவிடுவாய் தோழா!



## எங்கள் கல்லூரி

அனைவரையும் வரவேற்கும்
அழகான மரங்கள்
உடல் வலிமையை உறுதிப்படுத்தும்
திடமான நடைபாதை
அன்பால் அரவணைத்திடும்
புதுமையான நண்பர்கள்
அறிவை ஊக்குவிக்கும்
கடவுளாக ஆசிரியர்கள்
அறிவை வளர்த்திடும்
சிந்தனை இடமாக நூலகம்
சாதாரண மாணவனை
நீதியின் தலைவனாக மாற்றிய
எங்கள் இறைவனின் சன்னதியாக
எங்கள் கல்லூரி ...

T. ஆனந்தன்
II M.Sc., தாவரவியல்



## பாரதி

அவன் போல் உரமேறிய தோள் இல்லை
அவன் எழுத இங்கு இனி தாள் இல்லை
அவன் பேனா நிகர்த்த கூர் வாள் இல்லை
அவன் பண் இசைக்க இங்கு யாழ் இல்லை
சிவன் நிகர் அவன் வாழநெடும் ஊழ் இல்லை
அவனை நினைக்காத ஒரு நாள் இல்லை
அட மொத்தத்தில் அவனை அடிக்க ஆள் இல்லை
அவன் தான் பாரதி



R. பிரபாகரன்
II B.B.A., (வணிக நிர்வாகவியல்)

# காலத்தின் வேகம் ...

K. ஜெயக்குமார்
I M.A. தமிழ்

வாழ்க்கை ஒரு வேகம்
வாழ்க்கை ஒரு வேகம்
அது காலம் கடந்து செல்லும் வேகம்
நீ நினைத்தாலும் மாறாது
நான் நினைத்தாலும் மாறாது
கிழக்கும் மேற்கும்
ஞாயிற்றின் விளையாட்டு
அடக்க முடியாதது மனிதனின் மனதை
தடுக்க முடியாதது இயற்கையின் பூகம்பத்தை



# தெளிவு...



நம் தேசத்தின்
இளைஞன்
நீயும் நானும்
நாட்டின் வீழ்ச்சியும்
நம்மால் தான்
தேசம் எல்லை காப்பவன்
இளைஞன் தான்
குடும்ப மானம் காப்பவன்
இளைஞன் தான்
வெளிநாட்டு இளைஞன்
உயர்ந்திட
நம்நாட்டு இளைஞன்
உழைக்கின்றான்
நம் நாட்டு இளைஞன்
உயர்ந்திட
நீயும் நானும்
என்ன செய்தோம்
இன்றைய நிகழ்வின்
நாளைய சரித்திரத்தை
வருங்கால சந்ததி
இகழ்ந்திடவா?
இளைஞர் சமுதாயமே
உன் மனமே
உன்னை
நியாயம் செய்.



க. ஜெயக்குமார்
I M.A., தமிழ்

# நான் அறிந்த புதுமொழிகள் 10

முனைவர் மு. விஜயராஜன்
விலங்கியல் துறைத்தலைவர்.



1. ஏழையின் இல்லத்தில்தான் இறைவன் வசிக்கின்றார். ஆதலால் ஏழையை நாடிப் போனால் இறைவன் அகப்படுவான்.

2. ஏழையின் வயிற்றுப் பசியை அடக்குவது மிகப் பெரும் வேள்வி செய்வதற்கு ஒப்பாகும்.

3. முதுமையடைந்த பெற்றோரைக் கவனிக்காதவன் வாழ்வில் எத்தனை ஏற்றம் பெற்றிருப்பினும் பிச்சைக்காரனே ஆவான்.



4. அறிமுகமில்லா முகநூல் நண்பனைவிட முற்றிலும் அறிந்து கொண்டுள்ள எதிரி எவ்வளவோ மேல்.

5. பதினெட்டு வருடங்கள் வளர்த்து ஆளாக்கிய பெற்றொரைப் புரிந்து கொள்ளாத உன்னால் ஒரு நிமிடம் கடைக்கண் பார்வையில் தன்னை மயக்கிய காதலியை எப்படிப் புரிந்து கொள்வாய்.



6. பசியால் அழும் குழந்தைக்குக்கூட பால் தர மறுக்கும் நீ கடவுளுக்குச் செய்யும் பால் அபிசேகங்களைக் கடவுள் எப்படி விரும்புவார்?



7. ஜோதிட பரிகார தோஷ நிவர்த்திக்காக 1000 பேருக்கு அன்னதானம் அளிப்பதை விட பசித்த ஏழை ஒருவனுக்கு அன்னமிடல் மேலானது.

8. உனக்கு இலாபம் கிடைப்பதற்காக மற்றவருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தாதே.

9. வாழ்க்கை நீ வாழ்வதற்கு மட்டுமே பிறரைக் கெடுப்பதற்கு அல்ல.

10. பல்லாயிரம் மைல்கள் செல்லும் புண்ணிய சேத்திர பயணங்களைவிட அருகில் உள்ள முதுமை அடைந்தப் பெற்றோரைக் காண்பது சிறந்ததாகும்.





# உடை கண்டு எள்ளாதே...

முனைவர் து. இரவிக்குமார்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

திருச்சி மத்திய பேருந்து நிலையம் எப்பொழுதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். பேருந்து நுழைவாயிலின் ஒரு பகுதி நகரப் பேருந்து நிறுத்தம். அதனருகில் இருப்பது சொகுசுப்பேருந்து நிறுத்தம். சென்னை, பெங்களூர், நாகர்கோவில் போன்ற ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகளுக்கு இங்கேதான் ஏறவேண்டும். சென்னை செல்பவர்களை அழைத்துச் செல்வதில் அரசுப் பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்கும் எப்போதும் போட்டி நிலவும். தனியார் பேருந்துகள் சாய்வு இருக்கை, கலர் கலரான விளக்குகள், வண்ணமயமான பேருந்துகள், காதைப் பிளக்கும் ஸ்பீக்கர்கள், எல்.இ.டி.டிவி, விரைவாகச் செல்லுதல் எனப் பல வசதிகளைக் கொண்டு பயணிகளைக் கவர்வதில் முதலிடம் பிடிக்கும். அரசுப் பேருந்துகள் சாய்வு இருக்கைகளுடன் காணப்பட்டாலும், அவை சரிவரப் பராமரிக்கப்படாமல் காணப்படுவதாலும் பெரும்பான்மையானோர் அதை விரும்புவதில்லை. தனியார் பேருந்துகளின் கட்டணத்தைக் கொடுக்க முடியாதவர்களே அரசுப் பேருந்துகளை நாடுகின்றனர். பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகளை, கையில் பேக்குடன் பார்த்தாலே, சென்னை செல்பவராக இருக்குமோ எனப் பேருந்திற்கு ஆள் பிடிப்பவர்கள் ஸார் சென்னைக்கா, குறைந்த நேரத்தில் சொகுசாய்ப் போகலாம் வாங்க வாங்க என அழைப்பர்.

அரசுப் பேருந்து ஓட்டுநர்களோ குறைந்த கட்டணம், இடைநில்லாப் பேருந்து எனக்கூறி அழைப்பர். இக்கலவரங்களுக்கிடையே ரகு நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனது காதில் சென்னை, சென்னை, பெங்களூரு, பெங்களூரு என்ற சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. ரகு சென்னையிலிருந்து தன் ஊருக்கு வருகிறான். சென்னையில் ஒரு கம்பெனியில் நல்ல வேலையில் இருப்பவன். மாதம் ஐநூறு ரூபாய்க் கட்டை சம்பளமாகப் பெறக்கூடியவன். இவனது ஊர் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஒரு கிராமம். அப்பா, அம்மா, அண்ணன் என்ற அளவான குடும்பம். அண்ணனுக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உண்டு. அண்ணன் ஒரு குடிகாரன். எதற்கெடுத்தாலும் ரகுவிற்குப் போன் செய்து பணம் கேட்டுக்கொண்டே இருப்பான். இதனால் ரகுவிற்கு அவன்மீது எரிச்சல் உண்டு.

ஊரில் நடக்கும் திருவிழாவிற்கு அண்ணன்தான் முதலில் அழைத்தான். அழைத்தவன் சும்மா கூப்பிடவில்லை. வரும்பொழுது செலவுக்கு ரூபாய் 20,000 கொண்டுவரும்படியும் கூறியிருந்தான். இதனால் ரகுவிற்கு ஊருக்குச் செல்லவே விருப்பமில்லை. அப்பா, அம்மாவின் வற்புறுத்தலாலே ஊருக்கு வருகிறான். ஊருக்கு வருவதற்குத் தன் கம்பெனி மேலாளரிடம் அனுமதி பெறுவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. விடுமுறை தரமுடியாது என்றவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. மாலை ஆறுமணிக்குமேல் ரகுவைக் கூப்பிட்டு மூன்று நாட்கள் விடுமுறை கொடுத்துவிட்டார். ரகு ஆறுமணிக்குமேல் அலுவலகத்தை விட்டுக் கிளம்பி, தன் அறைக்கு வந்து, துணிமணிகளை எடுத்துக்கொண்டு, பஸ் பிடிப்பதற்குள் பெரும் போராட்டமே நடந்துவிட்டது. அந்த அசதியில் திருச்சி வந்ததுகூடத் தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தான். பிறர் கத்தும் ஓசை கேட்டாலும் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. பேருந்து நடத்துநர் வந்து உசுப்பிய பின்பே எழுந்தான். எழுந்தவன் தனது பேக்கை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். காலை மணி ஐந்து இருக்கும். அப்படி இருந்தும் பேருந்து நிலையம் வெப்பமாகவே இருந்தது. பெரும்பான்மையான கிராமங்களில் திருவிழாக்கள் விவசாயமற்ற கோடை காலங்களிலேயே நடைபெறும். விவசாயத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் இன்றியும், விவசாயத்திற்கு உதவிய கடவுளர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் இவ்விழாக்கள் நடைபெறும். ரகு ஏ.சி பேருந்தில் வந்தாலும், கோடைகாலம் என்பதாலும், அவன் இறங்கியவுடன் பக்கத்திலிருந்த இனிப்புக் கடையில், குளிர்ந்த தண்ணீர் பாட்டில் வாங்கி, முகத்தைக் கழுவினான். குளிர்ந்த நீர் முகத்தில் பட சற்று இதமாக இருந்தது. முகத்தைத் துடைத்துக் கொண்டவன் பால் வாங்கிக் குடிக்கிறான். அவசரமாகச் சென்னையில் இருந்து கிளம்பி வந்ததால், குழந்தைகளுக்கு ஒன்றும் வாங்கவில்லை. அதனால் திருச்சிக் கடையிலேயே ஒரு கிலோ மில்க் ஸ்வீட், அரைக்கிலோ மிக்சர், காராச்சேவு, கிரீம்கேக், ஆரஞ்சு கிரீம் உள்ள பிஸ்கட் என நிறைய வாங்கிக்கொண்டு கிளம்புகிறான்.

அப்பொழுது அவன் அண்ணனிடமிருந்து அழைப்பு வருகிறது. போனை எடுத்து ஹலோ சொல்வதற்கு முன்பே, அவன் அண்ணன் நீண்ட பட்டியலிடுகிறான். ஊர்த் திருவிழாவிற்கு வரும் நண்பர்களுக்கு டிரீட் வைப்பதற்கு மதுபாட்டில்கள் வாங்கி வரும்படிக் கட்டளையிடுகிறான். யார் யாருக்கு என்னென்ன வேண்டுமென்பதை, சற்று நேரத்தில் தெரிவிப்பதாகச் சொல்லிவிட்டு, இவனுடைய பதிலுக்குக்கூடக் காத்திராமல் போனை வைத்துவிட்டான். ரகுவிற்கு எரிச்சலாக வந்தது. புதுக்கோட்டைக்குச் செல்லும் தனியார் பேருந்தில் ஏறினான். அதிகாலை நேரம் என்பதால் பேருந்தில் பெரிய அளவில் கூட்டம் இல்லை. தான் வாங்கி வைத்திருக்கும் தினமலர் நாளிதழைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். மீண்டும் அண்ணனிடமிருந்து அழைப்பு வருகிறது.போனை

எடுத்தவுடன் ஒரு லிஸ்டை வாசிக்கிறான். HOP.. - 1 FULL, BAC... RUM... - 1 FULL.... என அடுக்கிக்கொண்டே போனான். சரி சரி வாங்கிவருகிறேன் என்று சொல்லி போனை வைத்தான் ரகு. அதற்குள் டி.வி.எஸ் டோல்கேட் வந்துவிட்டது. அங்கு சிலர் ஏறிக்கொண்டனர். அதில் இளம்பெண்களும் அடக்கம். அந்தப் பெண்கள் பார்ப்பதற்கு அழகாகவும், அதே நேரத்தில் நேர்த்தியாகவும் உடை அணிந்திருந்தனர். அந்தப் பெண்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் ரகு. திடீரென இவன் பக்கம் திரும்பிய அந்தப் பெண்கள் இவனை நோக்கி வந்தனர். ரகு சற்றுப் பதற்றமானான். வந்த பெண்கள் ரகுவைப் பார்த்து, சார் கொஞ்சம் சீட் மாறி உட்கார முடியுமா எனக் கேட்டனர். அவனும் ஓ எஸ் என்று சொல்லி, அவன் உட்கார்ந்திருந்த சீட்டிற்குப் பின்னால் போய் அமர்ந்துகொண்டான். அந்த மூவர் சீட்டில் ஏற்கனவே ஒருவர் அமர்ந்திருந்தார். இவன் உட்கார்ந்தவுடன் சிறிது புன்னகைத்தவர், சன்னல் ஓரமாகத் தள்ளி அமர்ந்துகொண்டார்.

அண்ணனிடமிருந்து மீண்டும் அழைப்பு வந்தது. போனை எடுத்தவுடன் சரக்கு பற்றிப் பேசத்தொடங்கினான். அவனின் பேச்சு அருகில் இருப்பவர்களுக்கும் கேட்கும் அளவிற்கு இருந்தது. முன் சீட்டில் அமர்ந்திருந்த பெண்கள் ரகுவைப் பார்த்து நக்கலாகச் சிரித்தனர். ரகுவிற்கு ஒன்றும் செய்யமுடியாமல் போனை வைத்துவிட்டான். பேருந்து நகரத்தைக் கடந்து பயணிக்கத் தொடங்கியது. காற்று இதமாக பேருந்தினுள் வந்து சென்றது. காற்றோடு அந்தப் பெண்களின் தலையிலிருந்து வரும் பூவின் வாசனையும், ஷாம்பின் வாசனையும் ரகுவிற்கு மேலும் இதத்தைத் தந்தது. பேருந்திலிருந்து,

வளையோசை கலகலவெனக்
கவிதைகள் படைத்திடும்
சிலு சிலுவென்று தென்றல் காற்றும் வீசுது -

என்ற பாடல் இசைத்துக்கொண்டிருந்தது. பேருந்து பாதிதூரம் கடந்திருக்கும். உதவுகை ஊர்தியின் ஒய்ங்.... ஒய்ங் என்ற ஒலி மெல்ல மெல்ல காதை நோக்கி அதிகரித்துக்கொண்டே வந்தது. பேருந்து சாலையின் ஓரமாக நிறுத்தப்பட்டது. ஒரே சலசலப்பு. ஏரோ விபத்தாம். இருசக்கர வண்டியில வந்தவரை சரக்கு வண்டிக்காரன் இடித்துத் தள்ளிப்புட்டானாம். ஆள் அந்த இடத்திலேயே அவுட்டாம் என்றும், இல்ல இல்லப்பா, அடிப்பட்ட ஆள் உயிருக்குப் போராடிக்கிட்டிருக்காராம். ரத்தம் எல்லாம் வெளியேறிக்கொண்டே இருக்குதாம். ஆள் பிழைக்கிறது கஷ்டமா, அதான் உதவுகை ஊர்தி வந்திருக்கு என ஆளாளுக்குத் தனக்குத் தெரிந்தவரை பேசிக்கொண்டனர். ரகு சென்னையில் அடிக்கடி விபத்துக்களைப் பார்ப்பதால் அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவன் இருக்கைக்குமுன் உட்கார்ந்திருந்த பெண்கள் சன்னலுக்கு வெளியே நடப்பதை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். ரகுவோ அவர்களைப் பார்த்து ரசிப்பதிலே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். இந்த வேளையில் அடிபட்ட ஆளை ஏற்றிக்கொண்டு உதவுகை ஊர்தி திருச்சியை நோக்கிப் பறந்தது. உதவுகை ஊர்தி சென்றவுடன் காவலர்கள் கூட்டத்தையும் நெரிசலையும் சரி செய்தனர். இந்தப் பிரச்சனையில் வண்டி கிளம்ப அரைமணி நேரமானது. பேருந்து அவ்விடத்தைக் கடக்க, ஓடும் வண்டியில் ஒருவர் வேகமாக ஏறினார். ஏறியவருக்கு நாற்பது வயதிருக்கும். அரக்குநிறச் சட்டையும வேட்டியும் அணிந்திருந்தார். ரகுவின் அருகில் இடமிருக்க வந்தவர் அங்கு அமர்ந்து கொண்டார்.

அவர் மீதிருந்து ஒருவிதமான நாற்றம் வந்தது. வேட்டி கசங்கியும் அழுக்காகவும் காணப்பட்டது. பார்ப்பதற்குப் பத்து நாள் குளிக்காதவர்போல் காட்சி அளித்தார். உடம்பெல்லாம் வியர்த்து வடிந்திருந்தது. அவரைக் கண்ட ரகுவிற்கு எரிச்சலும் குமட்டலுமாக வந்தது. எரிச்சலை மனதில் வைத்துக்கொள்ளாமல், அந்த நபரின் காதில் விழும்படியாக, இந்த மாதிரி ஆட்களெல்லாம் எப்பத்தான் திருந்தப் போறாங்களோ தெரியலை. இந்த மாதிரி ஆளுகளால் நம்மல மாதிரி டீசண்டா வர்ற ஆட்க, நிம்மதியா பயணஞ் செய்யக்கூட முடியல. இவங்களோட ஒரே ரோதனையாப் போச்சு என்று சொல்லிவிட்டு இருக்கையை விட்டு எழுந்து நின்றான். ரகுவின் செயலைக் கண்ட அந்த நபர், இருக்கையை விட்டு எழுந்து செல்ல முயன்றார். இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெண்கள் ரகுவைப் பார்த்துப் புன்முறுவலித்தனர். இந்தப் புன்முறுவல் தன் செயலுக்கான அங்கீகாரம் என நினைத்த ரகு, அந்த நபர் வெளிச் செல்வதற்குமுன், அந்த இருக்கையில் காலை வைத்துத் தாண்டிச் சென்றான். தன் கால் செருப்பு அவர்மீது படுவது தெரிந்தும்கூட, அதைப்பற்றி சிறிதும் சட்டை செய்யாமல், அந்தப் பெண்களின் சீட்டிற்கு எதிராகப் போய் நின்றுகொண்டான்.

அப்பொழுது அவனது அலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. அதனை எடுத்தவன் கூப்பிட்டது அண்ணன் எனத் தெரிந்தவுடன் கட் செய்துவிட்டான். ரகுவின் அவமானப்படுத்தலை உணர்ந்துகொண்ட அந்த நபர் இருக்கையிலே அமர்ந்து கொண்டார். ரகுவிற்கு மீண்டும் அழைப்பு வந்தது. அழைப்பு அண்ணனிடமிருந்து என்று தெரிந்தவுடன், போனை கட் செய்து, சைலண்ட் மோடில் போட்டான். இவற்றை எல்லாம் அந்தப் பெண்கள் கவனித்ததால், ரகுவிற்கு அந்தப் பெண்கள் தன்னை சைட் அடிப்பதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தான். பேருந்தில் பாடும் பாட்டை வாயில் முணுமுணுத்தபடி, அந்தப் பெண்களை ஓரக்கண்ணால் பார்த்தபடியே வந்தான். தொடர்ந்து அவனுக்கு அழைப்பு வந்துகொண்டே இருந்தது. அதை அவன் கண்டுகொள்ளாமல் ரசிக்கும் வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

பேருந்தும் புதுக்கோட்டை வந்து சேர்ந்தது. பேருந்திலிருந்து இறங்கியவன் தனது அலைபேசியை எடுத்துப் பார்த்தான். அதில் 20 மிஸ்டு கால்கல் இருந்தன. அது அண்ணனிடமிருந்து வந்தது எனத் தெரிந்தவுடன், அதை சட்டை செய்யாமல், சரக்குகளை வாங்குவதற்கு மதுபானக் கடையை விசாரித்துச் சென்றான். மதுபானக் கடைக்கு அருகில் செல்லும்பொழுது அண்ணனிடமிருந்து

அழைப்பு வந்தது. போனை எடுத்தவன், அண்ணன் பேசுவதற்கு முன்பாகவே, அதான் நீ சொன்ன சரக்கெல்லாம் வாங்கிட்டு வருகிறேன் என்று சொன்னேனே. அப்புறம் எதுக்கு விடாம போன் பண்ணிக்கிட்டே இருக்கிற என்றான். அது இல்லடா ரகு, ஏய் நீ ஒண்ணும் சொல்லவேணாம். நீ சொன்னதை எல்லாம் வாங்கணுமுன்னாலே 5000 ரூபாய் ஆகிடும். அதுக்கு மேல என்னால எல்லாம் வாங்க முடியாது சரியா என்றான். டேய் ரகு நான் சொல்றத கேளுடா, நம்ம அப்பாவுக்கு ஆக்ஸிடண்ட் ஆயிடுச்சாம் என்று சொன்னவன் சத்தமாக அழத் தொடங்கினான். இதனைக் கேட்ட ரகுவிற்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன நடந்தது என்று யோசிப்பதற்குள் அண்ணனே தொடர்ந்தான். திருச்சி ரோட்ல கீரனூருக்குப் பக்கத்தில ஏதோ சரக்கு வண்டிக்காரன் அடிச்சுப் போட்டானாம். அப்பாவைத் திருச்சியில உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்திருக்காங்களாம். நாங்க அங்கதான் போயிட்டு இருக்கோம். நீயும் உடனே வந்துசேரு எனப் போனை வைத்தான். பதற்றப்பட்ட ரகு, ஒரு வண்டியைப் பிடித்து, திருச்சி வந்து சேர்ந்தான். மருத்துவமனைக்குள் நுழைந்தவன் அம்மாவையும் அண்ணனையும் பார்த்தவுடன் அழுதுவிட்டான்.

அப்பாவிற்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே கண்ணீரும் விசும்பலுமாக நேரம் போய்க் கொண்டிருந்தது. ரகு வந்து ஒருமணி நேரம் இருக்கும். சிகிச்சை முடித்து வந்த மருத்துவரை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர். எல்லோர் முகத்திலும் கவலை ரேகை பதிந்திருந்தது. மருத்துவரே தொடர்ந்தார். யாரும் கவலைப்பட வேண்டாம். உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. விரைவாகக் குணமடைந்து விடுவார் என்று கூறிச் சென்றார். எல்லோரும் கண்ணீரோடு நன்றி தெரிவித்தனர். அப்பாவைப் பார்க்க உள்ளே ஒருவர்பின் ஒருவராகப் போய் வந்தனர். அப்பா மயக்க நிலையில் இருந்தார். உடம்பெல்லாம் காயங்களுடன் காணப்பட்டார். வெளியே வந்த ரகு அண்ணனைப் பார்த்துக் கேட்டான். எப்படி நடந்தது. அப்பா ஏன்அந்த ஊருக்குப் போகணும் என்று. ரகுவின் அண்ணன் இல்லடா தம்பி, கரிமூட்டை வியாபாரி அந்த ஊர்லதான் இருக்கார். அதிகாலையில் வந்து வாங்கிட்டுப் போன்னு சொன்னாராம். அதான் திருவிழாச் செலவுக்குக் காசு வாங்கிட்டுப் போகலாமுன்னு அப்பா வந்திருக்கார்.

அப்பதான் இந்த விபத்தே நடந்திருக்கு. விடியங்காட்டியே விபத்து நடந்திருக்கும் போல. அடிச்சுப்போட்டவன் எனக்கென்னன்னு போயிட்டான். யாருக்குமே தெரியல. அந்த வழியா வந்த ஒருவர்தான் அப்பாவைப் பாத்துப்புட்டு, ஆம்புலன்ஸ்க்குப் போன் செய்திருக்கார். ஆம்புலன்ஸ் வந்தவுடன் அப்பாவைத் தூக்கி அனுப்பி இருக்கார் என்றான். இதெல்லாம் எப்படி உனக்குத் தெரியும். அப்பாவுடைய போனில் இருந்து பேசியவர் சொன்னார். அப்பாவைப் பார்த்த அந்த மனிதர் அப்பாக்கிட்ட இருந்த பணத்தை எடுத்து, ஊருக்குள்ள இருந்த டீக்கடையில கொடுத்து விவரத்தையும் சொன்னார் என்றான். எவ்வளவு பணம் என்றான் ரகு. 30,000 மாம். அதான் அப்பா நல்லாயிக்கார்ல. நாம போயி அந்தப் பணததை வாங்கிட்டு வந்தா, அப்பாவோட வைத்தியச் செலவுக்கு ஆகும் என்றான். சரி என்று இருவரும் ரகு வந்த காரிலே கிளம்பிச் சென்றனர்.

அந்த ஊருக்குச் சென்று டீக்கடைக்காரரிடம் விசயத்தைச் சொல்லிப் பணத்தைக் கேட்டனர். டீக்கடைக்காரர் பணத்தைக் கொடுத்துவிட்டு, அடிப்பட்டவரைப் பற்றி நலம் விசாரித்தார். ரகு டீக்கடைக்காரருக்கு நன்றி கூறினான். அதற்கு டீக்கடக்காரர் எனக்கு எதுக்கு தம்பி நன்றி எல்லாம், உங்க அப்பாவை, சரியான நேரத்திற்குப் பார்த்து, தகவல் சொல்லி, ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார் பாரு, அவருக்குத்தான் தம்பி நீங்க நன்றி சொல்லணும் என்றார். ரகு ஐயா, அவரு யாரு எங்க இருப்பாரு என்றான். அவரு நம்ம பக்கத்து ஊருதான். இப்பதான் பிரைவேட் பஸ்ல புதுக்கோட்டை வரைக்கும் போயிருக்காரு. என்னன்னே சொல்றீங்க ஆள் எப்படி இருப்பாரு.

ஆள் அரக்கு கலர்ல சட்டையும் ஒரு வேட்டியும் போட்டிருந்தார். உங்க அப்பாவைத் தூக்கினதுனால வேட்டி சட்டை எல்லாம் ரத்தக் கறையா போயிடுச்சு. வேட்டியெல்லாம் கசங்கிப் போச்சு. ஏதோ அவரச வேலையா வந்தாராம். இருந்தாலும் பரவாயில்லையின்னு, அடிப்பட்டவருக்கு உதவி பண்ணிட்டுப் போயிட்டாரு என்று டீக்கடைக்காரர் சொல்லச் சொல்ல, ரகு தன் தலையில் கையை வைத்துக்கொண்டு ஓவென அழ ஆரம்பித்தான். ரகு திடீரென அழ ஆரம்பித்ததைக் கண்ட அண்ணன் ஒன்றும் புரியாமல் ரகுவைச் சமாதானம் செய்யத் தொடங்கினான்.



# கல்லூரிக்குள் காலடி வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கான பயனுள்ள தகவல்கள்...




நல்ல துவக்கம் நல்ல முடிவுக்கு வழி வகுக்கும். எனவே தொடக்கத்திலிருந்தே நன்றாகப் படித்தால் "அரியர்ஸ்" எதுவுமின்றி பல்கலைக்கழகத் தேர்வில் பல்கலைக்கழகத் தரம் பெறலாம்.

காலவரையறை - திட்டமிட்ட வகையில் நேரம் செலவிடல் வேண்டும். வகுப்புகள் இல்லாத நேரத்திலும் ஓய்வு நேரத்திலும் நூலகம் சென்று புத்தகங்களை படித்தல் வேண்டும்.

நல்ல நண்பர்கள் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பேராசிரியர்களிடம் சுமூகமான உறவு இருக்க வேண்டும்.

அன்றன்று நடத்தப்படும் பாடங்களை அன்றன்றே படித்தல் வேண்டும். கல்லூரியில் பருவத்தேர்வு முறையாக உள்ளதால் மொத்தமாகப் படிப்பது பயனளிக்காது.

நம்முடைய திறமைக்கேற்ற நல்ல வேலைக்கான நோக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் பட்டப்படிப்பிலேயே நம்முடைய நோக்கத்திற்காக நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஷிப்ட் முறையில் உள்ள கல்லூரியில் படிக்கும்போது கிடைக்கும் ஓய்வு நேரத்தை உபயோகமான முறையில் கழிக்க வேண்டும். அதாவது டைப்ரைட்டிங் சுருக்கெழுத்து கம்ப்யூட்டர் கோர்ஸ் போன்றவைகளில் சேர்ந்து படிக்கும்போது வீணான நட்புகளைத் தவிர்க்கலாம்.

மாலை நேரங்களில் விளையாட்டு மற்றும் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது மனதுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும்.

ஸ்காலர்ஷிப் மற்றும் தேர்வு எழுதுவதற்குக் குறிப்பிட்ட அளவு வருகைப்பதிவு மிக அவசியம். எனவே தேவையில்லாமல் வகுப்பு ஆப்சென்ட் ஆவதைத் தவிர்க்க வேண்டும்.

தனித்திறமையுடையவர்களாக நீங்கள் இருந்தால் உங்களது கல்லூரியில் உள்ள பல பிரிவுகளாக இயங்கி வரும் குழுக்களுக்கான பேராசிரிய ஒருங்கிணைப்பாளர்களிடம் அறிமுகப்படுத்தித் தங்களது திறமைகளை மேலும் வளர்க்கலாம்.




கல்லூரி மற்றும் துறையின் அறிவிப்புப் பலகையை அவ்வப்போது பார்ப்பதன் மூலம் கல்லூரி நிகழ்ச்சிகள் மற்றும் பல பயனுள்ள கருத்துக்களை அறிந்து கொள்ளலாம்.

கல்லூரி விடுதியிலிருந்து படிக்க விருப்பமுடையவர்கள் அடிக்கடி வீட்டிற்குச் செல்லாமல் மாதம் ஒருமுறை மட்டும் சென்று வருவது நல்லது. இதனால் வீணான செலவுகளையும் மனச் சிதறல்களையும் தவிர்க்கலாம்.




விடுதிகளில் தங்கிப் படிக்கும்போது வழங்கப்படும் உணவினை அருந்த பழகிக் கொள்வது நல்லது. வீட்டின் உணவுத் தரத்தினை ஒப்பிடாமல் சற்று பொறுத்துக் கொள்வது மிக அவசியம்.

அனைத்து கல்லூரிகளிலும் ராக்கிங் தடை செய்யப்பட்டுள்ளதால் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. அப்படி ஏதேனும் சிறு தொந்தரவுகள் இருந்தால் உங்களது துறைத்தலைவரிடம் தெரிவித்தால் போதுமானது.




நீங்கள் விளையாட்டில் திறமையுடையவர்களாக இருந்தால் கல்லூரி உடற்கல்வி இயக்குநர்களிடம் அறிமுகப்படுத்திக் கல்லூரி அணியில் இடம் பெறுவதோடு பல்கலைக்கழக அணியிலும் இடம் பெற முயல முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொரு பருவமும் கொடுக்கப்படும் மதிப்பெண் பட்டியலை பெற்றோருக்கு கண்டிப்பாகத் தெரியப்படுத்த வேண்டும்.

**மேற்கூறிய தகவல்களை நீங்கள் உங்கள் கல்லூரி வாழ்க்கையில் கைக்கொள்ளும்போது பல்கலைக்கழகத் தரத்துடன் உங்களது பட்டப்படிப்பை முடித்து வெற்றிப் பயணத்தைத் தொடங்கலாம்.**



முனைவர் எ. ஞா. வெஸ்லி ஜெபசிங் தேவயிரக்கம்
உதவிப் பேராசிரியர், தாவரவியல் துறை

# முதல்வருக்கு பாராட்டு

முனைவர் அ. லீலா குளோரி பாய் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் முதல்வர், இவர் பேரைச் சொன்னவுடனே அம்மாவின் பணியாற்றும் தரம் அனைவருக்கும் தெரிந்த நிரந்தரம். இவரது முதற்பணித் தொடக்கம் 1983–84இல் முத்துக்குளிக்கும் நகரான வீரம் விளைந்த தூத்துக்குடி செயின்ட் மேரீஸ் கல்லூரியிலும் பின்பு இமயம் போற்றும் இரண்டாவது தொடக்கமா 1984–85இல் நாகர்தோசம் போக்கும் நாகர்கோயில் ஹோலி கிராஸ் கல்லூரியிலும் முத்தான மூன்றாம் தொடக்கமாக 1985–86இல் யாவற்றையும் விருத்தியடையச் செய்யும் விருத்தாச்சலம் கொளஞ்சியப்பர் அரசு கல்லூரியிலும் நாடுபோற்றும் நான்காம் தொடக்கமாக அரசு கலைக்கல்லூரி சேலம் – 7 லும் ஆற்றல் நிறைந்த ஐந்தாம் தொடக்கமாக பெரிய கல்லை பெயராகக் கொண்ட நாமக்கல்லில் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்!" என்று சுதந்திர போராட்ட நாளில் முழங்கிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அரசு கலைக்கல்லூரியிலும், அகிலம் போற்றும் ஆறாம் தொடக்கமாக அண்ணாவின் பெயரைத் தாங்கிய நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் முத்தான முதல்வராக 10.10.2016 முதல் புணிபுரிந்து வருகிறார்.

இக்கல்லூரி பல முதல்வர்களைப் பெருமைப் படுத்தியுள்ளது. ஆனால் இக்கல்லூரியே ஒரு முதல்வரால் பெருமையடைந்தது என்றால் அவர் நீங்கள்தான். நம் முதல்வர் கல்லூரிக்கு வருவதில் முதல்வர், அலுவலகப் பணிகளைக் கண்டு ஆவன செய்வதில் தலைவர், கல்லூரியை நல்விதமாக நடத்துவதில் நல்லவருக்கு நல்லவர், நாடு போற்றும் வல்லவர். நல்லதொரு நிர்வாகியாய் நாடறிந்தவர், பண்பாளர், பகுத்தறிவுமிக்கவர் கருணைமிக்க மாதாவாய் திகழ்பவர்.

கல்லூரிக் கலையரங்கில் கவனம் பதித்து சொர்க்கபூமியாய் மாற்றினார் பிறரின் சாதனைகளைப் போக்கினார். திறந்தவெளிக் கலையரங்கை உலகறிந்த கலையரங்காய் மாற்றினார் அதற்காகப் பற்பல பணியை ஆற்றினார். மாணவர் நலமே உங்களது ஓங்கிய எண்ணம். அதற்கென்று மாணவிகளின் ஓய்வறை, நடைபாதை, நறுங் குடிநீர், நவீனக் கண்காணிப்புக் கேமிரா எனப் பற்பல பணிகள் இதை அவ்வப்போது சேர்ந்து பணிபுரிய பேராசிரியர்களின் அணிகள். உதவிக்குப் பல கரங்கள்.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக முத்தமிழ் விழா, அகிலம் போற்றும் 50ஆம் ஆண்டு பொன்விழா, பகலவன் போற்றும் பண்பாட்டு விழா, கதிரவன் போற்றும் கல்லூரி விழா எனச் சிறப்பு செய்தீர். எங்களையெல்லாம் மகிழ்ச்சி செய்தீர் பற்பல அறிக்கைகள் பார் போற்றும் நடவடிக்கைகள் எடுத்தீர்.

பணிகளில் தொய்வில்லை வாழ்க நீங்கள் பல்லாண்டு வளர்க நூற்றாண்டு கடவுளின் ஆசியோடு காலமெல்லாம் பல்லாண்டு வாழ்க! வளர்க!...

வாழ்த்துக்களுடன்
முனைவர் பி. கந்தசாமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

# பூமிபூசை விழா

தேதி : 23 மார்ச், 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.

முன்னதாக 23-03-2018 அன்று காலை 09.00 மணியளவில் மாணவியர் ஓய்வு அறைக்கான பூமிபூசை நடைபெற்றது. பொன்விழா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மாணவிகளுக்கு ஓய்வு அறை கட்டிடம் கட்ட ரூ.10,00,000/- ஐ கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத் துணைத்தலைவர் மற்றும் நாமக்கல்லின் முன்னாள் நகர்மன்றத் தலைவர் திரு. இரா. கரிகாலன், பொன்விழாக் கமிட்டி கட்டிடக் குழுமத் தலைவர் மற்றும் தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர் சங்கத் தலைவர் திரு. எஸ்.கே. வேல், முன்னாள் மாணவர்கள் சங்க உறுப்பினர் திரு. ஜோதி குப்புசாமி வழங்கினார்கள். இதன் பொருட்டு நடந்த பூமி பூஜை விழாவில் முன்னாள் மாணவர் சங்க பிரதிநிதிகளும் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன், திரு. மு. களஞ்சியம், திரு. பொழிலன், கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ஆகியோர்களும் பங்கேற்க மாணவ மாணவியர் முன்னிலையில் ஓய்வு அறை கட்டிட பூமி பூசை வெகு சிறப்பாக நடைபெற்றது.








# முத்தமிழ் விழா

தேதி : 23 மார்ச், 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.

| இயல் | இசை | நாடகம் |
|---|---|---|
| எண்ணும் எழுத்தும் | பாடும் பாட்டு | நடிப்பும் கூத்தும் |

அறிஞர் அண்ணாவின் பெயரைத் தாங்கிய இக்கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு முதல் நாள் முத்தாய்ப்பு நிகழ்வாக இயல், இசை, நாடக விழா காலை 10.00 மணிக்கு கல்லூரித் திறந்தவெளிக் கலையரங்கில் துவங்கியது.

பொன்விழா ! புகழ்விழா முத்தாய்ப்பான புகழ்விழா ! இதுவே எமது முத்தமிழ் விழா ! பார் போற்றும் பாச விழா ! பகலவன் போற்றும் பகுத்தறிவு விழா !

## குத்துவிளக்கேற்றல்

முத்தமிழ் விழாவின் இரண்டாம் நிகழ்வாய் ஒளியேற்றம் மரபாய் குத்துவிளக்கேற்றலில் ஐந்து முக விளக்கினை அமர்த்தி வைத்தோம். ஒரு முகத்தில் எங்கல் கல்லூரி முதல்வர் அ. லீலா குயோரி பாய் அவர்களும் இரண்டாம் முகத்தில் மேனாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் க. சேகர் அவர்களும் மூன்றாம் முகத்தில் பல வெற்றிப்படங்களை இயக்கிய இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்களும் நான்காம் முகத்தில் இயக்குநர் மு. களஞ்சியம் அவர்களும் ஐந்தாம் முகத்தில் ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு கல்வி இயக்கம் பொழிலன் அவர்களும் விளக்கேற்ற, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. நடராஜன், முனைவர் பி. கந்தசாமி, முனைவர் சு. அன்பரசன், முனைவர் ப. நல்லுசாமி, முனைவர் து. இரவிக்குமார், முனைவர் சு. கார்த்திகேயன், முனைவர் க. பூபதி, முனைவர் பி. இன்னமுது ஆகியோரும் உடன் இருந்தனர்.





வந்தாரை வரவேற்கும் முகத்தான் தமிழ்த்துறை தலைவர் முனைவர் மு. நடராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவருக்கு இட்ட பணியோ வரவேற்புரை அவர் உரைத்த விதமோ உன்னதமான சிறப்புரை. சிறப்பு விருந்தினர் ஒவ்வொருவரின் புகழையும் பெருமைகளையும் அவைக்கு அறிமுகப்படுத்தினார்.





முத்தமிழ் நிகழ்வின் நான்காம் நிகழ்வாக தகைசால் கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் தன்னிகரற்ற தலைமையுரையைத் தரணி போற்ற வழங்கினார்.



முத்தமிழ் விழாவின் ஐந்தாம் நிகழ்வாக மேனாள் கல்லூரிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் க. சேகர் வந்தோரை வாழ்த்தும் விதமாக விழா வாழ்க என்று வாழ்த்துரை வழங்கினார்.



முத்தமிழ் முதற்றமிழாம் இயற்றமிழ் இதற்குப் பெருமை சேர்க்கும் விதமாக பல வெற்றிப்படங்களை இயக்கிய இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன் அவர்கள் பேசினார். அவரது உரையில் துறைதோறும் தூய தமிழ் செழித்து வளர மாணவர்களாகிய இளஞ் சமூகம், அதனை முன்னெடுத்துக் காரியம் ஆற்ற வேண்டும் என்றும், ஈடுபாடு, உழைப்பு, தன்னம்பிக்கை, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகள் இருந்தால் வெற்றியைத் தேடி நீங்கள் செல்ல வேண்டாம். வெற்றியே உங்களைத் தேடி வரும் என்றும் மாணவர்களிடையே உரை நிகழ்த்தினார்.








இயக்குநர் மு. களஞ்சியம் பேசுகையில் கல்வித் தரம் கட்டிடத்தில் இல்லை, கற்றுத்தரும் ஆசிரியர்களின் செயல்பாட்டில் தான் உள்ளது எனவும், நீ என்னவாக நினைக்கிறாயோ அதன்படி செயல்வடிவம் கொடுத்தால் வெற்றி பெறலாம் என்றும் பேசினார்.

தமிழ்நாடு கல்வி இயக்க ஒருங்கிணைப்பாளர் திரு. பொழிலன் அவர்கள் பேசுகையில் நம் குழந்தைகளுக்குத் தாய்மொழியாகிய தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்றும் நகருக்கான பெயர்ச்சொல்லின் சிறப்பு குறித்தும் தொல்காப்பியத்தின் சிறப்பு பற்றியும் விரிவாகப் பேசினார்.

முத்தமிழின் இரண்டாம் கூறான இசையில் கலைவளர்மணி சுந்தரவினோத் குழுவினரின் மங்கள இசையும் பாடல்கள் பாடும் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாணவர்களின் மன எழுச்சியோடு கரவொலி மேலோங்க இனிதே நடைபெற்றது.

முத்தமிழின் மூன்றாம் கூறான நாடக நிகழ்வில் முனைவர் கி. பார்த்திபராஜாவின் நாடகக் குழுவினரின் "பாரதி வருகிறார்" என்னும் நவீன நாடகம் கண்களுக்கு விருந்தாய் காட்சிக்கு அருமருந்தாய் செவிக்கு இன்பத் தேனாய் மனங்களுக்கு அமுதாய் நடைபெற்றது.



நிகழ்வுகளைத் தொடர்ந்து நாமக்கல் சவகர் பாலபவன் வழங்கிய பரதம், கரகம், சிலம்பம் ஆகிய தமிழர் பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளுடன் இக்கல்லூரி மாணவ மாணவியரின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

முத்தமிழ் விழாவின் நிறைவாக கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நவிழ்தலைத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி. கந்தசாமி நன்றியோடு நிகழ்த்தினார்.



விழாத் துளிகளான நிகழ்ச்சிப் பூக்களைத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அரசுபரமேசுவரன் மாலையாகத் தொகுத்தளித்தார். விழாவின் நிறைவாக நாட்டுப்பண் இசைக்கப்பட்டு இனிதே நிறைவேறியது.

வாழ்க முத்தமிழ்

தேதி : 24 மார்ச், 2018
இடம் : அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2049 பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (24.03.2018) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நமது கல்லூரி திறந்தவெளிக் கலையரங்கத்தில் பொன்விழா நிகழ்ச்சியானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. லீலா குளோரி பாய் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி ஆண்டறிக்கையினைப் புள்ளியியல் துறைத்தலைவர் முனைவர் கு. இரவிச்சந்திரன் அவர்கள் வாசித்தார். இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மு. ஆசியா மரியம் அவர்கள் தலைமை தாங்கி மாணவர்களின் இன்றைய நிலையில் வேலைவாய்ப்பு வழிமுறைகளைக் குறிப்பிட்டுத் தலைமையுரையாற்றினார்.






மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் பொன்விழா ஆண்டு மலரை வெளியிட்டும் இங்குப் பயிலுகின்ற மாணவியருக்கு தனிவிடுதி ஒன்று விரைவில் உருவாக்கித் தருவதாகவும் மாணவர்களுக்குத் தேவையான மற்ற உதவிகளையும் செய்து கொடுப்பதாகவும் கூறிச் சிறப்புரையாற்றினார். முன்னதாக நாமக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தைத் தொடங்கி வைத்தார்.





















விளையாட்டுப்போட்டி, நுண்கலை மன்றப் போட்டிகள், மாரத்தான் மற்றம் கலைப்போட்டிகளில் வெற்றிபெற்ற பல்வேறு மாணவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பரிசுகள் வழங்கினார். 2016-17ஆம் ஆண்டில் அகில இந்திய உயர்கல்வி ஆய்வு அறிக்கையின்படி உயர்கல்விக்குச் செல்வோரின் எண்ணிக்கை 46.09 சதவிகிதம் ஆகும். இந்த எண்ணிக்கை தேசிய அளவில் 25.02 சதவிதமாக உள்ளது எனக் குறிப்பிட்டார். தமிழக அரசு புதிய கலை அறிவியல் கல்லூரிகளும் புதிய பாடப்பிரிவுகள் தொடங்கியது பற்றியும் குறிப்பிட்டுச் சிறப்புரையாற்றினார்.



















சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் மருத்துவர் வெ. சரோஜா அவர்கள் மாணவர்களுக்கு சமூக நலன் சார்ந்த முறையிலும் அரசு வழங்கிய சத்துணவுத் திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்துச் சிறப்புரை வழங்கினார். கல்லூரிக்கல்வி இயக்குநர் முனைவர் ஜெ. மஞ்சுளா அவர்கள் பொன்விழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் கல்லூரிக்காகத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 7.50இலட்சம் நிதியை வழங்குவதாக அறிவித்தார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள் தம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தை வழங்கி வாழ்த்துரையாற்றினார். ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வகுமாரசின்னையன் அவர்களும் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். நிகழ்வின் இறுதியாகத் தாவரவியல் துறைத்தலைவர் திருமதி. க. வசந்தாமணி அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.











# தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருது

இடம் : தலைமைச் செயலகம், சென்னை.

நாள் : 05.04.2018




தமிழக அரசால் வழங்கப்படும் தமிழ்ச் செம்மல் விருது தமிழ்மொழி வளர்ச்சிக்காக பாடுபடும் தமிழ் அறிஞர்களுக்காக வழங்கப்படும் விருது. இவ்வாண்டு நாமக்கல் மாவட்டத்தின் சார்பாக இவ்விருதினை முனைவர் அரசுபரமேசுவரன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, நாமக்கல் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. கே. பழனிசாமி அவர்களிடமிருந்து பெற்றார். இவ்விருதுடன் ரூபாய் 25,000/- பணமுடிப்பும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மரியாதைக்குரிய துணை முதல்வர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மரியாதைக்குரிய உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் மற்றும் தலைமை செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

# பொன்விழா ஆண்டில் பணி ஓய்வு பெறுபவர்கள்

முனைவர் திருமதி அ. லீலா குளோரி பாய்

**முதல்வர்**



முப்பத்தைந்து காலம் கல்விப்பணியாற்றிய இவர் தற்போது நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் முதல்வர். தன் கல்விப்பணியை 1983-1984 ஆம் கல்வியாண்டில் தூத்துக்குடி செயின்ட் மேரிஸ் கல்லூரியிலும் 1984-1985 ஆம் கல்வியாண்டில் நாகர்கோயில் ஹோலிகிராஸ் கல்லூரியிலும் தொடங்கிய இவர் 1985-1986ஆம் கல்வியாண்டு முதல் பல அரசு கல்லூரிகளில் பணியாற்றியுள்ளார். விருத்தாச்சலம் கொளஞ்சியப்பர் அரசு கல்லூரியிலும் குடியாத்தம் அரசு கல்லூரியிலும் சேலம்-7 அரசு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை மகளிர் கல்லூரியில் தாவரவியல் துறையில் 28 ஆண்டுகள் பணியாற்றியவர். 11 ஆண்டுகள் துறைத்தலைவராக இருந்தவர். அரசு கல்லூரிகளில் பணியாற்றிய காலங்களில் கல்லூரிகளில் செயல்படும் NSS, YRC, RRC உள்ளிட்ட பெரும்பான்மையான அமைப்புகளில் தன் கூடுதல் பங்களிப்பைச் செலுத்தியவர். 10.10.2016 முதல் இக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்ற இவர் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணத்துக்கொண்டவர். சிந்தையும் செயலும் 'கல்லூரி வளர்ச்சி' என்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டவர். மாணவர்கள் நலனுக்காகப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். செய்யும் செயல் நேர்த்தியாக அமையும் வரை தொடர்ந்து அதை வடிவமைப்பவர். சிற்பியின் பொறுமையோடு கல்லூரியைச் செதுக்கியவர். குறைவான காலத்தில் நிறைவான பல பணிகளைக் கல்லூரிக்காகச் செய்தவர். சிறந்த நிர்வாகத் திறன் கொண்ட இவரது பணிநிறைவுக்குப் பின்னான காலம் மகிழ்ச்சி நிறைந்ததாக அமையட்டும்.



முனைவர் மு. விஜயராஜன்

**விலங்கியல் துறைத்தலைவர்**

1986ஆம் ஆண்டு கொளஞ்சியப்பூர் அரசு கல்லூரியில் விலங்கியல் துறையில் பணியில் சேர்ந்த இவர் 33 ஆண்டுகள் பணி அனுபவமுடையவர். அக்டோபர் 2005 முதல் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார். 2008 ஆம் ஆண்டு விலங்கியல் துறைத்தலைவர் பதவியில் அமர்ந்த இவர் அத்துறை வளர்ச்சிக்குப் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். 2018 மே மாதத்துடன் ஓய்வு பெறும் இவரது பணி பாராட்டுக்குரியது.

திரு. மு. காத்தவராயன்

**குறியீட்டாளர், உடற்கல்வித் துறை**



இவர் அறுஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் 22.07.1983இல் குறியீட்டாளர் பணியில் சேர்ந்தார். பணியில் சேர்ந்தது முதல் இன்று வரை அனைவரின் அன்பையும் பெற்றவர். காரணம், பணி செய்யும் இடத்தை வீடாகவும் குடும்பமாகவும் பார்க்கக்கூடிய தன்மை கொண்டவர். கொடுத்த வேலையை அவசரப்படாமல் குறித்த நேரத்தில் முடிப்பவர். தெரியாத வேலையாக இருந்தாலும் அதை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து முழுமையாக முடித்துக்கொடுப்பவர். இன்றைய மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு புரிதல் உணர்வைக் கொண்டு அவர்களின் விளையாட்டு மேன்மைக்கு உறுதுணையாக இருந்தவர். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு படித்த மாணவர்களின் பெயர், துறை ஆகியவற்றை இப்போதும் நினைவில் வைத்துக் கூறும் தன்மை படைத்தவர். முதல்வர் முதல் மாணவர்கள் வரை அனைவரும் விரும்பும் ஒரு நபராக இருந்த இவர் 31.03.2018 அன்று பணி ஓய்வு பெறுகிறார். சிறப்பு மிக்க இவர் பொன்விழா ஆண்டில் ஓய்வு பெறுவது சிறப்பாகும்.

# பொன்விழாவிற்காக நன்கொடை நல்கிய நல் உள்ளங்கள்

1. முனைவர் பானுமதி, தமிழ்த்துறைத் தலைவர், அரசு கலைக் கல்லூரி, திருவெறும்பூர்.
2. முனைவர் குழந்தைவேல், முன்னாள் தாவரவியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
3. முன்னாள் மாணவர் சங்கம், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
4. முனைவர் டி. ஆர். கணேசன், முன்னாள் முதல்வர், திருவள்ளுவர் அரசுக் கலைக்கல்லூரி, ராசிபுரம்.
5. முனைவர் வேலுசாமி, முன்னாள் பொருளியல் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
6. முனைவர் மு. லோகநாதன், முன்னாள் பொருளியியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
7. முனைவர் சொக்கலிங்கம், முன்னாள் புள்ளியியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
8. முனைவர் வி. தங்கவேல், முன்னாள் தாவரவியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
9. முனைவர் கே. ராஜாமணி, முன்னாள் பொருளியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
10. பேராசிரியர் ஏ. பெரியசாமி, முன்னாள் வணிகவியல் துறைப்பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
11. பேராசிரியர் சி. பழனிசாமி, முன்னாள் புவியியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
12. பேராசிரியர் திருமலை, முன்னாள் வரலாறுத்துறை பேராசிரியர்.
13. பேராசிரியர் ஏ. லோகநாதன், வேதியியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
14. முனைவர் எஸ். அன்பரசன், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
15. திருமதி கே. வசந்தாமணி, தாவரவியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
16. முனைவர் பி. கந்தசாமி, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
17. முனைவர் பி. நல்லுசாமி, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
18. முனைவர் பி. கோபி, இயற்பியல் உதவிப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
19. முனைவர் சந்திரசேகரன், முன்னாள் வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
20. முனைவர் ஜி. மகேந்திரன், முதல்வர், எம்.ஜி.ஆர். அரசுக் கலைக்கல்லூரி, பாலக்கோடு.
21. பேராசிரியர் எஸ்.எம். ராமசாமி, முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
22. முனைவர் பரமசிவம், முன்னாள் இயற்பியல் துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
23. முனைவர் பி. பாரதி, முன்னாள் கணிதவியல் துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
24. முனைவர் சிவராமகிருஷ்ணன், முன்னாள் முதல்வர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
25. முனைவர் பி. சேகர், முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை.
26. முனைவர் ஆர். வெங்கடாஜலம், முன்னாள் வணிகவியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
27. முனைவர் ஏ. வீரமணி, முன்னாள் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம்
28. முனைவர் கே.எம். தங்கவேலு, முன்னாள் பொருளியல் துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
29. பேராசிரியர் தங்கராஜா, முன்னாள் விலங்கியல் துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்
30. முனைவர் ஆர். பாரி, முன்னாள் முதல்வர், அரசு கலைக்கல்லூரி, கரூர்.
31. முனைவர் எஸ். கலைச்செல்வன், முதல்வர், லேடி வெலிங்டன் கல்வியியல் கல்லூரி, சென்னை.
32. திரு ஆர். அய்யாவு, வழக்கறிஞர், முன்னாள் மாணவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
33. பேராசிரியர் ரத்தினசபாபதி, முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
34. திருமதி மாலதி, உதவிப் பேராசிரியர், கந்தசாமி கண்டர் கல்லூரி, வேலூர்.
35. திருமதி பூங்கோதை, முன்னாள் பொருளியல் துறைத்தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
36. முனைவர் ஜே. ஸ்டீபன், முன்னாள் தாவரவியல் துறைப் பேராசிரியர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.
37. முனைவர் மு. நடராஜன், தமிழ்த்துறைத் தலைவர், அ.அ.அ.க.கல்லூரி, நாமக்கல்.

# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்

# பொன் விழா ஆண்டு







[NAAC- ஆல் "B" தரம் நிர்ணயம் செய்யப்பட்ட கல்லூரி]

சந்நியாசி கரடு, நாமக்கல்.

## 2018-19 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கைக்கான பாடப்பிரிவுகள்

| துறை / பாடப்பிரிவுகள் | இளங்கலை / இளம் அறிவியல் | முதுகலை / முது அறிவியல் | ஆய்வியல் நிறைஞர் | முனைவர் பட்டம் |
|---|---|---|---|---|
| தமிழ் இலக்கியம் | B.A. | M.A. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| ஆங்கில இலக்கியம் | B.A. | M.A. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| பொருளியல் | B.A. | M.A. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| வணிகவியல் | B.Com. | M.Com. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| வணிக நிர்வாகவியல் | B.B.A | - | - | - |
| இயற்பியல் | B.Sc. | M.Sc. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| வேதியியல் | B.Sc. | M.Sc. | M.Phil. (FT & PT) | Ph.D (FT & PT) |
| தாவரவியல் | B.Sc. | M.Sc. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| விலங்கியல் | B.Sc. | - | - | - |
| கணிதம் | B.Sc. | M.Sc. | M.Phil. (FT & PT) | Ph.D. (FT & PT) |
| புள்ளியியல் | B.Sc. | - | - | - |
| புவியியல் | B.Sc. | M.Sc. | - | - |
| கணினி அறிவியல் | B.Sc. | - | - | - |

தொடர்புக்கு

முதல்வர், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
சந்நியாசி கரடு, நாமக்கல் - 637 002.

மின்அஞ்சல் : principal.aagacnkl@gmail.com
வலைத்தளம் : aagancnkl.edu.in

தொலைபேசி : 04286 266313
தொலைபேசி : 04286 266323

ஆல்பா, - 98431 09980.